சிவமயம்

# சிவகதிக்கு
# சீவ யாத்திரை

25 JUL 2000
12
129681
S 279
.504
வக



ஐம்பது ஆண்டுகளுக்கு முன்

## இந்துசாதனம்

பத்திரிகையில் பிரசுரமான

பத்துக் கட்டுரைகளின் தொகுப்பு

விக்கிரம வருஷம் ஆனி மாதம் 30ந் திகதி


14-07-2000

உ

சிவமயம்

# சிவகதிக்கு

# சீவ யாத்திரை



ஐம்பது ஆண்டுகளுக்கு முன்

## இந்துசாதனம்

பத்திரிகையில் பிரசுரமான

பத்துக் கட்டுரைகளின் தொகுப்பு

விக்கிரம வருஷம் ஆனி மாதம் 30ந் திகதி

14-07-2000

26 JUL 2000
CC
294.504

சிவமயம்

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளி விளக்குகளாய்த்
திகழ்ந்து
அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
எம்மை அரவணைத்து
நல்வழி காட்டி
இன்று
வானுறையும் தெய்வங்களாகிவிட்ட
எமது இனியவர்கள்
அமரர் செல்லையா இராமலிங்கம்
(சட்டத்தரணி, மல்லாகம்)
அமரர் (திருமதி) அருள்நாயகி இராமலிங்கம்
ஆகியவர்களுக்கு
எங்கள் பணிவுடன் கூடிய சமர்ப்பணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்.

சிவமயம்



சட்டத்தரணி
செல்லையா இராமலிங்கம் அவர்கள்
மலர்வு : 01–01–1911 உதிர்வு : 22–03–1991
திதி : பங்குனி பூர்வபக்க சப்தமி

திருமதி அருள்நாயகி இராமலிங்கம் அவர்கள்
மலர்வு : 04–05–1922 உதிர்வு : 22–06–2000
திதி : ஆனி அபரபக்க பஞ்சமி

" நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டு முலகு " — குறள் (994)

உ

சிவமயம்

# பதிப்புரை

சைவசமயிகள் ஆகிய நாம் ஒருவர் இறந்தவுடன் "சீவன் போய்விட்டது" என்கிறோம். சீவன் = ஆன்மா, உயிர். இச் சொல்வழக்கு ஆன்மா அழிவற்றது என்ற சைவசித்தாந்த உண்மையைச் சுட்டிக்காட்டி நிற்கிறது. ஆன்மா தன்னைப் பற்றி நிற்கும் மலங்கள் என்னும் தளையிலிருந்து விடுபட்டு, பேரின்பமயமான சிவனது அடியிணைகீழ் இருக்கும் பேறு கிடைக்கும்வரை, அது செய்யும் யாத்திரையின் போது பல "தங்குமடங்களில்" (உடம்புகளில்) தங்கி வினை செய்கிறது என்பது சைவசித்தாந்த அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்று.

சிவகதி பெறுவதே ஆன்மாவின் இறுதி இலக்கு. தனது யாத்திரையில் எத்தனையோ பிறவிகளை எடுக்கும் ஆன்மாவுக்கு மனிதப் பிறப்பே யாத்திரையை விரைவு படுத்த உதவக்கூடியது. விரைவு படுத்த உதவும் வாழ்க்கை நெறியே சைவ சமயம்.

சீவன் போதல் என்பது, ஆன்மா இதுவரை தரித்து நின்ற "தங்குமடத்தை" விட்டுத் "தேடிய தேட்டத்துடன்" (புண்ணிய பாவங்களுடன்) புறப்படுதலாகிய செயற்பாடு. அது இறைவனடி சேர்ந்து விட்டதா அல்லது இன்னுமோர் "தங்கு மடத்திற்குச்" செல்லவுள்ளதா என்பது நாம் அறிய முடியாததொன்று. சிவகதி அடையாத ஆன்மா தனது அடுத்த "தங்குமடத்தை"ச் சென்றடைய ஒரு குறிப்பிட்ட காலமெடுக்கும். அவ்விடைப்பட்ட காலம் எவ்வளவு என வரையறுத்துக் கூற முடியாது. ஆன்மா விட்டுச் சென்ற கூட்டைப் பஞ்சபூதங்களுடன் சேர்த்தல், ஆன்மாவுக்கு இருக்கக்கூடிய பிரேதத்தன்மையை நீக்குதல், பிரேதத்தன்மை நீங்கிய ஆன்மாவைச் சிவன் கழல் சேர்ப்பித்தல், அவ்வான்மா செய்யத் தவறிய நற்காரியங்களுக்காக சந்ததியினர் நிவாரணம் தேடல், ஆன்மாவுக்கு மேலும் பிறவியுண்டெனில் அது மீண்டும் ஒரு "தங்குமிடத்தை"த் தேடிக் கொள்ளும் வரை அதனுடைய தேவைகளுக்கு உதவுதல் போன்ற செயற்பாடுகள் "நீத்தார் கடன்"களாக சைவமக்களால் ஆற்றப்படுகின்றன.

தம்மை விட்டுப்பிரிந்த தம் அன்புக்குரியவரின் நினைவாக, இறந்தவரது பெருமையை அவரது உற்றார், உறவினர், நண்பர்கள் பாட்டிலே எழுதிவைத்தார்கள். இந்நினைவுச் சின்னம் கல்மேல் எழுத்துப்போல் என்றும் அழியாதிருக்க வேண்டுமென நினைத்து, இப்பாடல்களைக் ''கல்வெட்டு''என அழைத்தார்கள். இவை ''சமரகவி'' எனப்படுவதுமுண்டு.

இவ்வாறு ஆக்கப்பட்ட பாடல்கள் நிலைத்து நிற்பதில்லை என்பது உணரப்பட்டதால், நிலைத்து நிற்கக் கூடிய ஆக்கங்களை எம்மை விட்டுப் பிரிந்தோர் ஞாபகமாக வெளியிடும் மரபு இப்போ முளைகொண்டு வருகிறது. இம்மரபை அடியொற்றி வெளிவருவதே இந்நூல்.

நூற்றிப் பன்னிரண்டு வருடங்களாக வெளிவரும் ஈழத்துச் சைவ சமயிகளின் பத்திரிகையான இந்துசாதனம் சைவ சித்தாந்த அறிவுப் பரம்பலுக்கு முதல் ஆறு. ஏழு தசாப்தங்களில் ஆற்றிய பணி அளப்பரியது. அககாலகட்டத்தில் இப்பத்திரிகையில் வெளிவந்த சில ஆக்கங்கள் விலைமதிப்பற்றன. அவற்றை சைவ வாழ்வு வாழ விழைபவர்களுக்குக் கிடைக்கச் செய்வது உபயோகமுள்ள பணி எனக் கருதப்பட்டது,

இந்நூலிலுள்ள கட்டுரைகள் சைவ வாழ்வியலின் முக்கிய அம்சங்களை விளக்கி நிற்கின்றன. இதில் அடங்கியுள்ள பத்துப் கட்டுரைகளும் இந்து சாதனத்தில் முதல் ஆறு தசாப்தங்களில் வெளியானவற்றிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவை. இந்து சாதன வெளியீட்டாளர்களான யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினருக்கு எமது நன்றிகள்.

ஓரிரு கட்டுரைகள் கடும் சொற்புணர்ச்சிகளுடன் கூடிய பழைய தமிழ்நடையில் அமைந்திருந்தன. அவற்றில் இயன்றவரை சொற்களை வேறாக்கி வசனங்களைச்சிறிது இலகுவாக்கியுள்ளோம். குறுகியகால அவகாசம் அதனை முழுமையாகச் செய்ய இடந்தரவில்லை. இக்கட்டுரைகளை ஒரு சில தடவை திரும்பத் திரும்ப வாசிக்கின், அவற்றைச் சுவைக்க முடியும்.



இந்தக் கட்டுரைகளின் ஆசிரியர்கள் அனைவருமே சைவ ஒழுக்க நெறியில் வாழ்ந்த பெருமக்கள். இது இக்கட்டுரைகளுக்கு ஒரு விசேட பெறுமதியைத் தருகிறது.

சைவ வாழ்வின் முக்கிய அங்கம் இறைவழிபாடு. கடவுளைக் காட்டும் கண்ணாடி திருமுறைகள். ஆகவே திருமுறை அர்ச்சனை மாலையை இறுதியில் சேர்த்துள்ளோம். ''அர்ச்சனை பாட்டே'' என்பது இறைவாக்கு. இவ்வர்ச்சனை மாலை நித்தியவழிபாட்டிற்கு உதவவேண்டும் என்பது எமது அவா.

இவ்வாறான தொரு நூல் கர்மயோகியாக வாழ்ந்த அமரர் திரு. செல்லையா இராமலிங்கம் அவர்களதும் அவர்களுக்குத் துணையாயமைந்த திருமதி அருள்நாயகி இராமலிங்கம் அவர்களதும் நினைவாக வெளிவருதல் பொருத்தமானது என நம்புகிறேன்.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை வெளிக்கொணர உதவிய மகாத்மா அச்சக உரிமையாளருக்கும் அந்நிறுவன ஊழியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


''வையகம் துயர் தீர்கவே''

அன்பன்

பேராசிரியர் இ. குமாரவடிவேல்

பதிப்பாசிரியர்

யாழ்ப்பாணம்,
விக்கிரம ஆனி 30-ம் திகதி
14-07-2000.



## உள்ளே....


1. சைவசமயம் என்ற சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்களின் கட்டுரை சைவத்தின் முழுப் பரிமாணத்தையும் அதன் தனிப்பெருமையையும் சுட்டிக் காட்டி, சைவ அளவை நூல்கள் எவை, அவை விதித்த ஒழுக்க நெறி என்ன எனவிபரித்து, மனிதப் பிறவி எடுத்த ஆன்மா சைவ ஒழுக்க நெறியில் வாழ வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது. சைவ ஒழுக்க நெறி கைவர, ஆன்மாவின் சிவகதிக்கான ஆன்ம யாத்திரை முற்றுப் பெற்றுப் பேரானந்தமான சிவபதம் கிடைக்கும் என்பதை எடுத்து இயம்புகிறது.

—— பக்கம் (01 — 07)

2. சைவ ஒழுக்க நெறி கைவரப்பெறச் சைவப்பிள்ளைகளுக்குச் சிறுவயது முதலே சமயக்கல்வி ஊட்டப்படவேண்டும். சமயக்கல்வியூட்டலில் பெற்றோரின் பங்கு மகத்தானது. சிவனருட் செல்வர்களது சரித்திரத்தைக் கற்றலும் அவர்கள் அருளிய திருவருட்பாக்களை ஓதலும் சமயக் கல்வியின் முக்கிய அங்கம். உலகாயத சுகங்களை வேண்டாது அன்புடன் இறைவனைத் துதித்தலும் கும்பிடுதலுமே சமயக் கல்வியின் பயன். இவ்வாறான சமயக் கல்வியின் பயனால் விளையும் சிவகதி என்ற பயிருக்குச் சமய நூற் கல்வியும சமய நூல் உணர்ச்சியும் வேலியாக அமையும் என்கிறது சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களது சமயக் கல்வி என்னும் கட்டுரை.

——— பக்கம் (08 — 11)

3. வெவ்வேறு படிகளைத் தன்னுள் அடக்கி அகிலச் சமயமாக (Universal religion) விளங்கும சைவசமயம் ஒவ்வொரு படிகளுக்குமுரிய பயிற்சிகளையும் பயனையும விரிவாகக் கூறுகிறது. மனிதப் பிறவி எடுதத ஆனமா கடைப்பிடிக்க வேண்டிய சைவப்பயிற்சிகளான விரத அனுட்டானம், விபூதி தரித்தல், திருவைந்தெழுத்து ஓதல், சிவாலய வழிபாடு, திருவுருவ வழிபாடு போன்றவற்றின் முக்கியத் துவத்தையும் பயனையும் எடுத்துக் கூறுகிறது சைவப் பெரியார் திருமயிலை சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவாகளது சைவப் பயிற்சிகள் எனும் கட்டுரை.

.. —...பக்கம் (12 — 28)

4. "அறியாமைப் பிணிப்பை அவிழ்த்து அறிவை மலர்வித்து அன்பைக் கமழச் செய்யும் சமயக் கலையுணர்வே முழுநிலை பெற்ற இறவாத அன்பை எமக்குத் தரும்" எனக்கூறும் "அன்பே வாழ்க்கையின் பயன்" என்ற பெரியார் வச்சிரவேலு முதலியார் அவர்களது கட்டுரை "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" எனும் திருமூலர் திருமந்திரக் கூற்றிற்குள் மிக ஆழமாகச் செல்கிறது.

—— .. பக்கம் (29 — 38)

5. உருவ வழிபாடு அவசியம் தானா என்ற வினாவை எழுப்பி, "கோவில்கள் பக்தி மார்க்கத்தின் தூண்டு கோல்கள். விக்கிரக வழிபாடு நம்மிடத்திலுள்ள தன்னல மற்ற உயர்ந்த பக்தியை உண்டு பண்ணுவதற்காகவே" என்பதை உருவ வழிபாடு என்ற தமது ஆக்கத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ணானந்த சுவாமிகள் விளக்குகிறார்.

—— ... பக்கம் (39 — 41)

6 இக்கலியுகத்தில், பக்தி மார்க்கமே கடைப்பிடிக்க உகந்தது. அதற்கு உதவ எமக்குத் தரப்பட்ட மாபெரும் சொத்து தமிழ் வேதமாகிய திருமுறைகள். திருமுறைகள் தாம் கடவுளைக் காட்டும் கண்ணாடி என்கிறார் மயிலைக் கிழார் இளமுருகனார்.

— ...பக்கம் (42–44)

7. பிறவி எடுத்த ஆன்மா தான் உயிர்வாழப் பல கருமங்களை ஆற்றவேண்டியுள்ளது. இறைவழிபாடு எமது நாளாந்தக் கருமங்களை ஆற்றத் தடையாக இருக்கிறதா? கருமங்களா இறைவழிபாட்டிற்கா முக்கியத்துவம்? என்ற வினாக்களுக்கு விடை தருகிறார் கருமமும் கடவுள் வழிபாடும் என்ற கட்டுரையில் M. P. தியாகராஜன் அவர்கள்.

...——பக்கம் (45–48)

8. பிறவி எடுத்த ஆன்மா சிவகதிக்குத் தகுதிபெற்ற பின்னும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கலாம். திருமூலர் முதல் சிவயோக சுவாமிகள் வரை இவ்வாறு சீவன் முத்தராய் வாழ்ந்து நமக்கு அருளுபதேசம் செய்தோர் அநேகம். சீவன் முத்தர் யார், அவர்களது இலக்கணங்கள் என்ன என்பவற்றை விளக்குகிறார் ஸ்ரீ டி. ஆர். இராமநாத சாஸ்திரி அவர்கள்.

——...பக்கம் (49 — 51)

9. சமயக் குரவர்கள் நால்வருள்ளும் எம்மிற் பலரும் பின்பற்றக்கூடியவொரு வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர் அப்பரடிகள். இளமையில் துன்பங்களைச் சந்தித்து, மதம் மாற்றப்பட்டு, புறச்சமயக் கல்வியூட்டப்பட்டுப், பின்னர் உண்மையை உணர்ந்து, சைவத்துக்கு மீண்டும் வந்து எண்பதோராண்டுகள் வாழ்ந்து எமக்கு வழிகாட்டித் தனது அனுபவங்களை வாரி வழங்கியவர் அடிகள். சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளிய திருத்தொண்டத்தொகையிலே அப்பரை எமக்குத் "திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கரையன்" என அறிமுகம் செய்கிறார். சுந்தரர் தேர்ந்தெடுத்த திருநின்ற செம்மை என்ற சொற் கோர்வையின் கருத்தாழத்தை ஆராய்ந்துள்ளார் வித்துவான் க. வெள்ளைவாரணார் அவர்கள். "திருநின்ற செம்மையே செம்மை"யாக் கொண்டு வாழ முயற்சிப்போமாகில் சிவகதி நோக்கிய சீவயாத்திரை விரைவு படுத்தப்படும் என்பது இக் கட்டுரையிலிருந்து பெறப்படும்.

பக்கம் (52 – 61)

10. திருவாசகத்தை ஓதச் சந்தர்ப்பம் தரும் மனிதப்பிறவி கிட்டுமாயின் எத்தனை தடவை அவ்வாறான பிறவிவருகினும் சந்தோஷத்துடன் ஏற்றுக்கொள்ளலாம். அத்துணைச் சிறப்பு வாய்ந்தது திருவாசகம். திருவாசகம் காட்டும் சீவயாத்திரையைச் சித்தரிக்கிறது "சித்தாந்தம்" என்ற தமிழகச் சஞ்சிகையில் வெளிவந்து இந்துசசதனத்தால் மறுபிரசுரம் செய்யப்பட்ட கட்டுரை.

— பக்கம் (62–70)

11. மந்திரங்கள் பதினொன்று. அதுபோல இந்நூலின் பதினோராவது அம்சமாகச் சேர்க்கப்பட்டுள்ளது திருமுறை அர்ச்சனை மாலை. ஒவ்வொரு சைவசமயியாலும் தினசரி வழிபாட்டிற்கு உபயோகப் படுத்தப்படவேண்டிய பாமாலை இது. "அர்ச்சனை பாட்டேயாகும்" என்பது சிவவாக்கு.

— (பக்கம் 71–83)



# பிழை திருத்தம்

கட்டுரைகளை வாசிக்குமுன் தயவுசெய்து பின்வரும் அச்சுப்பிழைகளைத் திருத்தம் செய்து கொள்க.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 5 | ஒப்புக்கொள்ளப்படட | ஒப்புக் கொள்ளப்பட்ட |
| 6 | 21 | வலிமையில. | வலிமையில் |
| 17 | 16 | இரும்புலக்கையால | இரும்புலக்கையால் |
| 19 | 5 | அவர் | அப் |
| 20 | 4 | ஆகரித்தது | ஆதரிப்பது |
| 20 | 20 | காலகாலங்களிலே | காலாகாலங்களிலே |
| 20 | கீழிருந்து 2 | வண்பால் | விண்பால் |
| 21 | 9 | செய்வாயின் | செய்வாயாயின் |
| 22 | 18 | புனிமாக்கத்தக்கவை. | புனிதமாக்கத் தக்கவை. |
| 24 | கீழிருந்து 6 | சிந்தித்தல் காலும், | சிந்தித்தல் சாலும்; |
| 25 | 14 | கோடாது | கோடாநு |
| 28 | கீழிருந்து 5 | கற்காலமாம். | நற்காலமாம். |
| 30 | 24 | இனி, | இனி |
| 31 | 14 | சமயம் | சமய |
| 33 | 7,8 | மெய்ச்சமயந்தான் | மெய்ச்சமயத்தால் |
| 33 | 10 | இயையுபற்றி | இயைபுபற்றி |
| 33 | 14 | சமயம் | சமயமோ |
| 35 | கீழிருந்து 6 | உரியதாய | உரியதாய் |
| 36 | 1. | தவப்பயனாயத் | தவப்பயனாய்த் |
| 36 | 21 | ஒருவனிதையிடத்து | ஒரு வனிதையிடத்து |
| 39 | கீழிருந்து 7 | வரமுடியாது | வரமுடியாது. |
| 40 | 3 | போடித் | வேடித் |
| 43 | 1 | வைப்பதுண்டு, | வைப்பதுண்டு. |
| 43 | 2 | மூர்த்திகளை | மூர்த்திகளைத் |
| 43 | கீழிருந்து 1 | நீன் | நீள் |
| 44 | 6,7 | காடுமா ! | காட்டுமா ? |
| 45 | 8 | மனககுழப்பம் | மனக்குழப்பம் |

| | | | |
|---|---|---|---|
| 46 | 16 | மறுத்தது. | மறுத்தது |
| 48 | — | பத்தியிலிருந்து | பக்தியிலிருந்து |
| 49 | 9 | பலயோகிகள் | பல யோகிகள் |
| 50 | 21,22 | நீர்விகல்பம் | நிர்விகல்பம் |
| 51 | 15 | முன்று | மூன்று |
| 52 | 3 | செம்மையாகக் | செம்மையாக் |
| 53 | 15 | உலகியற் | உலகிமற் |
| 60 | 13 | எஊத் | எனத் |
| 60 | 16 | புருந்தாய் | புகுந்தாய் |
| 60 | கீழிருந்து 5 | தால்'' | தால் |
| 63 | கீழிருந்து 10 | நாது | நான் |
| 64 | 13 | வேறுண்டு | வேறுண்டு |
| 64 | கீழிருந்து 6 | புயங்களே! | புயங்கனே! |
| 66 | 21 | ஆவா ! | ஆ ! ஆ ! |
| 66 | 26 | குறைகடல்வா | குரைகடல்வா |
| 67 | 1,2 | இவ்வதுபவ | இவ்வநுபவ |
| 67 | 6 | மல்றும் | மன்னும் |
| 67 | 9 | வேளை | வேளை |
| 67 | கீழிருந்து 5 | ஒட்டி | ஒட்டி |
| 67 | கீழிருந்து 3 | தயாவானன் | தயாவான |
| 69 | கீழிருந்து 6 | வைநயிகர் | வைதானிகர் |
| 69 | கீழிருந்து 2 | புகவேண்டா | புகவே வேண்டா |
| 70 | 11 | ஜரியன் | கரியன் |
| 70 | 12 | சூழப்போகிர் | சூழப்போகீர் |
| 70 | 14 | ஆளுவோம் | ஆள்வோம் |
| 70 | கீழிருந்து 4 | கிளங்கவேண்டா | கிளக்கவேண்டா |
| 81 | கீழிருந்து 7 | மழனத் | பழனத் |
| 84 | கீழிருந்து 2 | வீடவேண்டும | வீடவேண்டும் |

உ

சிவமயம்

# சைவ சமயம்

— சிவக்கவிமணி C. K. சுப்பிரமணிய முதலியார் —

## சைவம் — I உணவு நிலை

சைவம் என்ற சொல்லின் பொருளினையும் அது வழங்கு மாற்றையும் விசாரிக்குமிடத்துப் பல உண்மைகள் கிடைக்கின்றன. முதலில் புலாலுண்ணாது தூய உணவே உட்கொள்ளும் நிலை சைவம் எனப் பரந்து வழங்கப்படுகின்றது. இது சைவரல்லாத பிறருள்ளிட்டு யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உலக வழக்காகும். இதன் அடிப்படையாவது சைவம் என்ற கட்டடம் சிவ காருண்ணியம் என்ற அடிநிலையின்மேற் கட்டப்பட்டுள்ளது என்பதாம். நாங்கள் சைவர். சைவச் சாப்பாடு என்ற வழக்குக்கள் காண்க.

இனிச் சைவம் என்பது இதனோடு நின்றுவிடுமோ? நின்று விடாது. அவ்வாறு நின்றுவிடின் அது சாப்பாட்டுச் சைவம் என்றொழியும். இது சைவ ஒழுக்கத்தின் இன்றியமையாத தொடக்க நிலையேயன்றி, முடிந்த நிலையாகாது. சிலர் கண்ணப்பர், அதிபத்தர் முதலிய பெரியோர் சரிதங்களைக் காட்டிப் புலாலுண்ணாமை சைவத்திற்கின்றியமையாத தொன்றன்று; புலாலுண்ணலும் சைவத்திற் கூடும். என்று வாதிடுவர்; அவை வேறு நிலை. அவை உலகிறந்த நிலைகளாதலின் ஈண்டைக்கு எடுத்துக் காட்டலாகாவென்று விடுக்க.

## சைவம் — II சமய நிலை

இனி, சைவம், வைணவம், சமார்த்தம், பௌத்தம் முதலாகச்
சமய நிலைகள் வகுக்கப்படுதலின் அவற்றுள் ஒரு சமயம் சைவம்
என்பது மற்றொரு வழக்கு. ஓரளவில் அஃதுண்மையேயாயினும்
ஏனையன போலச் சைவம் ஒரு சமயம் என்பது சைவத்தின்
முழுமை நிலையினைக் காட்டாது.

சமயம் என்ற சொல் நன்றாகச் செய்யப்பட்டது எனும்
பொருள்படும் என்பர்; மனிதர்க்குச் சமய உணர்ச்சி - சமய
ஒழுக்கம் - வேண்டுமா? என்றால், இந்நாளில் அது வேண்டப்
படுவதின்று; அது மக்களைப் பேதப்படுத்தி நிலைகுலையச் செய்
கின்றது. அதனை அறவே அகற்றினாற்றான் நாடு உய்யும்
என்று கூவுவார் பலர். சமயவுணர்ச்சியே மனிதனை மனிதனாக்கு
வது என்பது அறிஞர் கருத்து. உடம்பளவாய் ஒழிந்த
வாழ்க்கையே வாழ்ந்த மனிதனை, உடம்புக்குள் உயிர் என்று
ஒரு பொருள் வேறாக உண்டு, அதைப்பற்றி ஆய்ந்து அதன்
நல்வழியை நாடி நடப்பதே மக்களுக்கு உயர்ந்த கடமை என்று
காட்டுவது சமய உணர்ச்சியாகும். உடம்பு வாழ்வே போதும்-
உயிர் வாழ்வு வேண்டாம் - என்று கொள்ளும் மாக்கள் தாம்
சமய உணர்வும் வாழ்க்கையும் வேண்டுவதின்று என்பர். இவ்
வாறு வரும் சமயங்கள் மக்களின் அறிவு முதலிய பக்குவபேதங்கள்
பற்றிப் பலதிறப்படுவன. "சைவ முதலாம் அளவில் சமயமும்
வகுத்து" என்றார் தாயுமானார். "சமய கோடிகள்" என்றபடி
சமயங்கள் அளப்பில்லாதன. அவை அத்தனையும் வேண்டப்படு
வனவே. ஏன்? மக்களின் பக்குவ பேதங்களும் அளவில்லாதன
வாதலின், ஒரு பள்ளிக்கூடத்திற் பல வகுப்புக்கள் இருத்தல்
போலச் சமயங்களும் பலவாம். இவற்றின் படிமுறையினைக்
கண்டாற் சமயப் போராட்டம் நிகழாது. இனி இச் சமயங்களுக்
கெல்லாம் தலையாய் நிற்பது சைவசமயம். "சைவ சமயமே
சமயம்" என்றார் பெரியோர். இது தன்னபிமானம் பற்றி
எழுந்ததன்று. சமயத்தினை ஆராய்தல் வேண்டுமாயின் அவ்
வாராய்ச்சி அதன் அளவை நூல்களானும் அளவைகளால்
நிறுவிக் காட்டப்படும் உண்மைகளானும் அவற்றாற் பெறுவிக்கப்
படும் கடவுளிலக்கணத்தானும், உயர்ந்தநிலை பெறுதற்கு விதிக்
கும் சாதனங்களானுந்தான் முற்றுப்பெறும். இவ்வாற்றாலே சைவ
சமயம் ஏனைச் சமயங்களுள்ளே தலைசிறந்தது என்பது நாட்டப்



படும். இவ்வுண்மை திருவருளாலும் குருவருளாலுமே உயிர்களின்
பக்குவ நிலைக்கேற்பப் பெறப்படும்.

செய்வினையுஞ் செய்வானு
  மதன்பயனுஞ் சேர்ப்பானும்
மெய்வகையா னான்காகும்
  விதித்தபொரு ளெனக்கொண்டே
"இவ்வியல்பு சைவநெறி
  யல்லவற்றுக் கில்லை" யென
உய்வகையாற் பொருள்சிவனென்
  றருளாலே யுணர்ந்திருந்தார்."

— *சாக்கியநாயனார் புராணம் 5*

என்று வரும் திருவாக்குக் காண்க. இது சைவத்தின் சமயநிலை.

## சைவம் — III சமயாதீத நிலை

ஆயின் சைவம் இதனுடன் அடங்கி நிற்குமோ எனின்,
நில்லாது. "மேற்சமயங் கடந்த மோனசமரசம் வகுத்த நீ"
என்ற தாயுமானார் வாக்கு ஈண்டுக் கருதற்பாலது; சைவ சமயமே
சமயம் என்ற பெரியார், அதன்பின் "சமயாதீதப் பழம்
பொருளைக், கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டு மிந்தக்
கருத்து" என்றார். எனவே சைவம் என்பது சாப்பாட்டுச்
சைவத்துடனில்லாது; சமயச் சைவத்துடனும் நில்லாது, சமயங்
கடந்த நிலை கொண்டது சைவம் என்பது மூன்றாவதாகக் காண
வேண்டிய பொருள். எந்நிலையினின்றாலும் எக்கோலங் கொண்
டாலும் மன்னிய சீர்ச் சங்கரன்றாள் மறவாமை பொருளென்றே
துன்னியவேடந் தன்னைத் துறவாதே தூயசிவந் தன்னை மிகு
மன்பினான் மறவாமை தலை நிற்பார். ( சாக்-புரா. 6 ) என்பது
இந்நிலையினை விளக்குதல் காண்க.

## சைவம் — IV எல்லாம் தன்னுள் அடங்கிய நிலை

இனி, இவற்றின் மேலாய் நான்காவதாக மற்றொரு கருத்
தினாற் பெறப்படும் சைவமும் உண்டு. அஃதாவது சைவம்
எல்லாவற்றையும் தன்னுள் அடக்கிய முழுமை நிலை கொண்டு
தான் வேறொன்றிலுமடங்காத நிலைபெற்றது என்பதாம். ஒரு
ரூபாயினுள் ஒரு சதம், 5 சதம், 10 சதம், 50 சதம் எல்லாம்
அடங்கும். ரூபாய் இவை ஒன்றிலுமடங்காதது; தலை, கை,

கால் முதலிய அவயவங்கள் உடல் என்ற முழுமையினுள் அடங்குவன. ஆனால் முழு உடல் அவற்றுளொன்றினும் அடங்காதது என்பன போலக் கண்டுகொள்க. புறப்புறம், புறம், அகப்புறம், அகம் எனப் பகுக்கப்படும் எல்லாச் சமயங்களும் சைவத்தில் ஒவ்வோர் படிமுறையினுள் அடங்குவனவேயாம் என்பதை ஞான நூல்கள் வகுத்துக் காட்டுவன. "எல்லாஞ் சிவனென நின்றாய் போற்றி" முதலிய திருவாக்குக்கள் காண்க. ஆளுடைய பிள்ளையார் திருத்தெளிச்சேரியினை வணங்கிச் செல்லும் வழியில் புத்தர்கள் வந்து எதிர்த்துச் சமயவாதம் புரிந்து தோல்வியுற்று அவரது திருவடிகளில் வணங்கினர். "அன்று அவர்க்குக் காழியர்கோன் கருணை நோக்கமலர் தலினால் அறிவின்மையகன்று நீங்கி"ச் சைவரானார். அப்போது பிள்ளையார் "எங்கு நின்றனவுஞ் சரிப்பனவும் சைவமேயாம் நிலைமை யவர்க்கருள் செய்தார்" (திருஞான-புராணம் 926) என்ற வரலாறு இங்குக் கருதற்பாலது. சாக்கியநாயனார் துன்னிய வேடந் தன்னைத் துறவாதே சைவத்திறத்தில் ஒழுகிய கருத்துமிது. "மெய்ம்மையும் பொய்ம்மையு மாயினார்க்குச், சோதியுமாயிருளாயினார்க்குத் துன்பமுமா யின்பமாயினார்க்குப், பாதியுமாய் முற்றுமாயினார்க்குப், பந்தமுமாய் வீடுமாயினார்க்கு" (திருப்பொற்-20) என வரும் மணிவாசகப் பெருமானார் திருவாக்கு இக்கருத்தினை எடுத்துக்காட்டுவதாம்.

இந்நால்வகைச் சைவத் திறத்தின் பொருள்களையும் மனங்கொண்டாற் சைவத்தின் தனிப்பெருமை விளங்கும். அதுவேயுமன்றிச் சமயப் பிணக்குகளும் ஒழியும். இனி இவ்வாறு வரும் சைவர்கள் உள்கொள்ள வேண்டிய இன்றியமையாத கருத்து ஒன்றுண்டு.

## சைவர்கள் உட்கொள்ளும் கருத்து

அது சைவ அளவை நூல்கள் யாவை என்பதாம். அவை வேத சிவாகமங்களும் சைவத்தெய்வத் திருமுறைகள் பன்னிரண்டும், மெய்கண்ட நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கும் வேத சிவாகமங்களின் உண்மைகளை விளக்கி உபகரிக்கும் இதிகாசங்களும் மாபுராணங்களுமாம். இவ்வுண்மையினை மனங்கொள்ளாவிடில் பல விபரீதங்களுக்கும் அபாயங்களுக்கும் இடம் உண்டாகும், தமிழ் - வடமொழிச் சண்டை;



பிராமணன் - பிராமணனல்லாதான் என்ற பூசல்; வகுப்புப் போராட்டம். வடவன் திராவிடன் முதலிய அரசியற் பிணக்கு முதலிய உலகநிலைத் துன்பங்களெல்லாம் இவ்வுண்மையினை யன்றி உணர்ச்சியில் வைக்கவே ஒழிந்துபோம். வழிவழி என் முன்னோர் அறிவிலிகள். நான் ஒரு முட்டாட் பரம்பரையிற் பிறந்தவன் என்று சொல்லிக்கொள்ள எந்த உண்மைத் தமிழனும் துணியான். சைவப் பிரமாண நூல்களைப் பற்றி நமது சைவத் தெய்வத் திருமுறைகள் பேசுவனவற்றை ஒப்புக்கொள்ளாதவன் சைவனாகான். "அவன் யாரோ? அறியேன்" என்றுதான் சொல்லத் துணிவேன். "வேதத்தைவிட்ட அறமில்லை; ——— வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே" எனவும்

"அண்ணலருளால் அருளுஞ் சிவாகமம்" எனவும்

"சிந்தை செய்தாகமம் செப்பலுற்றேனே" எனவும்

திருமந்திரத் திருவாக்குகள். "சடையார் தாந்தந்த ஆகமப் பொருளை மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினாற் றமிழ் வகுப்ப" (புரா. 23) என்றதனால் சிவாகமங்களின் பொருளையே திருமூலர் வகுத்துரைத்தனர் என்பது பெறப்படும். தேவாரத் திருமுறைகள் சிவன் திருவாக்கேயாம் என்பது "எனதுரை தனதுரையா", "மெய்ம்மொழி வானிழல் கூறிய பொருளின்" என்பனவாதி அகச் சான்றுகளால் இனிது விளங்கும். சிவரகசியம், மாபாரதம்; இராமாயணம் முதலிய இதிகாசங்களின் பொருளை எடுத்தாண்ட திருவாக்குக்களால் அவையும் சைவப் பிரமாண நூல்கள் என்பது பெறப்படும்.

"வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்தளித்தான்"
(தேவா)

"சனிபுதன் ஞாயிறு வெள்ளி திங்கட் பலதீயன
முனிவன செய்துதந்தானை வென்றவ் வினைமுடிட
இனியருணல்கி டென்றண்ணல் செய்தவிரா மேச்சரம்"
"தேவியை வவ்விய தென்னிலங்கைத் தசமாமுகன்
பூவிய லும்முடி பொன்று வித்தபழி போயற
ஏவிய லுஞ்சிலை யண்ணல் செய்தவிரா மேச்சுரம்"
"பாசமுங் கழிக்க கில்லா வரக்கரைப் படுத்து"
"மெய்சொல்லா விராவணனை மேலோடி யீடழித்துப்
பொய்சொல்லா துயிர்போனான் புள்ளிருக்கு வேளூரே"

முதலிய திருவாக்குக்கள் காண்க.

இனி, வேத உப பிருங்கணங்களாகியவை பதினெண் மாபுராணங்களாம் என்பது "வேதமுதல்வன் முதலாக விளங்கி வையம், ஏதப்படாமை யுலகத்தவரேத்தல் செய்யப், பூதமுதல்வன் முதலே முதலாப் பொலிந்த, சூதனொலி மாலையென்றே கலிக்கோவை சொல்லே" (திருப்பாசுரம்) என்ற இடத்துப் "பதினெண் புராணங்களென்றே ஓதென்றுரை செய்தனர்" (புரா. 841) என்று சேக்கிழார் பெருமான் உரை காட்டியருளியவாற்றாற் காணப்படும்.

## சைவர் மேற்கொள்ளும் ஒழுக்கம்

முன் கூறியவாறு சைவப் பிரமாண நூல்களால் ஒரு தலைவர் உண்டு. உயிர்கள் உண்டு. இரண்டு வகையும் அறிவுடையோராயினும் தலைவர் என்ற கடவுள் முற்றறிவுடையர். அறிவிக்காமலே அறிபவர். உயிர்கள் சிற்றறிவுடையோர் : அறிவித்தாலறியும் இயல்புடையவர் ; ஆனால் விரிந்த அறிவுபெறும் இயல்புடையவை; அவ்வாறு பெறக்கூடிய அவற்றின் அறிவைச் சுருக்கி வைத்திருப்பது அவைகளைக் கட்டி நிற்பதாகிய இருள் வடிவமான ஆணவமலம். அது மிகக்கொடியது. அதன் வலிமையை நீக்கிப் பேரறிவைப் பெறுவதே உயிர்களின் நோக்கமாயிருத்தல் வேண்டும். அதனைப் பெறுவதே மலக்கட்டினின்றும விடுபடும் வீடு எனப்பெறும். இதனை அவை தாமாகச் செய்துகொள்ளும் வலிமையில். அதற்குக் குருவருளும் திருநீறும் கண்டிகையும் ஸ்ரீ பஞ்சாக்கரமுமாகிய சாதனங்கள் இன்றியமையாதன. இவற்றைக் கைக்கொண்டு சரியை முதலிய நெறிகளில் நின்றால் பாச விடுதி பெற்றுத் தலைவரை அடைந்து உயிர் துன்பங் கலவாத இன்பத்தில் இடையறாது நின்று முதல்வனது ஆனந்தத்தில் மூழ்கி மீளாது நிற்கும் என்று இன்னோரன்ன உண்மைகளை நாம் காணலாம். கண்டபோது இதற்கு மாறாகிய நிலைகளும் சமய நிலைகளும் வெறும் பொய்யென்றும் வீண் என்றும் நன்கு விளங்கும். விளங்கவே அவற்றைவிட்டுச் சைவ நூல் விதித்த நெறியொழுக்கத்தில் ஊன்றி நின்று பயன் பெறுவோம்.

'மாசிலாத மணிதிகழ் மேனிமேற் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்" (புரா) என்றபடி உள்ளும் புறம்பும் தூய வாழ்க்கை வாழ்வோம். திருநீறு எப்போதும் எங்கள் நெற்றியினையும்



மேனியினையும் அணிசெய்யும். விலையில்லாத திருநீற்றினை விட்டு விலை கொடுத்து வினையை வாங்குவதுபோலப் பற்பல வாசனைப் பண்டங்கள் இப்போது விருப்பாயிருப்பன அப்போது வெறுப்பாய்விடும். "பூசின மாசாம்" (பட்டினத்தார்) அக்கமணி இடைவிடாது, மங்கலப் பெண்களுக்குத் தாலிபோல, எங்கள் கழுத்தில் தங்கும் ; கடிகாரம், பணச் சிறுபை, மைப்பேனா முதலிய பாசப் பண்டங்களை விடாது தாங்கிச் சுமந்து திரிகின்ற நாம், திருநீற்றுப் பை ஒன்றினையும் அவற்றுடனே எப்போதும் தாங்கிச் செல்வோம். வெற்றுரையாடியும், விளையாடியும் காலம் போக்கேம். சிவன் புகழையும் அடியார் புகழையும் உன்னி உன்னிப் பன்னிப் பன்னிப் பேசுவது எங்களுக்கு விருப்பந் தரும். நாணாளுஞ் சிவன்கோயில் சூழ்தலால் எமது உடலும் கால்களும் உரம்பெறும். சிவன்கோயிலில் விளக்கிடுதல் — திருமுற்றம் தூய்மை செய்தல், பூமாலை தொடுத்தல், போன்ற தொண்டுகள் செய்வோம். சிவனுக்காகப் பூமரஞ் செடிகொடிகளை வைத்து வளர்ப்போம். சிவனடியார்களைக் கண்டபோது அவர்களை எமது உற்றாரிலும் பெரிது பேணி அகமகிழ்ந்து உபசரிப்போம். "மறப்பித்துத் தம்மை மலங்களில் வீழ்க்குஞ், சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வை, மறப்பித்துப் பத்தரினத்தாய்" என்பது ஞான நூல். சிவன் அடியார்களையும் சிவாலயத்தையும் சிவனெனவே கண்டு வழிபடுவோம். இவையல்லாத உலக வாழ்க்கைத் தொடர்ச்சிகள் யாவும் எமக்கு வீணானவை என்ற உணர்ச்சியுண்டாகும். உலகியற் போர், அரசியற் போர் முதலிய போராட்டங்களில் எங்கள் விருப்பம் செல்லா.

இவ்வாறு உள்ள நிலைகள் வந்து நிலைபெறும்படி மேற்கொண்டு ஒழுகுவோமாகில் முன்கூறிய சைவ ஒழுக்கம் கைவரப்பெற்று நாம் சிவானந்தம் பெறுகச் சிவனுக்காளாகி, மீளா நெறியில் வாழ்வுபெறுதல் உறுதி.

உ
சிவமயம்

# சமயக் கல்வி

சைவப்பெரியார்
— திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A —

எதைப் படித்தாலும் அந்தப் படிப்பின் முக்கிய நோக்கம் 'கடவுளை வழிபடுதல்' என்பது மெய்ஞ்ஞானிகளது போதனைகளாம். இலக்கணத்தையாயினும், இலக்கியத்தையாயினும், சரித்திரத்தையாயினும், பூமி சாத்திரத்தையாயினும், கணித நூலையாயினும், பௌதிக நூலையாயினும் எதையாயினும் முறைப்படி படித்தால் அது கடவுள் வழிபாட்டுக்குக்கே வழியாகும் என்பது அவர்கள் அநுபவத்தாலறிந்த உண்மை. திருவள்ளுவநாயனார் "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் நற்றாள் தொழா ரெனின்" என்றனர். "யாமோதிய கல்வியும் எம்மறிவும், தாமே பெற வேலவர் தந்ததனால்" என்றார் அருணகிரிநாதர். "கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை" எனத் திருவிசைப்பாவிலும், "கற்றவர் தொழு தேத்தும் சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி" எனத் தேவாரத்திலும் கூறியன இதனை வலியுறுத்தும்.

எதைப் படித்தாலும் அதன் இறுதிப் பயன் கடவுளை வழிபடுதலாதலால் சமயத்தைப் படித்தலின் பயன் கடவுளை வழிபடுதலென்பதை எவர்களும் தடையின்றி ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆதலாற் சமயப் படிப்புக்கு உயிராயிருப்பது மிகுந்த அன்போடும், ஆர்வத்தோடும், முறைப்படி கடவுளை வழிபடுதலாம். அன்பு நிறைந்ததாய், முறையானதாயுள்ள கடவுள் வழிபாடு ஒருவருக்குச் சித்தித்துவிட்டதாயின், அதன் மேல் அவருக்குச் சமயக்கல்வி தேவையில்லை. நான் சிறுவனாயிருந்த காலத்திலே எங்களுக்குப் பெற்றோர்கள் ஊட்டிய சமயக்கல்வி, ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போதலேயாகும். அவர்கள் ஒவ்வொரு நாளும் கோயிலுக்குப் போகிறவர்களாதலால் நாங்களும் ஒவ்வொரு நாளும் தடையின்றிக் கோயிலுக்குப் போனோம். தினமும் கோயிலுக்குப் போகிறவர்கள் அந்தக் காலத்தில் மிகுந்த அன்போடு கடவுளை வணங்கினார்கள். அதனாலே நாங்களும் அன்போடு வணங்கினோம். நாத்திகர், கிறிஸ்துவர் முதலியவர்களது செல்வாக்குக்குள் நாம் அகப்பட்ட காலத்திலே, இந்தக் கடவுள் வழிபாட்டுப் பயிற்சியானது அவற்றினாலே தாக்கப்படாமல் எம்மைக் காக்கத் தக்கதாயிருந்தது. சமயக் கல்வியின் முதலும், நடுவும், இறுதியும் அன்போடு முறைப்படி கடவுளை வழிபடுதலேயாம். கடவுளை முறைப்படி வழிபடுதலாவது, பிச்சைக்காரனைப் போலப் போய்க் காசுதா, காணிதா, படிப்புத்தா, நோயைத்தீர், பகையைத்தீர் என்று கேளாமல், அவருடைய அன்பனாகப் போய், அவரைத் துதித்துக் கும்பிடுதலேயாகும்.

இந்த அன்பு பெரும்பாலும் பின்பற்றலால் வருவதால், சிவனடியாரது சரித்திரங்களைக் கற்றலும், கேட்டலும் இதை வளர்த்தற்கு இன்றியமையாதவைகளாம். ஆதலால், பெரிய புராணம், மாணிக்கவாசகர் சரித்திரம், பட்டினத்தார் சரித்திரம், தாயுமானவர் சரித்திரம், சேக்கிழார் சரித்திரம் முதலியவற்றுட் சிலவற்றையாயினும் கற்றுக்கொள்ளுதல் சமயக் கல்வியின் முக்கியமான அங்கமாகும். அவர்களுடைய சரித்திரங்களேயன்றி அவர்களுடைய பாடல்களும் சிவநேசத்தையும், சிவவழிபாட்டையும் ஓங்கச் செய்வன. அவர்களுடைய பாடல்களிலே சிவபிரானுடைய திருவருள் நிறைந்திருக்கிறது. இதனாலே அப்பாடல்களுக்குத் "திருஅருட்பா" என்று பெயர். சிவபெருமானை நிறைந்த அன்போடு வழிபட்டால் உடலும் மனமும் எப்படி இருக்குமென்பதை மணிவாசகப்பெருமான்,

"மெய்தானரும்பி விதிர்விதிர்த்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்

பொய்தான் தவிர்ந்துன்னைப்
போற்றி சயசயபோற்றி என்றும்
கைதானெகிழவி டேனுடையா
யென்னைக் கண்டுகொள்ளே''

என்னும் திருவாசகத்திலே சொல்லியருளினர். அப்படி வழிபடும் பொழுது அவரிடத்திலே ஒரு பொருளையும் யாசிக்கக் கூடாதென்பதும், எமக்கு வேண்டியவை அவரது அடியார்களுடைய நட்பும், அவர்மேலுள்ள சிந்தனையுமே என்பதை.

'' கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்லால்
நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே
இருக்கப்பெறி னிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னை
யல்லா தெங்களுத்தமனே ''

என்றும் அடுத்த திருவாசகத்திலே பாடியருளுகிறார். '' நீ தேவேந்திர பதவியைத் தந்தாலும் நான் ஏற்கமாட்டேன்'' என்பவர் அவருடைய திருவடியையல்லாமல் வேறெதை விரும்புவர்? இப்படியான பாடல்கள் எங்களுக்கு நல்லறிவை ஊட்டுமளவோடு நில்லாது சிவநேசத்தையும் வளர்த்துக் கொண்டிருக்கும்.

பயிரைக் காத்தற்கு வேலியடைப்பது போலச் சிவ வழிபாட்டினாலும் சிவனடியாரது சரிதைகளைச் சிந்தித்தலாலும், திருவருட்பா ஓதுதலாலும் விளைகின்ற சிவகதியாகிய பயிருக்கு வேலியாகச் சமய நூல்களைக் கற்றலும் வேண்டும். எங்களுடைய உண்மையான நிலையை நாமுணர்ந்தால் எங்களுடைய சிறுமையும், பலவீனமும், தீவழிச் சார்பும், எங்களுக்கு ஒரு பெருந்துணை இன்றியமையாததென்பதும் புலப்படும். கடவுளைப் பற்றி நாமறியும்போது அவருடைய பெருமையும், அநந்த சத்தியும், பேரருளும், அவரே மெய்த்துணை யென்பதும் புலப்படும். இப்படியாகச் சமய நூலுணர்ச்சி எங்களுடைய உண்மையான நிலையை விளக்கிக் கடவுட் பற்றையும் கடவுள் வழிபாட்டையும் உறுதிப்படுத்தத்தக்கது. இதற்கு நாவலரவர்களது சைவ வினாவிடை முதலிய நூல்களைக் கற்றல் அவசியமாம்.



நூல்கள் தாமாக அறிவை ஊட்டமாட்டா. அவற்றிலுள்ள அறிவை ஊட்டுதற்கு ஆசிரியர் வேண்டும். ஆசிரியர் நல்லொழுக்கமும் கடவுட்பற்றும் உள்ளவரானால் அவருடைய முன்மாதிரியே சமயக் கல்வியில் முக்காற் பங்காகிவிடும். ஆசிரியர் அத்தகையரல்லாராயினும், அவர் சமய நூல்களைப் போதிக்கும்போது அவரைப் பற்றிச் சிந்தியாமல், அவர் சொல்வதைச் சிந்தித்தலே மாணவனது கடனாம். தாய், தந்தை, ஆசிரியராகிய இம் மூவரது ஒழுக்கத்தையும் ஆராயப் புகுதல் தவறென்பது நீதிநூற் றுணிபு. '' பிதா தெய்வமாகுக, மாதா தெய்வமாகுக. ஆசாரியர் தெய்வமாகுக. ''

—

'' சின்ன வயதிலேயே சத்தியம், நேர்மை, மன அடக்கம், மன உறுதி, மனத்திருப்தி ஆகிய இவற்றைப் பழகிக் கொண்டால், இறக்கும் வரைக்கும் இவைகள் நிலைத்திருக்கத் தக்கவை. அறப்பற்றும், பிற உயிர்களில் இரக்கமும், யாவரும் கடவுளுடைய குழந்தைகள் என்ற எண்ணமும் உறுதிப்பட்டால் ஆசைகள் தாமாகவே அடங்கி நிற்கும்.''

'' நாம் ஒருவரைக் காணும்போது அவர் சிவபிரானது திருவடிகளைச் சேருவதற்கு யாத்திரை செய்பவர் என்ற எண்ணமே நமது மனதில் முதல் உண்டாதல் வேண்டும். அவர் நம்மிடம் வந்த தொழிற்றொடர்பு இரண்டாவதாக எண்ணத்தக்கது.''

— சைவப் பெரியார்
திரு. சு. சிவபாதசுந்தரம்பிள்ளை

உ

சிவமயம்

# சைவப் பயிற்சிகள்

சைவத் திருவாளர் சே.வெ.ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்

ஒரு நகரத்திலே இரண்டாயிரம் மாணாக்கர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஐந்து வயசிற்கும் இருபத்துநாலு வயசிற்கும் இடைப்பட்டவர்கள். அவர்கள் யாவருக்கும் ஒரே பாடம் படிபிக்கவேண்டுமென்று அரசினர் கட்டளை செய்திருக்கிறார்கள். ஐந்து வயசுப் பையனும் இருபத்திநாலு வயசுப் பைய்னும் ஒரே பாடத்தை வாசிக்கவும், ஒரே பாடத்தை எழுதவும், ஒரே கணக்குகளைச் செய்யவும் வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இதைப் போல அறிவற்ற கல்விமுறை நான் கேள்விப்பட்டதில்லை. வேறொரு நகரத்திலும் ஐந்து வயசிற்கும் இருபத்திநாலு வயசிற்குமிடையிலான இரண்டாயிரம் மாணாக்கர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பை ஆரம்பக்கல்வி, உயர்தரக் கல்வி, சர்வகலாசாலைக் கல்வியென வகுத்து ஐந்து வயசு தொடக்கம் எட்டு வயசு வரையும் உள்ளவர்கட்கு ஆரம்பக் கல்வியை மூன்று படிகளாக வகுத்து அவர்களை மூன்று வகுப்பாக்கியும், ஒன்பது வயசு தொடக்கம் பதினைந்து வயசு வரையும் உள்ளவர்கட்கு உயர்தரக் கல்வியை ஆறுபடிகளாக்கி அவர்களை ஆறு வகுப்பில் வைத்தும் பதினாறு தொடக்கம் இருபத்திநாலு வரையும் உள்ளவர்களுக்கு சர்வகலாசாலைக் கல்வியை எட்டுப் படிகளாக்கி அவர்களை எட்டு வகுப்பில் விட்டும் படிப்பிக்கின்றார்கள். ஆகவே, அந்த நகரத்திலே ஐந்து வயசு தொடக்கம் இருபத்திநாலு வயசு வரையுமுள்ள மாணாக்கர்களை, ஆண்டொன்றுக்கு ஒரு படியாக, பதினேழு படிகளில் வைத்துப் படிப்பிக்கிறார்கள். இது தக்கமுறை என்பதை விவேகிகள் யாவரும் ஏற்றுக்கொள்வர். நாம் அறிந்த சமயங்களுள் பெரும்பாலன முதற் சொல்லப்பட்ட நகரத்து அரசினரைப் போல, கோடிக்கணக்கான சனங்களுக்கெல்லாம், இளையோராயினும் முதியோராயினும், விவேகிகளாயினும் மூடர்களாயினும், ஒரே போதனை, ஒரே அனுட்டானம், ஒரே வழிபாடு கற்பிக்கின்றன. இவற்றைப் போலாகாது. இரண்டாவதாகச் சொல்லப்பட்ட நகரத்தைப் போல, சித்தாந்த சைவமானது மனிதர் யாவரையும் ஐம்பத்காறு வகுப்புக்களாக்கி விட்டிருக்கிறது. இவற்றுள் கீழ்ப்படிகளிலுள்ளவை உலகாயதம் முதலிய புறச்சமயங்கள் ஆறுமாம். அவற்றுக்கடுத்தவை தார்க்கிரகம் முதலிய புறச்சமயங்களாறும், பாசுபதம் முதலிய அகப்புறச்சமயம் ஆறும், பாடாணவாத சைவம் முதலிய அகச்சமயம் ஆறுமாம்: இவற்றின் மேலாயுள்ள சித்தாந்த சைவமானது உபாயமார்க்கம் உண்மை மார்க்கம் என இருபெரும் கூறுகளையுடையதாய், ஒவ்வொன்றிலும் சரியையிற் சரியை சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் முதலாகப் பதினாறு படிகளையுடையதாய், இருபெரும் கூறுகளிலுள்ள முப்பத்திரண்டு படிகளைத் தன்னுள் அடக்கி இருக்கின்றது. பிற சமயங்களை அனுசரித்தல் சைவத்திற்குச் சம்மதமோவெனின் அததற்குத் தகுதியானவர்கள் அவ்வச் சமயத்தை அனுசரித்தலே சித்தாந்த சைவத்தின் சம்மதமாம். ஒரு சர்வகலாசாலையிலே, மிக உயந்த வகுப்பிற் கற்பவனுடைய கல்வியில் விருத்தி அதற்குக் கீழ்ப்பட்ட வகுப்புகளுக்குரிய கல்வி எல்லாம் அடங்குவன போல, பிறசமயங்களிலுள்ள வாய்மைகள் யாவும் சித்தாந்த சைவத்தில் அடங்கியிருக்கின்றன. இதனாலே சித்தாந்த சைவத்தை எங்கும் நிறைந்த சமயம் என்பர். இது ஆங்கிலத்தில் 'Universal Religion' எனப்படும்.

சித்தாந்த சைவமானது தன்னுள் அடங்கியிருக்கும் முப்பத்திரண்டு படிகளுக்குமுரிய வாய்மைகளையும் பயிற்சிகளையும் பயனையும் விரிவாய் அறுத்துக் கூறியிருக்கின்றது.

சமயம் என்பது அறிவைப்பற்றியதன்று. அது ஆன்மாவின் நிலை. அந்த நிலையை எய்துதற்குக் கடவுளுடைய திருவருள் பதிந்த பயிற்சிகள் இன்றியமையாதன. எங்களுட் பெரும்பாலார்

நாங்கள் ஆன்மா என்பதை அறிந்தாலும் அதைக் கொள்ளாமல், உடம்பையும் உடம்போடு கூடிய பொருட்களையுமே அபிமானிக்கின்றோம். நாம் உடம்பல்ல; நாம் ஆத்மா என்பதைக் கொள்ளுதற்கு அளவிறந்த பயிற்சிகள் வேண்டும். அறிதலுக்கும் கொள்ளுதலுக்குமுள்ள வேறுபாட்டைக் காட்டுகின்றேன். "நான் இந்த உடம்பு அல்லன்" என்னும் உண்மையை நான் கொண்டால், ஒருவன் என்னுடைய கையைக் கத்தியினால் ஆழமாய்க் கீறும்போது, நான் அதைப் பொருட்படுத்தமாட்டேன். உடம்பு என்னின் வேறாதலால் அப்படியே உக்கிரமான தலையிடி அல்லது வயிற்றுக்குத்து இருக்கும்போது அவற்றைச் சிந்திக்கமாட்டேன். என்னுடைய ஆடையிலே நெருப்புப்பற்றி உடம்பை எரிக்கும் போதும் அது எனக்குத் துன்பத்திற்குக் காரணமாகாது. ஆயினும் உடம்பு என்னின் வேறாயதென்பது எனக்கு அநுபவ உண்மையாகாமல் மேற் சொல்லிய யாவும் என்னைத் துன்பப்படுத்தியே விடுகின்றன. தனு கரண புவன போகங்கள் என்னின் வேறானவை என்பது அனுபவ உண்மையாதற்குச் சைவப் பயிற்சி இன்றியமையாதது.

சைவப் பயிற்சிகளுள் விரத அனுட்டானம் உடலால் வரும் துன்பங்களைக் கொள்ளாது விடுவதற்குரிய நோன்றல் பயிற்சியாம். இதை,"உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்குரு" என்னும் திருக்குறளால் அறிக. உடலுக்கு வரும் துன்பங்களைச் சகித்துப் பழகுதலும் பிறவுயிர்களுக்குத் துன்பம் செய்யாமையும் விரதத்தினுடைய வடிவமாம் என்பது இதன் பொருள். விரதங்களை அநுட்டிக்கும் போது செய்யப்படும் வழிபாடு இப் பயிற்சிக்குப் பெருந் துணையானதாம். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" என்று மணிவாசகப் பெருமான் சொல்லியருளியதால், சைவப் பயிற்சி எதற்கும் சிவ பக்தியே உயிராதல் வேண்டும். அதிகமான சைவானுஷ்டானங்கள் சிவபக்தியை வளர்ப்பனவாயும், உடம்பும் உடம்போடு சேர்ந்த பொருட்களும் மயக்கத்தைத் தருவதாகிய மாயையின் காரியங்கள் என்பதையும், இந்த மயக்கத்திற்கு மூலமாயுள்ளது ஆணவமென்பதையும் உணர்த்தி நிற்பன. இவற்றுட் சிலவற்றை எடுத்துக்காட்ட முயலுகின்றேன்.

சைவச் செயல்களுள் யாவரும் எளிதிற் செய்யத்தக்கது திருநீறு பூசுதலாம். "முத்தி கொடுப்பது நீறு" என்றார் சம்பந்த



சுவாமிகள். "தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத்தருஞ் சத்தி" என்றார் உமாபதிசிவம். தன்னிலைமை மன்னுயிர்கள் சார்தல் முத்தி ஆதலால், நீறானது சிவசத்தியென்பது பெறப்படுகின்றது. இத்திருநீறாகிய சிவசக்தியானது எம்முடைய நெற்றியிலே விளங்கத்தக்கதாயிருந்தால், அதற்கு மேலாக நமக்கு வரத்தக்க தவப்பயன் யாது! சிவபிரான் சிவலிங்கத்திலே எழுந்தருளியிருப்பது போல, பராசத்தி திருநீற்றில் எழுந்தருளியிருக்கிறது. இவற்றிலே முறையே சிவபிரானும் பராசத்தியும் விசேஷமாகச் சான்னித்தியமாதற்காக, இவற்றிலே மந்திர நியாசஞ் செய்தல் வழக்கமாகும். சிவலிங்கப் பிரதிட்டை செய்யும்போது இதற்காக அதிலே மந்திர நியாசஞ் செய்யப்படுகிறது. அதுபோலத் திருநீற்றுக்கு மூன்று விதமாக மந்திரம் பதிக்கப்படுகின்றது. தீட்சை பெறாதவர் "சிவ சிவ" என்ற மந்திரத்தை உச்சரித்துக் கொண்டு திருநீற்றை அணிவர். தீட்சை பெற்றவர்கள் இடையிடையே பூசும்போது திருவைந்தெழுத்தை உச்சரித்துக் கொண்டு பூசுவர். அப்போது நியசிக்கப்படும் மந்திரம் திருவைந்தெழுத்தாகும். சந்தியாவந்தனம் செய்யும் போது திருநீற்றுக்குச் செய்யும் பிரதிட்டை அகலமானது. முதல் சம்கிதை மந்திரங்களை நியசித்துத் திக்கு பந்தனம் முதலியவற்றையும் ஐவகைச் சுத்திகளையுஞ் செய்து, மூலமந்திர நியாசம் பண்ணி உருத்திரரைத் தியானஞ் செய்தபின், அதைக் குழைத்து பஞ்சப் பிரம மந்திரங்களைச் சொல்லித் தரித்தல் முறையாகும். இதிலே சம்கிதை மந்திர நியாசம், திருவைந்தெழுத்து நியாசம், அதையணியும்போது அந்தந்த இடங்களுக்குரிய பஞ்சப் பிரம நியாசமும் செய்யப்படுகின்றன. இந்த மந்திர நியாசங்களினாலே அத்திருநீறு பராசத்தியேயாகின்றது. ஆதலால் திருநீறு என்றும் வழிபாட்டுக்குரியது. அது அணிகிறவனுக்குப் பராசத்தி பிரதிட்டையாதலோடமையாது, காண்கிறவனுக்குப் பராசத்தி தரிசனமுமாகின்றது. குருடனொருவன் விளக்குக் கொண்டு திரிந்தபொழுது "இந்த விளக்கினால் உமக்கு என்ன பயன்?" என்றொருவர் வினாவினார். அதற்கு அவன் "இந்த விளக்கொளி மற்றவர்களுக்காக" என்றான். அதுபோலல்லாமல், விபூதியணிதல் தாமும் பிறருமாகிய இரு பாலார்க்கும் ஆகின்றது. திருநீற்றின் வார வேடத்தை நினைப்பித்ததற்காக சேரமான் பெருமாணாயனார் வண்ணானைத் தொழுது நின்றார். ஒருவனைக்

காணும்போது அவனுடைய நெற்றியிலிருக்கும் திருநீற்றைக் காண்பதே பரமப் பிரயோசனமாதலால் திருநீறில்லாத நெற்றியைக் காணுதல் பிறப்பு, இறப்பு, பிணி ஆகிய இவற்றிலும் கொடியதென்று பின்வருமாறு மாணிக்கவாசகப் பெருமான் பாடியருளுகின்றார்.

" பிணியெலாம் வரினும் அஞ்சேன்
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்றன்
தொழும்பரோ டழுந்தி யம்மால்
திணிநிலம் பிளந்துங் காணாச்
சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால்
அம்மநா மஞ்சு மாறே"

திருநீறணிவதும் நிறைய அணியவேண்டுமென்னும் கருத்தாக "பூசிற்றான் திருநீறே நிறையப் பூசி" என்று அம் மாணிக்கவாசகப் பெருமானே பாடியருளுகின்றார்.

வேறொரு சைவ அநுட்டானம் திருவைந்தெழுத்தை ஓதலாம். அது இம்மை மறுமை ஆகிய இரண்டிலும் எல்லையில்லாத நன்மையைச் செய்வது. பிறவியாகிய கடலிலே ஆழ்ந்து போகாமல் மிதத்திக் கொண்டு நிற்பது. திருவைந்தெழுத் தென்பதை "தமியனேன் பெரும்பிறவிப் பௌவத்து...... அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை" என்னும் திருவாசகத்தாலும், உவர்நீர்க் கடலிலே கல்லோடு கட்டிப் போடப்படும் போது மிதப்பிப்பதும் திருவைந்தெழுத்து என்பது "கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்னும் தேவாரத்தாலும் போதிக்கப்படுகின்றன. அன்றியும் வேதம், ஆகமம், சாத்திரங்கள் முதலிய யாவற்றிலுமுள்ள பொருள் திருவைந்தெழுத்தில் அடங்கியிருப்பதை

" அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள் நூல் தெரியப்புகின் "

என்னும் உமாபதிசிவத் திருவாக்காலறிக. இவ்வைந்தெழுத்தானது பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களையும் அவற்றின் இயல்பையும் பதியோடு பசுவைச் சேர்ப்பதாகிய



பராசக்தியையும் பாசத்தை முதிர்விப்பதாகிய ஆதிசக்தியையும் காட்டுகின்றது. அக்காட்சியினாலே ஆன்மாவானது தன்னை மயக்கித் தீயவழியிலே செலுத்துவது எதுவென்பதையும் தன்னை விளக்கி தூய வழியிலே செலுத்துவது எதுவென்பதையும் அறிகின்றது. எனக்குச் சகல தீமைகளுஞ் செய்யத்தக்க பரம துஷ்டனொருவன் என்னுடைய ஒரு கையைப் பற்றி இழுக்க, என்னைப் பெற்று வளர்த்துச் சகல சுகங்களும் செய்கின்ற என்னுடைய தந்தையார் என்னுடைய மற்றக் கையைப் பற்றி இழுக்க, நான் என்னுடைய தந்தையார் பக்கத்துக்கே சாரவேண்டும் என்பதைப் பற்றி எள்ளளவேனும் ஐயமுண்டாதல் கூடுமோ?

"ஊனநடனம் ஒருபால் ஒருபாலாம்
ஞானநடம் தான் நடுவே நாடு"

என்பது இதனைக் குறிக்கின்றது. ஆதலால் திருவைந்தெழுத்தை விதிப்படி உச்சரிப்பவர் தம்மை மயக்கிக் கெடுப்பதாகிய பாசங்களின் வழிச்சாராமல் தம்மைச் சிவமாக்குவதாகிய அந்தப் பராசக்தியை நாடி நற்செயலும் நல்வாக்கும் நற்சிந்தையும் உடையராகமுயலுவர். திருவைந்தெழுத்தை இங்ஙனம் ஓதிவர சிவச்சார்பு பலமடைந்து உலக வாழ்க்கையாகிய வஞ்சனையிலாத கனவு குறைந்து குறைந்து நீங்கி நனவுக்கு வழியாகும். எங்களுடைய் நனவு நிலையை நீக்குதல் அரியவற்றுள் அரிது. கும்பகர்ணனுடைய கனவை நீக்கி அவனை நனவு நிலைக்கு வரச்செய்வதற்குச் செய்த முயற்சிகளோ பல. யானை சிங்கங்கள் அவன் மேல் உழக்கின. ஆயிரம் மல்லர்கள் வேல்களையும் ஈட்டிகளையும் அவன் செவிகளுட் புகுத்தினார்கள். குதிரைகளை அவன் மேல் வலசாரி இடசாரியாக ஊர்ந்தார்கள். இறுதியில் ஆயிரம் அரக்கர்கள் இருப்புலக்கையால மோதினார்கள். இவற்றாற் கும்பகர்ணன் ஒருவாறு விழித்தானாயினும் நாமோ எவற்றாலாயினும் விழிக்கின்றிலம். விதிப்படி திருநீறணிதலும் திருவைந்தெழுத்தோதலும் கும்பகர்ணனுக்குக் கொடுக்கப்பட்ட இருப்புலக்கையடிபோல, எமது மயக்கத்தைத் தீர்த்து விழிக்கச் செய்தற்கு உதவத்தக்கவைகளேயாம். இவைகளிரண்டும் சந்தியாவந்தனத்தின் கூறுகளாம். அதன் ஏனைய கூறுகளும் இவற்றைப் போலவே எம்மை விழிக்கச் செய்யுங் கருவிகளாம்.

சைவ அநுட்டானங்களுள் வேறொன்று சிவாலய வழிபாடு. இது உலக மயக்கத்தை நீக்கி உண்மையை உணர்த்துதல்

பிரத்தியட்சம். ஆலயத்திலே நாம் கடவுளை நேரே காண்கிறோம். ''நாம் கடவுளைக் காணுதல் சாலுமோ'' என்று யாராவது மறுத்து வினாவுதல் கூடும். "மெய்ஞ்ஞானி யல்லாதான் கடவுளைக் காணுதல் இயலாது" என்று உறுதியாகச் சிலர் கூறுதல்கூடும். நாம் ஆலயத்திலே கடவுளைக் காண்பது மெய்; மெய்ஞ்ஞானி கடவுளைக் காண்பது மெய். காணுதலிலே வேறு இரண்டு. நான் உங்களைக் காண்கின்றேன். ஞானகுருவொருவர் உங்களில் ஒருவரைக் காண்கின்றார். இந்த இருவகைக் காட்சிக்குமுரிய வேற்றுமை யாதெனில், நான் உங்களைக் காணும்போது எனக்குப் புலப்படுவது உங்களுடைய உடம்பு. ஆயினும் நான் காண்பது உங்களையேயாம். நான் ஒருவரோடு பேசிவிட்டு அவருடைய உடம்போடு பேசினேனென்று சொல்லமாட்டேன். அவரோடு பேசினேனென்றே சொல்லுவேன். அவரோடு பேசுதற்கும் காணுதற்கும் வாயிலாக உள்ளது உடம்பு. ஆயினும் ஞானகுரு ஒருவர் தம்முடைய சீஷனைக் காணும் போது, அவருடம்பை வாயிலாகக் கொள்ளாது ஆன்மாவை நேரே காண்கிறார். நாம் ஒரு மனிதனைக் காணும் போது, உடம்பு மாத்திரம் காட்சிக்குப் புலப்படவும் அந்த உடம்பை அதிட்டித்து நிற்கும் அவனுடைய இயல்பையே காண்கின்றோம். அதுபோல், ஆலயத்திலே திருவுருவத்தின் வாயிலாக நாம் கடவுளையே காண்கின்றோம். மெய்ஞ்ஞானியானவன் திருவுருவத்திலேயன்றி வேறிடங்களிலும் தானே சிவமாய் சிவத்தையறிகின்றான். அப்போது காண்பவனும் காணப்படுபவனும் காட்சியும் சிவமேயாயுள்ளன. ஆதலால் ஒரு மனிதனுடைய உடம்பைக் காணும் போது நாம் அவனைக் காண்பதாகக் கொள்வது போல, ஆலயத்திலுள்ள விக்கிரகத்தைப் பார்க்கும் போது அதை அதிட்டித்து நிற்கும் கடவுளைக் காண்கிறோமென்று சொல்லுதல் பொருத்தமானதாம். ஆகவே கோயிலுக்குட் போகும்போது கடவுளைக் காண்கின்றோம். அவரே மெய்ப்பொருளென்பது எங்களுடைய மனத்தில் உடனே எழுகின்றது. அதிலிருந்து நாம் ஆன்மாவென்பதும் மாயப் பொருள்களாகிய உலகப் பொருளல்லாதவைகள் என்ற கருத்தும் தானாகவே முனைந்து எழும். அப்போது எங்களுடைய வாழ்க்கை உண்மையான வாழ்க்கையாகின்றது. ''வஞ்சனையிலாத கனவே'' என்று தாயுமானவர் சொல்லிய கனா நீங்குகின்றது. நாங்கள் அந்தச் சமயத்திலே



சிவலோகத்தில் இருக்கின்றோம். திருக்கோயிலுட் சென்ற உடனே, முதன்முதல் விநாயகரைத் துதிக்கின்றோம். ''மண்ணுலகத்தினிற் பிறவி மாசற" என்று சொல்லுமுன் உலகப் பற்றுச் சற்றே தங்கியிருந்தாலும் அதைச் சொன்ன உடனே அவர் பற்றும் பறந்துவிடும். பிறவியானது 'மாசு' என்றும், அது அறவேண்டுமென்றும் நாம் சொல்லும் போது, மண்ணுலகத்தினிற் பிறவியாகிய இவ்வுடலும் இவ்வுடலோடு தொடர்புடைய புவனபோகங்களும் 'மாசு' என்று அருவருத்துத் தள்ளுகின்றோம். அப்போது, விநாயகரைக் காண்கின்றோம். அவருடைய திருமுகத்தினின்றும் பொழிகின்ற கருணையைக் காண்கின்றோம். அதனாலே எம்முடைய மனமும் உருகி அவர் பாற் செல்கின்றது. அவர் ''தாயிற் சிறந்த தயாவான தத்துவன்'' ஒரு குழந்தையும் தாயும் ஒருவரையொருவர் பார்க்கும் போது குழந்தையைக் கண்டதினாலே தாயுடைய முகத்திலும் கண்களிலும் அன்பு சுரக்கின்றது. தாயைக் கண்டு குழந்தையினுடைய முகத்திலும் கண்களிலும் அன்பு சுரக்கின்றது. இது வரவரப் பெருகுகின்றது. தாய் குழந்தையைத் தூக்கி மடியில் வைக்கிறாள். குழந்தை பால் குடிக்கின்றது. கடவுளிடத்தே சுரப்பதாகிய அன்பும் இன்பமும் நிறைந்த ஞானமயமாகிய பாலைப் பருகுதற்கு நாம் தாகங் கொண்டால் அதைப் பருகலாம். ஆயினும் நாம் பருகுகின்றோமல்லோம், எமக்கு அந்த ஞானமாகிய பால் கைக்கின்றது. மலமாகிய பித்தம் எங்களிலே அதிகரித்து நிற்றலால், 'தித்திக்கும் பால்தானும் கைக்கும்' என்றார் உமாபதிசிவம். பித்தம் அதிகரிக்கும் போது உள்ளபடி கைப்பான பொருள் தித்திக்கும். பித்தம் நீக்கினவர்களாகிய மாணிக்கவாசகர் போன்றவர்கள் சிவபிரானருளும் ஞானத்தை இடைவிடாமற் பருகுகின்றனர். மடியிலிருந்து ஒரு நிமிடம் இறக்கிவிட்டாலும் ''நான் மெலியப் போகின்றேன். பாலைத்தா'' என்று மணிவாசகப் பெருமான் அழுது சொல்வதைக் கேளுங்கள் :—

''தாயாய் முலையைத் தருவானே
தாரா தொழிந்தாற் கவலையாய்
நாயேன் கழிந்து போவேனோ
நம்பியினித்தான் நல்குதியே
தாயே யென்றுன் தாளடைந்தேன்
தாயாநீஎன் பாலில்லையே
நாயே னடிமையுடனாக ஆண்டாய்
நான்தான் வேண்டாவோ''

நாம் கடவுளுடைய திருமுன்பு நின்று அவருடைய பெருங் கருணையைக் கண்டு கசிந்து நிற்போம். அப்படி நிற்கும்போது, எமது பரம மாதாவாகிய ஈசன் எங்களை எத்தனையோ விதமாக ஆதரித்தது உறுதி. ஞானத்தைப் புகட்டுவார். அவருடைய திருவுருவத்தின் ஒவ்வொரு கூறும் அனேக அருளுபதேசங்களைச் செய்யும். அக்கூறுகளுள் ஒன்றினாற் பெறப்படும் போதனைகளை மாத்திரம் இப்போது எடுத்துக்கூற முயலுகின்றேன். கோயிலிலுள்ள அனேக மூர்த்திகளில் அபயமென்றொரு திருக்கரமுள்ளது. அந்தத் திருக்கரம் "நீயொன்றுக்கும் பயப்படலாகாது" என்று வழிபடுவோனுக்குணர்த்துகின்றது. அதை விரித்துச் சொல்லுகில், "உனக்கு இக்காலத்திலே பல வகையான இடர்கள் நேர்ந்துள. அவைகள் யாவும் உனக்கு நன்மையானவையேயாம்! தீமையானவையல்ல; உனக்கு எது நேரினும் அது எமது ஆஞ்ஞைப்படி வருகின்றது. நான் உனக்குப் பொல்லாங்கு செய்பவனா? உனக்கு இடையறாமல் நன்மை செய்வதல்லவா என்னுடைய தொழில்; உண்மையான இன்பங்கள் துன்பமாகவே தோற்றும், உன்னுடைய கையில் ஒரு புண்வந்தால் அந்தப் புண்ணை நீக்குகிறோம். அதற்கு அயலிலிருக்கின்ற இரத்தம் தொழில் செய்யும்போது எவ்வளவு விறுவிறுப்பும் குத்து வேதனையும் அனலும். காலகாலங்களிலே சுரமும் உண்டாகின்றன. இந்த வேதனையைத் தரும் முயற்சியெல்லாம் அந்தப் புண்ணை நீக்கும் தன்மையன அல்லவா? அப்புண் அவ்வளவோடு தீராதாயின் வைத்தியன் உன்னிடம் வந்து நீ கதறக்கதற அந்தப் புண்ணை வெட்டுகிறானல்லவா? அப்போது நீ எவ்வளவாகத் துன்பப்படுகிறாய்! துன்பப்பட்டாலும் அது உனக்குச் சம்மதமானதுதானே. அப்படிச் செய்தாலல்லவோ அப்புண் நீங்கி நீ சுகப்படுவாய்; அதுபோல உன்னுடைய தீவினையாகிய புண்ணைத் தீர்த்தற்காக நாம் உன்னைப் பலவாறாக வருத்துகின்றோம்; அதெல்லாம் உனக்கு நன்மையானதே யென்பதைத் தெரிந்து ஒன்றுக்கும் நீ அஞ்சாதே; நான் இருக்கும் போது உனக்கு ஒரு விதமான தீமையும் வராது; ஒன்றுக்கும் நீ பயப்படாதே" என்று அந்தத் திருக்கரம் போதித்தவாறாம். இந்தப் போதனையை அப்பர்சுவாமிகள் திருவிருத்தமொன்றிலே பின்வருமாறு பாடியருளுகின்றார்.

"மண்பா தலம்புக்கு மால்கடன்
மூடிமற் றேழுலகும்
வண்பால் திசைகெட்டு இருசுடர்
வீழினும் அஞ்சல் நெஞ்சே
திண்பால் நமக் கொன்று கண்டோம்
திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுட்
சுடரான் கழலிணையே"

அத்திருக்கரம் மேன்மேலும் உணர்த்துவது யாதெனில் "நீயொன்றுக்கும் கவலைப்படாதே" நீயும் உன்பிள்ளைகளும் ஊண், உடை முதலியவற்றாற் குறைவற்று வாழுதற்கு வேண்டிய பொருளில்லையே என்றற் றொடக்கத்தனவாகிய வீண் கவலைகளை ஒழி; நீ நன்முயற்சி செய்வாயின் உனக்கு ஒரு விதமான குறையும் நேராது! கவலையையொழி; பரபரக்காதே; ஆறுதலாயிரு", என்று உணர்த்துவதாகும். அது

"புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்
புயங்கன் தாளே புந்திவைத்திட்
டிகழ்மின் எல்லா அல்லலையும்
இனியோரிடையூ றடையாமே
திகழுஞ் சீரார் சிவபுரத்துச்
சென்று சிவன்றாள் வணங்கி நாம்
நிகழுமடியார் முன்சென்று
நெஞ்ச முருகி நிற்போமே"

என்ற திருவாசகத்தில் தொனிக்கின்றது.

அத்திருக்கரமானது வேறுமொருபொருளையும் உணர்த்துகின்றது: ஒருவன் ஒருபிழை செய்யப்போகும்போது அதைத் தடுத்தற்கும் கையையுயர்த்துவதுண்டல்லவா? அப்படியே, நாம் பிழைவழியிலே செல்லும்போது எம்மைத் தடுப்பதும் அத்திருக்கரமாகும். "நீ உலகவிஷயங்களிலே அதிகமாக நாடுகிறாய்; ஆணவ மயக்கத்தினாலே அவைகள் நல்லவைகளாகத் தோன்றுகின்றன, உள்ளபடி அவைகள் உனக்குத் தீமையானவை; உனக்கு இன்றியமையாதவற்றைத் தேடிக்கொள். மற்றவைகள் ஒன்றையும் தேடாதே; அவற்றிலே உன் மனதை விட்டாயானால் நீ அவற்றிலே மாண்டுபோவாய்; உனக்குக் கேடானவற்றைத் தேடுதற்குச் சூழ்ச்சி செய்யாதே," என்று இவ்வாறாக உணர்த்தி அத்திருக்கரமானது தீ நெறியினின்றும் இழுத்து நன்னெறியில் செலுத்துகின்றது. இதை மணிவாசகப் பெருமான் பின்வருமாறு மிகத் தெளிவாயும் விளக்கமாயும் பாடியருளுகின்றார்.

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்டு
ஆழ்கின்றா ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீ அவலக் கடலாய வெள்ளத்தே"

இத்திருக்கரமானது இன்னும் எத்தனையோ பல உபதேசங் களை உணர்த்துவதாகலாம். எமக்கு எட்டியவற்றைச் சொன் னோம். இவ்வாறே ஏனைய திருக்கரங்களும் உபாங்கங்களும் அங்கங்களும் அனேக நல்லொழுக்கங்களையும் ஞான வாய்மை களையும் உணர்த்துகின்றன. நாம் கோயிலிலே வழிபடும்போது இவற்றையெல்லாம் பெறுகின்றோம்.

இதுவரையில், திருநீறணிதல், ஐந்தெழுத்தோதல், ஆலயவழி பாடு ஆகிய மூன்று அனுட்டானங்களால் வரும் பேறுகளுட் சில வற்றைக் கூறினோம், இவற்றைப் போன்றவைகளாகிய ஏனைய அனுட்டானங்களின் பேறுகளை உய்த்துணர்ந்து கொள்க. சந்தியாவந்தனம் சிறந்ததோர் அனுட்டானமென்று இடையிலே குறிப்பிட்டேன்.

அதிலேவரும் சகளீகரணமும் சோகம்பாவனையும் ஆன்மா வைப் புனிதமாக்கத்தக்கவை. அவைகளை ஆராய்ந்தறியுமாறு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

இச்சைவ அனுஷ்டானங்களும் சிவபூசை முதலிய ஏனைய அனுட்டானங்களும் பயிர்களெனப்படில், அவற்றின் விளைவு சிவகதியாம். அவற்றிற்குப் பாய்ச்சப்படும் நீர் திருவருட்பாக்களாம். நாம் மெழுகிலே ஒரு முத்திரை வைக்கவேண்டுமானால் அம் மெழுகு உருகுதல் வேண்டும். அதுபோல சைவ அனுட்டானங் களால் வரும் போதனைகளை எமது உள்ளத்திலே பதித்து ஸ்திரப்படுத்த நாம் விரும்புகில் அதை உருக்குதல் வேண்டும். 'திருவாசகத்தில் உருகார் ஒரு வாசகத்திலும் உருகார்' என்பது ஓர் அரிய பழமொழி, தேவார திருவாசகங்களும் ஏனைய அருட் பாக்களும் எமது உள்ளத்தைத் தீநெறியினின்று விலக்கவும் நன்நெறியில் செலுத்தவும் சிவபெருமானது திருவருள் கொண்டு நிறைக்கவும் வல்லவைகளாம். அவற்றுட்சில கடவுளைத் துதித்தற்குரிய மந்திரங்களாம். திருவாசத்திலே போற்றித் திருவகவலிலே "தாயேயாகி வளர்த்தனை போற்றி" என்பது முதலாக, "போற்றி போற்றி புராணகாரண" "போற்றி





சயசய போற்றி" என்பதுமா முந்நூற்றைம் பத்தொரு மந்திரங்கள் இருக்கின்றன. அப்பர் சுவாமிகள் பாடி யருளிய போற்றித் திருத்தாண்டகங்கள் ஐந்தும் சிவபூசையில் ஆத்மார்த்தம் 'பரார்த்தம் ஆகிய இரண்டிலும் அர்ச்சனைக்கு உரியனவாம். தேவார திருவாசகங்களின் இனிமையும் பயனும் சொல்லி முடியத்தக்கவையல்ல. ஒவ்வொரு தேவாரமும் ஒவ் வொரு திருவாசகமும் ஒவ்வொரு விதமான பயனையும் இனிமை யையும் உடையது. ஆதலால் அவைகளை வகுத்துச் சொல்லு தலும் அரிது. அவற்றின் நயத்தை ஒற்றைச் சொல்லிற் சொல்லு கில் "அவைகள் என்னுடைய உயிரினும் அரியன" என்று திடமாயும் உறுதியாயும் சொல்லுவேன். அவற்றின் அருமையைக் காட்டுதற்காக ஓர் திருவாசகத்தையும் ஒரு தேவாரத்தையும் மாத்திரம் எடுத்துக் காட்டுகிறேன். திருச்சதகத்திலுள்ள முதற் திருவாசகத்தின் பெருமையை அளவிடத்தக்கவர் யாவர்? கடவுளை வணங்கும் போது ஒருவருடைய நிலை இத்தன்மைத் தென்று விரித்துக்கூறி, அந்தநிலை தன்னை விட்டகலாதிருக்க வேண்டுமென்று யாசிக்கின்றார். அந்தநிலை நமக்கு வாய்க்கு மாயின் அப்போதுதான் நாம் கடவுளை உள்ளபடி வணங்கு கின்றோம் என்று திருப்தியடையலாம். நாம் அந்த நிலையை அடையும் வரையும் எங்கள் வழிபாடு குறைவுடையதேயாகும். கடவுளை நினைக்கும்போது எமது உடம்பானது பரவசப்பட்டு அரும்பி நடுங்கும்; கைகள் சிரசின்மேற் செல்லும்; கண்ணீர் ததும்பும்; உள்ளம் உருகும்; நிலையற்றவைகளாகிய தனு, கரண, புவன போகங்களைப் பற்றிய சிந்தனையகலும்.

"மெய்தா னரும்பி விதிர்விதிர்த்
துன் விரையார் கழற்கென்
கைதான்றலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி யுள்ளம்
பொய்தான் றவிர்ந் துன்னைப்
போற்றி சயசய போற்றியென்னும்
கைதானெகிழ விடேனுடையாயெ
னைக் கண்டு கொள்ளே"

இங்ஙனம் வழிபட்டுப் பெற்ற சிவானுபவத்தின் சீரை ஒரு தேவாரத்தில் காட்டுவோம்.

"குழலும் கொன்றையும் கூவிள மத்தமும்
தழலும் தையலோர் பாகமாத் தாங்கினான்
அழகனாவடு தண்டுறை யாவெனக்
கழலுங் கைகளை காரிகையாளுக்கே"

அஃதாவது ஒரு பெண் இருக்கின்றாள். அவளுக்கு முன்னே யாராவது ஆவடுதுறையா என்ற பெயரை மாத்திரம் சொன்னார்களாயின் அது கேட்குமுன்னமே அவள் தன்வயமற்று பரவசமாகி உடம்பு எல்லையில்லாமற் சோர்வதனாலே, அவளுடைய கையிலிருக்கும் வளையல்கள் நழுவி விழுகின்றன. இங்கே பெண் என்றது அப்பர் சுவாமியாகிய ஆன்மா. ஆவடுதுறையாவென்றவுடனே அவர் சிவவசமாகின்றார் என்பது பொருள்.

திருவருட் பாக்களுள் பெரியபுராணமானது அடியாருடைய சிவானுபவங்களையும் கூறுவது. அடியார்களுடைய வாக்கு உள்ளத்தை உருக்குவதைப் போலவே அவர்களுடைய வாழ்க்கையும் எமது உள்ளததை உருக்கிச் சிவவசமாக்கத்தக்கது, உலக வாழ்க்கையிலே நாம் யார் யாரோடு கூடுகின்றோமோ யாரை மதிக்கின்றோமோ அவர்களைப் பற்றுவதே எமது இயல்பு. சிவனடியார்களை நாம் மதிக்கின்றோமென்பது மறுக்கத்தக்கதன்று. அவர்களுடைய திருச்சரிதைகளைப் படிக்கும் போது அவர்களைப் பற்றிய சிந்தனை எம்மில் நிலைக்கின்றது. அதனாலே அவர்களைப் பின்பற்றிச் சிவப்பற்றைப் பெறுகின்றோம். சிவகதி என்பது ஒன்று உண்டென்பதற்கு ஸ்திரமான சாட்சி அவர்களேயாம். சைவ சமயத்தை அனுட்டிப்பதனாலே என்ன பயனென்று ஒருவர் கேட்டால் பெரிய புராணத்திலே கூறப்படும் அடியவர்களைச் சுட்டிக் காட்டுவோம். அதோ இருக்கிறார்கள் சைவ சமயத்தை அனுட்டித்துச் சிவத் தன்மையைப் பெற்றவர்கள். நாமும் அவர்களைப் போல் முயன்றால் அந்த நிலையைப் பெறுவோமென்று மனநிறைவோடு சொல்லுவோம்.

எந்தச் சைவ அனுட்டானத்துக்கும் இன்றியமையாத மன நிலைகள் இரண்டுண்டு. அவற்றுள் ஒன்று சிவபிரானுடைய பெருமையை எண்ணுதல். அவருடைய பெருமையை எமது உள்ளமேனும் சொல்லேனும் அளக்கமாட்டாவாயினும், அதைப் பற்றி நாம் சிந்தித்தல்காலும், அது திருவண்டப் பகுதியிலே அசேதனப்பொருள் வழியாகவும் சேதனப்பொருள் வழியாகவும் இருவழியாகப் பாராட்டப்பட்டிருக்கிறது. மாயையிலிருந்து தோற்றிய உலகங்கள் யாவும் ஒருங்கு சேர்ந்தாலும், அவற்றின் தொகுதி, ''இல்நுழை கதிரின் துன் அணுப்புரையச் சிறியவாகப் பெரியோனை'' என்றும் இம்மூவகை மாயைகளிலுமிருந்து தோன்றும் உலகங்களைப் படைப்பவர்களைப் படைப்பவரும் காப்பவர்களைக் காப்பவரும் இவர்களை ஒடுக்குபவரும் அவரேயென்றும் அங்குச் சொல்லியிருப்பதை நாம் சிந்திக்கலாம். அப்படியான சிந்தனைதான் சிவசிந்தனையாகும். அவருடைய திருப்பெயரை நாம் சொல்ல உன்னும்போதும், அவருடைய பெருமை எம்முடைய மனத்தை நிறைத்தல் வேண்டும். அப்படி நிறைக்குமானால், அப்பெயரை நாம் உச்சரிக்கும்போது அதைக் கேட்பவர்கள் அற்புதமடைவர். இப்படியாக அவருடைய பெருமை எம்முடைய உள்ளத்திலே பதியுமானால் தீய எண்ணங்கள் எழுந்தாலும் அவைகள் மின்னலைப்போல மறைந்துபோம். தீவினைகளுக்குக் காரணம் காமம், வெகுளி, மயக்கம் என்று பெரியோர்கள் கூறுவர். காமம் என்பது பொருள்களில் கொள்ளும் ஆசை. சகல உலகங்களும் கடவுளுடைய பெருமைக்கு முன்னே சூனியமாகும்போது அவ்வுலகங்களிற் கோடாது கோடியிலொரு கூறாகிய இப்பூலோகம் அதிசூனியமாதலும் இப்பூலோகத்தில் கோடாநுகோடியிலொரு கூறாகிய அப்பொருள் அதிசூனியமாதலும் புலப்படும். அப்போது அதிலே ஆசையெழாதிருத்தல் கூடும். நாம் ஆசைப்படும் பொருளை நாம் பெற்றுக்கொள்ளாதபடி தடுப்பவரிலே எமக்கு வெகுளியுண்டாகின்றது. எமக்குப் புகழிலே ஆசையுள்ளதாயின் அதைக்கெடுத்து எம்மை இகழ்வோரிலே வெகுளியுண்டாகும், எமது தோட்டப் பிரயோசனங்களிலே எமக்கு ஆசையுள்ளதாயின், அதை அழிக்கும் விலங்குகளிலே வெகுளியுண்டாகும். காமம் இல்லையாயின் வெகுளியும் இல்லையாகும். மயக்கமாவது பொருள் இல்லாதவற்றைப் பொருளென்று எண்ணுதல். கடவுளுடைய பெருமை எம்முடைய மனத்தில் விளங்கும்போது பொருளல்லாதவைகள் பொருளாகமாட்டா. ஆகவே, இறைவனுடைய பெருமையைச் சிந்தித்தலாலே தீவினைகள் யாவற்றினின்றும் நீங்குதல் சாலும். ஆயினும் இறைவனுடைய பெருமையை உள்ளபடி சிந்தித்தல் அரிது. எவ்வளவதிகமாகச் சிந்திக்கிறோமோ அவ்வளவுக்குத் தீவினையினின்றும் நீங்கலாம் என்பது நிச்சயம்.

சைவ அநுட்டானத்திற்கு இன்றியமையாத இரண்டாவது கூறு யாதெனில், அது இறைவனுடைய திருவருளின் பெருமையைச் சிந்தித்தலாம். இது எத்தன்மைத்தெனில், இது ஆன்மாக்கள் யாவற்றையும் இறைவனைப் போலாக்குவது, 'தன்னிலைமை

மன்னுயிர்கள் சாரச்' செய்வது இது. இதற்கு மேலான பொருள் யாதுமில்லை. இதன் பெருமையை வீரவாகுதேவர் சூரனுக்கு வெகுசித்திரமாகத் தெருட்டியருளினார். பதினாயிரம் அடி நீளம், அவ்வளவு அடி அகல உயரங்களையுமுடைய பொன் மலையொன்று என்னபெறுமென்று ஒருவர் கேட்டால் ஒரு தங்கப்பவுணைக் காட்டி இதன் விலை ஐம்பது ரூபா; ஒருகன அடி பொன்னில் எத்தனை தங்கப்பவுண் அடங்கும்; இந்தப் பொன்மலை எத்தனை அடிகொண்டது? இவைகளை அறிவாயானாற் பொன்மலையின் பெறுமதியை அறிவாய்'' என்பதே அதை விளக்கவேண்டிய முறை. வீரவாகுதேவரும் அவ்விதமாக அருட்பெருமையை விளக்குகின்றார். ''பேதையே,நீ உன்னை மிகப் பெரியவனென்றெண்ணுகிறாய், உனக்குள்ளவை பிருதுவியண்டங்களில் ஆயிரத்தெட்டு. பிருதுவி அண்டங்கள் யாவும் சேர்ந்தால் ஆயிரகோடியாகும். அவைகள் யாவற்றையும் அரசாளுபவன் உன்னிற் கோடிமடங்கு பெரியவனாவன். இந்தப் பிருதுவி அண்டங்களையும் அப்பு, தேயு, வாயு, ஆகாயமாகிய இவற்றுக்குரிய அண்டங்களையும் பிரகிருதி மாயையிலுள்ள எஞ்சிய பத்தொன்பது தத்துவங்களையும் சேர்ந்த அண்டங்களையும் அவற்றுக்கப்பாலுள்ள அசுத்த மாயையிலுள்ள ஏழு தத்துவங்களையும் சேர்ந்த அண்டங்களையும் அவற்றிற்கு மேலாயுள்ள சுத்தமாயையிலுள்ள அண்டங்களையும் ஒருவன் தனியரசு செய்வானாயின் அவனுடைய பெருமையை நீ அளக்கவேமாட்டாய், இவைகள் யாவற்றையும் அரசாளுகின்றவன் யாவனென்று நீ கேட்டால், எனது தலைவராகிய கந்தசுவாமியாரது திருவருளிலே சிறிது பெற்றவன் அவன். அந்த அருளிலே சற்றே கூடப்பெற்றவர்கள் இவற்றைப் படைத்துக் காத்துக் காப்பவர்களாவர். இன்னும் சற்றே கூடப் பெற்றவர்கள் இவற்றைப் பொருளென மதியாதவர்கள். அப்படியாயின் அத்திருவருள் எவ்வளவு பெரியதாதல் வேண்டும். அந்தத் திருவருளை நாம் சிந்திப்போமாயின் எமக்கு, ''இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை'' இத்தன்மைத்தாய் திருவருளே எம்மை ஆளுவது. அதனுடைய ஆளுகைக்குக் கீழே வாழும் எமக்குத் துன்பம் ஒருகாலமும் நேராது. எங்களுடைய தேசத்தை ஆளுகிறவர்கள் நல்லவர்களாயிருந்தால் நாங்கள் எவ்வளவு ஆனந்தமடைகிறோம். Lord Ripon என்பவர் இந்திய பிரதிகாவலராயிருந்த போது (Viceroy) அவர் மிகவும் நல்லவரா



யிருந்ததினாலே இந்தியர்கள் இன்பமாய் வாழ்ந்தார்கள். திருவருள் எங்களை ஆளுவதால் எங்களுக்கு என்னகுறை! ''திருவருளின் ஆளுகையிலே குறைகள் இருக்கின்றனவே'' என்பர் சிலர். எத்தனை பேர் உணவின்றித் தவிக்கிறார்கள்; குட்டம் முதலிய பெருநோய்களால் வருந்துகின்றார்கள். தமக்குள்ள ஏழு ஆண் குழந்தைகளையும் சாகக்கொடுத்துத் தீராக் கவலையோடு மெலிகின்றார்கள்'' என்பார்கள். இவைகள் குறைவுகளோ நிறைவுகளோ என்றறியில் பெரிய சத்திர வைத்தியசாலையொன்றுக்குப் போவோம். அங்கே ஒருவனுடைய வயிற்றைக் கீறிக் குடரை எத்தனையோ விதமாகக் கீறுகிறார்கள். வயிற்றையும் குடரையும் வெட்டுவது குறைவை ஆக்குதற்கா ? நிறைவை ஆக்குதற்கா ? வேறொருவனுடைய காலை வெட்டி எறிகிறார்கள். வேறொருவனுடைய முதுகிலே கிண்ணம் போன்ற புண்ணொன்றிருக்கிறது. சில பாகங்களை வெட்டுகிறார்கள் ; சில பாகங்களைக் கத்தரிக்கிறார்கள்; சில பாகங்களை உரிஞ்சுகிறார்கள்; கொடிய காரத்தை வைக்கிறார்கள். இவைகள் எல்லாம் பெரும் துன்பத்தை ஆக்குவன. இவ்வாறு துன்பப்படுத்துதல் அவர்களுடைய குறைவுக்காகவா நிறைவுக்காகவா? ஆதலால் நாம் உணவின்றித் தவித்தாலும் பெருநோய்களால் வருந்தினாலும், அரிய புதல்வர்களை இழந்தாலும், இவைகள் யாவும் அத்திருவருளின் ஆணையால் வருதலால் எமக்கு நன்மையானவைகளேயன்றித் தீமையானவையல்ல. திருவருளைச் சிந்திப்போமாயின் இடர்கள் போல எமக்கு நேருவனவெல்லாம் நன்மையானவைகளேயென்ற உண்மை தோன்றும். அப்போது எது நேர்ந்தாலும் நித்தியானந்தத்தோடு வாழலாம். எமக்குப் பரபரப்பில்லை; கவலையில்லை; ஒருவிதமான மனச்சலனமுமில்லை; ஒரு குறைவுமில்லை; ''என்றுமின்பம் தழைக்க இருக்கலாம்'' (அப்பர் திருவேட்களப்பதிகம்). இறைவனது திருவருளை நாம் சிந்தித்து வருவோமாயின் அது எம்மிற் கலந்து எமது வழியாகப் பிற உயிர்களிற் செல்லும். மலையிலே விழுகின்ற பெருமழை மலையிலிருந்து அருவியாகப் பாய்ந்து பல்லாயிரம் பயிர்களுக்கும் விலங்குகளுக்கும் மனிதருக்கும் சீவாதாரமாவது போல, திருவருள் தம்மைச் சிந்திப்பவர்களிலே பதிய அவர்கள் அந்த அருளைக்கொண்டு பிறவுயிர்களுக்கு நன்மை செய்வர். அருளானது மலையருவிபோலக் கீழ் நோக்கிச் செல்வதன்றி மேல்நோக்கி எழுவதன்று அது தாழ்ந்

தோரிற் செல்லுமன்றி உயர்ந்தோரிற் செல்வதன்று. செல்வர்பால் செல்லாது நோயாளிகள்பாற் செல்வது. சுற்றமித்திரர்பாற் செல்லாது. அல்லார்பாற் செல்வது. இவ்வருளானது இனிய பார்வை, இனிய மொழி, இனிய செயல், இனியஈகை எனப்பலவாறாக இனிமையைவிட்டு நீங்காது பரவிச் செல்லும். எமது தமிழ் நூல்களில் அருளைப்பற்றிக் கூறுவன எல்லையில்லாதன. ஆங்கிலப் புலவர்களுள்ளே "சேக்ஸ்பியர்" என்பவரும் அருள்பெற்றவராதலால் அவனருளைப் பின்வருமாறு துதிக்கின்றனர்.

"In droppeth as the gentle
rain from heaven
Upon the place beneathy it
is twice blest
It blesseth him that gives
and him that takes"

சைவ அநுட்டானங்கள் யாவும் சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்றினுள் அடங்கும். ஒவ்வொரு படியிலும் நிற்போர் அவ்வப் படியிலுள்ள அநுட்டானங்களைச் சிரத்தையோடு நாடோறும் தவறாது செய்து வருவாராயின் அவற்றின் பயனாக ஒரு அநுபவ ஞானமுண்டாகும். அவைகள் முறையே சரியையில் ஞானம், கிரியையில் ஞானம் யோகத்தில் ஞானம், எனப்படும். இந்த ஞானம் கிடைக்குமாயின், சைவவாய்மைகள் நேரே அறியப்படும். அங்ஙனம் அறிபவர் புத்தகப்பூச்சியென்னும் நிலையைக் கடந்து ஏனையோர்க்கு உண்மையான சமய உபதேசஞ்செய்து அவர்களை வாழவைப்பவர்; எவராலும் பெரியோராகக் கொள்ளப்படுவர். அப்படியானவர்கள் இன்னும் சிலர் உளர். இத்தன்மையர் எமது நாட்டிற் பெருகுதல்வேண்டும். இவர்கள் பெருகிவரும் காலமே சைவத்தின் கற்காலமாம்.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.



உ
சிவமயம்

# பேரின்பப் பேறு: அன்பின் முடிந்த நிலை

சைவத் திருவாளர்
— க. வச்சிரவேலு முதலியார், *B.A., L.T.* —

இந்நிலவுலகின் கண்ணே நிலைபெறும் உயிர்ப்பொருள்களில் மக்களே சிறந்தோராவர். அவர்களின் வாழ்க்கைப்பயன் அன்பேயாகும். அன்பு இல்லாதவிடத்து அவர்களின் வாழ்க்கை சிறந்து பயன் கனியாது. இது குறித்தே ஆசிரியர் திருவள்ளுவர் 'அன்போடியைந்த வழக்கென்பஆருயிர்க் கென்போடியைந்த தொடர்பு' எனக் கூறியருளினார். இதன் கண் உயிர் பிறவி எடுப்பதன் பயன் அன்போடியைந்தே தோன்றுவதென்பது புலனாகின்றது.

இத்துணைச் சிறந்த அன்பு யாண்டுளது? அதனை நாம் பெறுமா றெங்கன் என ஆயின், அது சென்று தேட வேண்டிய பொருளன்று. அறிவுடைப் பொருள்களிற் காணப்படும் ஓர் பண்பாக விளங்கும். நாமெல்லாம் அறிவுடைப் பொருள்களாதலின் எம்மிடத்தே அவ்வன் பென்னும் பண்பு நிலைபெற்றிருக்கின்றது. அன்பு ஒரு பண்பாதலின் அஃது ஒன்றினைப் பற்றிக் கொண்டே நிற்கு மியல்பினதாகும்; பண்புடைப் பொருளைப் பண்பியெனச் சொல்லுவார்கள். இங்ஙன் அன்பெனும் பண்பு அறிவுடைப் பொருட்களில் காணப்படும் என்பதை 'அன்பும் அருளும் அறிவுக் கடையாள மென்பர் சிவன் வாக் குணர்ந்தோர்களே' என, மறைஞான சம்பந்தர் அருளுமாற்றால் உணர்க. எனவே, இதனால்

அறிவுடைப் பொருளின்கண் அன்பு எனும் பண்பு உளதென்பதும் அதுவே அறிவுடைமையை விளக்கும் ஓர் அடையாளமாகுமென்பதும் தெளிவாகின்றது. யாம் அன்பைத் தேடிச் சேரவேண்டியவர்கள் அல்லர். எம்மிடத்தே அன்பு பண்பாக விளங்குகின்றது.

இங்ஙன் அன்பெனும் பண்பு எம்மிடத்தே காணப்படுகின்றதெனினும் அது முழுநிலையுடையதன்று. அரும்பிய நிலையிலேயுள்ளது. மற்றித்தகைய அன்பை நாம் வளர்த்துக் கொள்ளல் வேண்டும். அன்பை வளர்த்தல் என்றால் அது எல்லார்க்கும் கைவருவதன்று. திருவருள் நிலையின்கண் நிற்கும் திருவுடையார்க்கே கைவருந்தன்மையது. எனவே அன்பு முழுநிலையெய்துவதாயின் திருவருளினாலேயே எய்துதல் வேண்டும். திருவருளோடு கலவாத அன்பு என்றுங் குறைவுடையதே யாகும். மற்றெதற்காக அன்பை நாம் வளர்த்துக் கோடல் வேண்டுமெனின் இதற்கு விடை திருவள்ளுவப் பெருமான் செப்புகின்றார். இதனை "என்பிலதனை வெயில் போலக் காயுமே அன்பிலதனை யறம்" என்பதனாலுணர்க. இதன் என்பில்லாத உடம்பு ஞாயிற்றின் தெறலாகிய ஆற்றலைத் தாங்காமை போல அன்பில்லாத வுயிர் அற ஆற்றலினால் தெறப்படுமென்பதைக் காண்கின்றோம். இவ்வறவாற்றல் மிக வீறுடையது இதனை மீறவல்லது அருளாற்றலே யாகும். மற்றுச் சடஆற்றல் எனினோ அற ஆற்றலின் முன் தன் நியதியின் வேறுபட்டு விரைவாகவும் தொழிற்படும். 'தெய்வந் தொழாள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை' என்றாற் போல்வன. இனி. அறவாற்றலின் தெறலை வீறி ஒளிரும் அருளாற்றலை அன்பின் முழுநிலைப் பேறாகவே நாமடைதல் வேண்டும். அங்ஙனமடைதற் கேற்ற முறையில் அன்பை நாம் எங்ஙனம் வளர்க்கலாம் என்பதைக் காண்போம்.

## அன்பை வளர்த்தல்

எம்மிடத்துக் காணப்படும் அன்பு, உலகநூற் பொருளாற் பிணிப்புண்டு இடத்தலினால் அதன்கண் நிறைவு காணப்படுவதில்லை. பிணிப்பவிழ்ந்த துணையானே அவ்வன்பு திருவருளின் வழிச்சென்று நிறைவடையும். அறிவுநூற் பொருளுணர்வினாலே அப்பிணிப்பையும் நாம் அவிழ்த்தல் வேண்டும். அறிவுநூற் பொருளுணர்வை, எமக்குள் வாங்குங்கலை என்னென்ன தன்மைகளை உடையதாய் விளங்குமென்பதை "மன முகிழ்த்த சுருள் மலர்விக்குங் கலைபயிலத் தொடங்குவித்தார்" எனச்சேக்கிழார் பெருமான் அருளுறு மாற்றால் உணர்க.

இதன்கண் மனத்தைத் தாமரையாகவும் கலையைச் சுருள் விரித்து அலர்த்தும் ஞாயிறாகவும்,மணத்தை அறிவாகவும் அன்பை தேனியாகவுங் கொள்ளுமாறு கிடக்கின்றது. இது உருவகம். இங்ஙன் அறியாமைப் பிணிப்பை அவிழ்த்து அறிவை அலர்த்தி அன்பைக் கமழச்செயும் சமயக்கலை உணர்வே முழுநிலைபெற்ற இறவாத இன்ப அன்பை எமக்கு வழங்குவதாகும். சமய உணர்ச்சி மக்கட்கின்றியமையாததென்பதை நாகரிகமிலார் முதல் நாகரிகமுடையாரீறான எத்திறத்தார்க்கும் பொதுமையில் நிகழ்தல் கொண்டறியப்படும்.

அவ்வுணர்ச்சியைத் தரும் சமயம் நூல்கள் உயிர்களாகிய நம்முடைய இயல்பையும் நம்மைப்பிணித்து அறியாமை, துன்பம் சிறுமை என்றிவற்றை விளைத்து நிற்கும் தளைகளினியல்பையும், நம்மைப் பாதுகாக்கும் முதல்வன் இயல்பையும் உணர்த்தி எத்துணையும் பெரிய முதல்வன் எத்துணையுஞ் சிறிய எளிய நமக்கெல்லாமிரங்கி எளிவந்து ஓயாது என்றும் உபகரிக்கும் பேரருட்டிறத்தினையும், அவ்வியல்பிற் பல்கோடியின் ஒரு கூறாயினும் உடையவர் பிறரொருவரும் நமக்கில்லாமையையும் இடையறாது சிந்திக்கவைத்து, நம் உள்ளங்களை அறியாமைப் பிணிப்பின் நீக்கி மலர்வித்து, மெய்யுணர்வாகிய மணம் விரிய இன்ப அன்பாகிய தேனை ஊற்றெடுத்துப் பெருகச் செய்வனவாகும். ஆகையினாலன்றோ திருவள்ளுவநாயனார்,

'கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க வதற்குத் தக' — எனவும்,
கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழா ரெனின்'' - எனவும்

வரைந்தும் வலியுறுத்தியும் கூறுவராயினர்!

இனி, உலகத்திலே சமயங்களும் சமய நூல்களும் அவற்றுட் கூறப்படும் பொருள்களும் ஒன்றோடொன்று ஒவ்வாமல் பல திறத்தனவாய் உள்ளனவே! அதற்குக் காரணந்தான் யாதோ?

எனின், உயிர்களுடைய அறிவின் ஏற்றத்தாழ்வு பற்றியுளதாகும் தகுதி வேறுபாடே அதற்குக் காரணம் ஆகும். அறிவு நிரம்ப லின்றித் தாழ்ந்த நிலைக்கண் உள்ள மக்கள் தம்மோடு தொடர்புடைய பொருட்பெற்றிகளை ஆராயப்புகுங்கால், அவர்கள் அறிவு மேற்பட்ட நுண்பொருள்களில் செல்ல மாட்டா மையால் அவற்றின் உண்மையினையும் இயல்புகளையும் உட் கொள்ளாதவர்களாய், மண், புனல், அனல், வளி என்னும் இந்நாற்பொருளும் இவற்றின் கூட்டத்திற் தோன்றும் இவ் வுலகமும் உடம்புமே உள்பொருள் எனக் கொள்வர். அக் கொள் கையினால் உலகாயதமதந் தோன்றுவதாயிற்று. இவ்வாறே அவரின் மேற்பட்ட நிலையிற் சென்றோரால் 'உடம்பிற்கு வேறாக உயிரென ஒன்று உண்டு. அஃது இந்திரியங்களின் வேறானதன்று என இந்திரியான்மவாதமும் அவருக்கு மேற்பட் டவரால் அந்தக்கண ஆன்மவாதமும் என இவ்வாறு பலப்பல வான மதங்களும் பலப்பலவான பொருள் ஆராய்ச்சிகளும் பல திறப்பட்டுத் தோன்றியுள்ளன. எனினும் உண்மையான் நோக்குங்கால் இவற்றுள் ஒன்றே முடிநிலை மெய்ச்சமயமாய்ப் பெறப்படும்; படவே, ஏனையவெல்லாம் பயனற்றன எனக் கழிக் கப்படாமல், உயிர்களின் அறிவு முறையானே வளர்ச்சியெய்தி அம்முடிநிலை மெய்ச்சமயத்தினைச் சென்று பற்றுதற்குரிய படி வழி நிலைகளாய் அமைவன எனக் கொள்ளப்படும். இது திருமுறைகளுள்

''விரிவிலா அறிவினார்கள் வேறொரு சமயஞ் செய்தே
எரிவினாற் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றதாமே''

எனவும்,

''அறிவினான் மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க்கங்கே ஆரருள் புரிந்து''

எனவும்

''பந்தமும் பிரிவும் தெரிபொருட்
பனுவற்படி வழி சென்று சென்றேறி''

எனவும் பெறப்பட்டமையானும்,

சாத்திரத்துள் ''அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொரு ளாய் வேறாங் குறியது வுடைத்தாய வேதாகமங்களின் குறியி றந்தங்கு அறிவினில் அருளான் மன்னி அம்மையோடு அப்பனாகிச்



செறிவொழியாது நின்ற சிவனடி சென்னி வைப்பாய்'' எனத் தெரித்துக்காட்டி வலியுறுத்தப்பட்டமையானும் இனிது விளங்கும்.

இனி எல்லாச் சமயங்களையும் ஒப்பநோக்காது அவற்றுள் ஒன்றையே முடிநிலை மெய்ச்சமயம் என வைத்து ஏனையவற்றை அதனைச் சென்றடைதற்குரிய படிவழிநிலைகள் என்றல் சமயச் பிணக்கினையே உண்டு பண்ணுவதாகலானும், சாத்திரத்தினும்

'யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே
மாதொரு பாகனார்தாம் வருவர்'

எனக் கூறப்படுதலினாலும்

ஓரூர்க்குப் பலவழிகளிலிருத்தல் போல முழுமுதல் பொருளை யடைதற்குரிய நெறிதாம் பல; அவற்றுள் உயர்வு தாழ்வு இல்லை எனக் கொள்ளுதலே பொருத்தமுடைத்து எனின், அது பொருந் தாது; விலையுயர்ந்த செம்மணியினையும் செங்கல்லையும் ஒருங்கே வைத்து ஒப்பக்கருதுவார் யாரும் இல்லையாமாறு போலக் கடவுள் உண்டென்னும் கொள்கையும் அப்பொருளில்லை என்னுங் கொள்கையும், வினையும் வினைப்பயனும் மறுபிறப்பும் உள என் னுங்கொள்கையும் அவைதாம் சில என்னுங் கொள்கையும், இன்னும் இவைபோன்ற மாறுபட்ட கொள்கைகளும் பகுத்துணர் வுடையோரால் ஒரு ஞான்றும் தம்முட் சமப்படுத்து யுணரப்படா. அங்ஙனம் சமப்படுத்திக் கூறின். நல்லதன் நலனும் தீயதன் தீமையும் மக்களான் உணரப்படாமற் போம் உலகிய னிறுத்துப் பொருளினுவென்ற திருவள்ளுவனார் "பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின் அது நோக்கி வாழ்வார் பலர்" என்றருளிய திருக்குறளினையும் அதற்குரை கண்ட பரிமேலழகர் "உயர்ந்தார் நீங்குதல் நோக்கிப் பொது நோக்கை விலக்கி எல்லாரும் விடாது ஒழுகுதல் நோக்கி வரிசை நோக்கை விதித்தார்'' என உரைத்த விளக்கத்தினையும் மெய்ப்பொருளாராய்ச்சி நிலைகளிலும் உய்த் துணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இவ்வருமைத் திருக்குறளின் பொருளைக் கபிலர் என்னும் நல்லிசைப்புலவர் மலையமான் திருமுடிக்காரி என்னும் அரசனுக்கு

"ஒருதிசை யொருவனை யுள்ளி
நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை யறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை யாயின்
பொதுநோக் கொழிமதி புலவர்
மாட்டே"

என விளக்கி, "எரிதிலங்குஞ் சடைமுடி முனிவர் புரிந்து கண்ட பொருள்" எனத் தூக்கி உபதேசித்தமை ஈண்டுச்சிந்தித்தற்குரியது. மேலெடுத்துக்காட்டிய சிவஞான சித்தியின் திருவிருத்தப் பகுதிக்கு அது கருத்தன்று. செய்வார் செய்தியறிந்து பயன்தரவல்லவன் முழுமுதற் கடவுளாகிய பரமசிவன் ஒருவனே" என்பதே அத்திரு விருத்தத்தின் கருத்தாதல் அதனை முழுவதும் பார்க்கின் இனிது விளங்கும். அங்ஙனம் செய்வோர் செய்யும் வழிபாடுகள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு பயனளிப்பவன் ஒருவனேயாயினும், அவற்றைச் செய்வோர் கருத்து வேறுபாடுபற்றிப் பயன்கள் வேறுபடும் எனவே கொள்க.

இங்ஙனம் கூறியவாற்றான், சமயங்களை வரிசையறிந்து நோக்கி அவற்றுள் முடிநிலை மெய்ச்சமயமாய்ப் பெறப்படுவதனை விழுமியதெனவும் ஏனையவற்றைப் படிவழி நிலைகள் எனவும் கொள்ளுதலே காய்தல் உவத்தலின்றி ஆயும் அறிவுடையார் யாவர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாய்ச் சமயப்பிணக்கு நீக்கி மக்களிடை ஒற்றுமையினையும் உண்மை ஞானத்தினையும் வளர்த்தற்குத் தக்க முறையாய் விளங்குவது என்பது பெறப்படும், பிறவாற்றான் சமயங்களுக்கு ஒருமை கூறுவார் கூற்றெல்லாம் வெறும் போலியாய்க் கழிந்தொழியுமன்றிச் செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்லாகா.

இனிச் சமயங்களைப் படிவழி நிலைகள் இவை எனவும், அவற்றை யெல்லாங் கடந்து மேற்சென்ற பக்குவான் மாக்களுக்கு உரியதாய் நிலைபெறும் முடிநிலை மெய்ச்சமயம் இது வெனவும் எங்ஙனம் பகுத்து வரிசை அறிதல்கூடும் எனின், "சமயங்கள் பலதிறப்பட்டமைக்குக் காரணம் உயிர்களுடைய அறிவின் ஏற்றத்தாழ்வு பற்றியுள்ளதாகுந் தகுதி வேறுபாடே" என மேற்கூறிப் போந்தமையின் "பிறவிக்குருடர் பலர் ஒரு வேழத்தின் ஒவ்வோர்



உறுப்பினைக் கையினாற்தடவி யுணர்ந்து அதனை முறம்போல்வதென்றும் உரல்போல்வதென்றும் உலக்கை போல்வதென்றும் மலைபோல்வதென்றும் தம்முள் மாறுகொண்டு ஒருவரையொருவர் மறுத்துரைப்பன வெல்லாம் மெய்யெனவும் படாமல் அறவே பொய்யெனவும் படாமல் கண்ணுடையான் ஒருவன் கண்டுரைக்கும் இயல்பின் ஏகதேசமாய் அடங்குமாறு போலக் கீழ்உள்ள சமயப் பொருள்கள் எல்லாம் முடிநிலை மெய்ச்சமயந் தான் நிறுவப்படும் பொருள்களின் ஏகதேசமாய் அடங்குமாகலின் அங்ஙனம் ஏனைய சமயப் பொருள்களெல்லாம் ஒவ்வோர் ஏகதேசமிலையுபற்றி எழுந்தனவாதலையும், மெய்ப்பொருட்தன்மை வேறாதலையும் உணர்த்தி அவற்றை வரிசை அறிவித்து, அங்ஙனம் அறிவிக்கு முகத்தான் அவற்றின் பொருளெல்லாம், இது ஆகும் அது என்னும் பிணக்கின்றித் தன்னகத்தே அடங்கக் கொண்டு விளங்குவதெந்தச் சமயம் அந்தச் சமயமே முடிநிலை மெய்ச் சமயமாம்; ஏனைய படிவழி நிலைகளாம் என்க.

உண்மையின் தொடர்ச்சியும் முழுநிலையும் பாதுகாக்கப்பட வேண்டின அதன் கூறுகள் எல்லாவற்றையும் (ஏகதேச உண்மைகளாய்ப் போதரும் பொதுவியல்புகளெல்லாவற்றையும்) ஒற்றுமை வேற்றுமை நயமும் வரிசையும் அறிதற் பொருட்டு – மக்களிடைப் பகைமையும் பிளவும் விளைத்தற் கன்று – இங்ஙனம் வரிசையறிந்து முறைப்படுத்தித் தழுவிக் கோடல் வேண்டும் என்பதே தலையாய அறிவினோர்தம் துணிபு ஆகும்,

இவ்வுண்மைகளை அடிப்படையாகக் கொண்டு ஏனைய சமயங்களெல்லாம் புறப்புறம், அகப்புறம், அகம் எனப் பகுக்கப்பட்டுப் படிவழிநிலைகளாய் அமையுமாறும் முடிநிலை மெய்ச் சமயமாய், வேதாகம மிரண்டானும் தலையான சன்மார்க்கம் என முடிக்கப்படுவதாய்க் கீழ் உள்ள மெய்ப்பொருளாராய்ச்சிப் படிவழிநிலைகளை யெல்லாங் கடந்து மேற்செல்லும் பக்குவான் மாக்களுக்கு உரியதாய நிலைபெறுஞ் சமயம் சுத்தாத்துவித சைவசித்தாந்த சமயமேயாமாறும் இனிது விளக்கி ஆகமாந்தமாகிய ஞானபாதப் பொருளொருமை உணர்த்து முகத்தான் உயிர்கள் முழுமுதற் கடவுளைக் கண்டு கலந்து வரம்பிலா இன்பந் துய்த்தற்குரிய[1] திருவருள்நெறியினை அங்கை நெல்லியென இனிதுணருமாறு உபகரிக்குஞ் செந்தமிழ் ஞானநூலே இற்றைக்கு எழுநூறு ஆண்டு

கட்கு முன்னே தமிழ்நாடு செய்த பெருந் தவப்பயனாயத் திரு வவதாரஞ் செய்தருளித் திருவெண்ணெய் நல்லூரின் கண் மெய் யுணர்வின் முற்றுப் பேறுடையராய் எழுந்தருளியிருந்த ஈராட்டைப் பச்சிளங் குழவிப் பருவத்திலேயே சிவனருளால் ஓதாதுணர்ந்து சைவசந்தான பிரதம ஞானகாரணேசுரராய் விளங்கிய ஸ்ரீமந் மெய்கண்டதேவ நாயனார் கட்டளை யிட்டருளிய சிவஞானபோதம் ஆகும்.

## அன்பின் முடிந்தநிலை

இனியிங்ஙன் அன்பின் அறிகுறியாக வீறிநின்று ஒளிரும் அற ஆற்றல் திருவருளின் ஆற்றலிற் கலந்து தன்வீறு அதனுள் அடங்க அமைந்து நிற்கும் இடமே அன்பின் முடிந்தநிலையாகும். இங்ஙனம் அமைந்து ஒளிரும் நிலையில் எவ்வுயிரினும் இறைவனின் அரு ளாற்றல் செறிந்து விளங்கும் செம்மைநிலை புலனாகும். இதனை

"எவ்வுயிரும் நீங்காது உறையுமிறைவனென்
றெவ்வுயிர்க்கு மன்பாயிரு"

எனும் அருட்பாவாலுணர்க. இன்னும் இத்தூய அன்பின் நிலையை

'ஈசனுக் கன்பிலார் அடியவர்க் கன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கு மன்பில்லார்"

எனும் சிவஞான சித்தியார்ப் பாவின் கண் விளக்கப்படுகின்றது. இவ்வடிகட்கு அகலவுரை விரித்த மாதவச் சிவஞானயோகிகள்

"காமுகனொருவன் ஒருவனிதையிடத்து அன்புடையனென்பது அவளொக்கலைக் கண்டுழி நிகழும் அன்பின் அளவு பற்றியே தெரி யப்படுமாகலின் அடியவர்க்கு அன்பில்வழி ஈசனுக்கு அன்புடையார் போலொழுகுதல் நாடக மாத்திரையே பிறிதில்லை என்பார். அடிய்வர்க்கன்பில்லார் ஈசனுக் கன்பில்லாரென்றும் எவ் வுயிர்க்கண்ணுமுளனாகிய ஈசனிடத்து அன்புடையார்க்கே அத் தொடர்பு பற்றி எவ்வுயிர்க்கும் அன்புடைய்ராதல் கூடுமென்பர். ஈசனுக்கன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார் என்னும் இவ்விட ஙகளில் அன்பில்லாதார் தம்முயிர்க்கு உறுதி செய்துகொள்ளுவார் அல்லரென்பார். தமக்கு அன்பில்லா ரென்றுங் கூறினார். அன்பிலா ரெல்லாம் தமக்குரியவர் என்பதிற் தம் என்பது உடம்பை நோக்கியாதலின் அஃது ஈண்டைக்கு முரணாகாமை அறிக. இதன் எதிர்மறை முகத்தால் அடியவர்க்கு அன்புடையாரது பெருமையுங் கண்டு கொள்க என்பது" என உரை விரிக்கு மாற்றானறிக.



மற்று இத்தகைய அன்பின் பெருநிலையைப் பழந்தமிழ் மக்கள் நன்குணர்ந்திருந்தனர், பரிபாடலெனும் பழந்தமிழ் நூலில் காணப்படும் சித்தாந்தச் சிவநெறியின் உயிர்க் கொள்கை ஒன்றை எடுத்துக் காட்டுகின்றேன்.

கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர் களுள் ஒருவரான கடுவனிளவெயினனார் என்பார் முருகப் பிரானை வேண்டுமிடத்து,

"யாம் இரப்பவை பொருளும்
பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளினர்க்குக் கடம்பின் ஒலிதார் ஏரயே"

என வேண்டுவாராயினர்.

அதன் பொருள்; கடம்பினது பூவாற் செய்யப்பட்ட தழைத்த தாரினையுடையோய்! நின்னை யாம் இரப்பவை நுகரப்படும் பொருள்களும் அவற்றை யுளவாக்கும் பொன்னும் அவ்விரண்டா னும் நுகரும் நுகர்ச்சியுமல்ல; எமக்கு வீடு பயக்கும் நின்னரு ளும் அதனை யுண்டாக்க நின்னிடத்து யாம் செய்யும் அன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம்மூன்றுமே என்றபடி.

இனி, இங்ஙனம் வேண்டிய புலவர் தம் ஆழ்ந்த, விழுமிய கருத்து யாது? 'கன்னகன் ஞாலத்தே' பெறவரும் மக்கட்பிறவி பெற்றோர், அப்பிறவியால் அடையற்பாலதாகிய உறுதியை ஓரா தவராய்க் கடவுள் வணக்கம் முதலாகத் தாஞ்செய்யும் முயற்சி யாவும் நீரிற் குமிழிபோன்று தோன்றி மறைவதாய இவ்வுலக வாழ்க்கையின் பொருட்டே செய்வாராகின்றனர். அங்ஙனம் அவர் மெய்வருந்தி முயன்று தொகுத்துக் கொள்வன நுகர்ச்சிப் பொருள்களும் அவற்றையுளவாக்கும் பொன்னுமேயாம். அவை இப்பருவுடம்பு இவ்வுலகில் நடைபெறுங்காறும் ஒருசிலர்க்கு மட்டும் ஒவ்வொருவகையாற் பயன்பட்டு அழிவெய்துவனவே யன்றி, இப்பருவுடம்பு இயங்கலாற்றாது வீழ்ந்தபோதும் தான் அழிதலின்றி நிலைபேறுள்ளதாய், மறுமையிற் செல்லும் அறி வுருவான உயிர்க்குச் சிறிதும் பயன்படுதலில்லை; இவ்வுடம் புள்ள காலத்து ஒரேவழி பயன்றரும்போதும் அப்பயன் குறைந்த அளவினதாய்த் தூய்மையற்றதாய்த் துன்பக்கலப்புடையதா

யுள்ள சிற்றின்ப சிறுபோகமேயாய் முடிகின்றது. இனி, சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் இவ்வைந்துணர்ச்சிகளை மட்டும் உடைய விலங்கினத்தினீங்க, அவ்வைந்துணர்வையே யன்றி, அவற்றின் மேம்பட்டு, அவற்றையெல்லாம் நல்லிது, தீயதிது எனப்பகுத்தறியும் சிறப்பறிவினையும் வாய்க்கப்பெற்ற மக்கட்கு அப்பகுத்துணர்வாற் பெறற்பாலதாயுள்ள அரும் பொருள் ஒன்று உண்டு. அஃது உயிர்களின் அறிவிற்றங்கி நின்று அவற்றினறியாமை வல்லிருளை முறையானே தேய்த்து வருவதாய் அப் பேரின்பத்திற்குக் காரணமாயுள்ள முதல்வன் திருவருளேயாம். அத்திருவருளை எய்துவிப்பது உயிர் அம்முதல்வன் மாட்டுச் செய்யும் உண்மையன்பேயாம். ஆதலின், மக்கள் தம் கடனாவது முதல்வனிடத்து உண்மையன்பு செய்து, அதனால் அவன் திருவருட்பேறு பெற்று இறவாத பேரின்ப நுகர்ச்சியையுடையராதலேயாம்' என்பதே திண்ணிய அறிவின் மாட்சி பெற்ற அந்நல்லிசைப்புலவர் தங் கருத்தாகும்.

எனவே, இதனால் அன்பின் முடிந்தநிலை பேரின்பப் பேறென்பது தெளிவாதல் காண்க. இத்துணைச் சிறந்த தூயவிழுமிய நிலையினால் எம்மை நிறைவிக்கும் அன்பின் இன்றியமையாமையை உணர்ந்து அதனைத் திருவருளிற் தோய்ந்த அறவாற்றலாகப் பெருக்கி அதனால் பேராவியற்கையெனும் பேரின்பப் பேற்றை எய்தும் சிறப்பில் எம்மை ஆற்றுப்படுத்துஞ் சித்தாந்தச் சிவநெறி யாண்டும் பரந்தொளிர்க எனத் திருவருளை வேண்டுவோமாக.

—



உ

சிவமயம்

# உருவ வழிபாடு

— ஸ்ரீமத் இராமகிருஷ்ணானந்த சுவாமிகள் —

ஹிந்துக்களாகிய நம்மைப் பிற மதத்தினர் "விக்கிரக ஆராதனை செய்வோர்' எனக் கூறிப் பரிகாசிக்கின்றனர். வெளிநாட்டார் நமது ஆராதனை முறைகளை உண்மையில் அறியாததே அதற்குக் காரணமாகும். கடவுளை உருவகித்து ஆராதனை செய்தலே உயர்ந்த முறையாகும். ஏனென்றால் அப்போதுதான் மனிதனால் உண்மை அன்பு செய்தல் கூடும், இயற்கையில் கடவுள் கட்டுக்கடங்காத ஓர் பராபர வஸ்துவே. ஆனால் அன்பின் சக்தி அவருக்கு உருவத்தை அளிக்கிறது. உருவம் பெற்ற கடவுள் மனதைக் கவர்ச்சி செய்கிறது. அப்போதுள்ள பக்தியின் பெருக்கும் திண்மையும் மிகவும் அதிகம். உருவற்ற பொருட்கே உருவம் அளிக்க வல்லதென்றால் பக்தியின் பெருமையை என்னென்பது? பிற மதங்கள் கடவுளை மனிதன் நிலைக்கு ஒப்பிட மறுக்கின்றன. அவைகள் கடவுளை மனதிற்கெட்டாத பரம்பொருள் என்றும் சர்வ வல்லமையுள்ளவன் என்றும் சர்வவியாபி எனவும் கூறுகின்றன. ஆனால் சர்வசக்தியுள்ள ஓர் உருவற்ற கடவுள் என்குருவுடன் வரமுடியாது கடவுள் என்ன வேண்டுமானாலும் செய்தல் கூடும். கடவுளின் மாயா சக்தி மட்டற்றது. மாயாசக்தியால் தன்னை எப்படிச் செய்து கொள்ள இஷ்டமோ அப்படிச் செய்து கொள்ள அவனால் முடியும். மாயைக்கு அதிபதி அவனே. தவிர ஆண்டவன் அழிவற்றவன். காலம், கருவி, இடம் இவை கட்கும் மேலானவன். சத்து, சித்து, ஆனந்தம் என்ற மும்மயமான மூலப்பொருட்கும் காரணமானவன்.

எனவே தனது இச்சாசக்தியால் பக்தர்கள் வேண்டிய உருவம் எடுத்துக்கொண்டுவர ஆண்டவனால் முடியும். கடவுளிடம் அழியவல்ல அற்பப் பொருள்களை யாசிப்பது போடித் தன்மையாகும். அப்படிக் கேட்கும் மனமுடைய பக்தர்கள் உண்மை அன்புடையோரல்லர். நமது மூதாதையர்கள் கடவுளிடம் எதையும் கேட்கவில்லை. கோவில்கட்குச் சென்று கடவுளை நோக்கி 'இதைக் கொடு அதைக் கொடு' என்று கேட்டுத் தொழுதால் உண்மைப் பக்தர்களாக ஆவதற்கு ஒரு நாளும் முடியாது. கடவுள் பக்தி ஒன்றே குறிக்கோளாய் இருத்தல் வேண்டும். இந்துக்கள் இதற்கு ஒருவழி கண்டுபிடித்திருக்கிறார்கள். மக்கள் ஆண்டவனை விஷ்ணுவாகவும், சிவனாகவும், இராமனாகவும் தத்தமக்கு எப்படி இஷ்டமோ அப்படி வணங்குகிறார்கள். உண்மையான பக்தியே அவர்களை அப்படி வணங்கச் செய்தது. இப்படி வணங்குவதில் ஒருவித தப்பும் கிடையாது. கடவுளை நமது நண்பனாகவும், ஆண்டானாகவும் கொண்டு வழிபடலாம். அவனுக்கு ஒரு வீடும் கட்டித்தரலாம். அது மட்டுமா? நமது நண்பருக்கோ அல்லது எஜமானருக்கோ அவர்கள் வேண்டிய பொருள்களைத் தருவது போல் கடவுளுக்கும் பலவற்றைத் தரலாம். அவனிடமிருந்து கேட்பதற்குப் பதில் இம்மாதிரி நாமே பலவற்றை அவனுக்குக் கொடுக்க முயல்வதே சிறந்ததாகும். இத்தகைய வழிபாடு உண்மை அன்பால் தோன்றுவது. தன்னலமற்றது. இதுதான் உயர்ந்த பக்தி மார்க்கத்திற்கொண்டு விடுக்க வல்லதாம். இத்தகைய பக்தியால்தான் இந்தியாவில் பலர் முக்தியடைந்திருக்கின்றனர். கௌரங்கர் மற்றும் அவரது சிஷ்யர்கள் பலரும் விக்கிரக ஆராதனை செய்தவர்களே. தென் இந்தியாவில் தோன்றிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் இத்தகைய மார்க்கத்திற் சென்றே ஆண்டவனடியாம் கரையை அடைந்திருக்கின்றனர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் முறையும் இது என்பது சொல்லாமலே நமக்குத் தெரியும். அவர் ஜகன்மாதாவைச் 'சக்தி' என்று வழிபட்டு உயர்ந்த நிலையை அடைந்தார்.

எனவே கோவில்களில் உள்ள விக்கிரகங்கள் எல்லாம் நமது மனத்தைக் குவியச் செய்தற்கும், லயிக்கச் செய்தற்கு மாத்திரம் ஏற்பட்டன. அல்லது விக்கிரகங்கள் மனிதனின் உள்ளக் கவர்ச்சிக்கே ஏற்பட்டனவே எனச் சிலர் கூறலாம். ஆனால் எமது முன்னோர்களின் உயர்ந்த நோக்கமென்னவென்றால்



நம்மிடத்திலுள்ள தன்னலமற்றதாகிய உயர்ந்த பக்தியை உண்டு பண்ணுவதேயாகும். இத்தகைய கோவில் வழிபாட்டை—விக்கிரக ஆராதனையை – மேலான கொள்கையே அல்லவெனச் சொல்வது மூடத்தன்மையேயாகும். உருவம் அற்றவனே எனினும், கடவுள் உருவம் உள்ளவனேயாவான். இந்திரியங்களை உள்ளடக்கிய ஒருவன் ஆண்டவனைத் தன்னுள்ளே கண்டு ஆனந்தித்தல் கூடும். இத்தகைய வழிபாடும் நம் இந்திய நாட்டில்தான் உண்டு என்பதற்காக நாம் பெருமையும் பேசிக்கொள்ளலாம். கண்ணைத் திறந்து உலகத்தை நோக்கின் எங்கும் இறையொளி வீசுவதைக் காணலாம். சூரியசந்திரர்கள் பிரகாசிக்கும் இப்பரந்த ஆகாயமே ஆண்டவனின் கோவிற் கூரை, பூதேவியே அக் கோவிலின் தரையாகும். இவ்வுலகில் வாழும் நாம் அனைவரும் மேற் சொன்ன இயற்கைக் கோயிலில் வதியும் நடமாடுந் தெய்வங்கள். நமது ஹிருதயகமலத்தில் வீற்றிருக்கும் கடவுள் நுண்ணியதினும் மிக நுண்ணிதாயும், பெரிதினும் மிகப் பெரிதாயும் இருக்கின்றான். நம்மிடமிருக்கும் ஆண்டவனை மறந்துவிடுதல் நமக்குச் சாதாரணமாகிவிட்டது. "ஆண்டவன் எங்கும் நிறைந்தவன்" என்பதை நினைப்பூட்டுவதற்காகவே ஆங்காங்கு கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. கோயில்களே பக்தி மார்க்கத்தின் தூண்டு கோல்கள். கோயில்களே மிகப் புனிதமான இடம். பல பக்தர்கள் சென்று வழிபட்டு, முக்தியடைந்த இடம் கோயில்களேயாகும். சர்வவியாபியான ஆண்டவனை எங்கும் காணலாமாதலால் கோவிலிற் கண்டு தரிசித்தல் மிகச் சுலபமேயல்லவா?

உ
சிவமயம்

# கடவுளைக் காட்டும் கண்ணாடி

— மயிலைகிழார் இளமுருகனார் —

கண்ணாடி பயன்மிக்குடைய பொருள்களுள் ஒன்று நமது கண் எல்லாப் பொருள்களையும் பார்க்கும். தன்னையே பார்ப்பதற்கு ஒரு கண்ணாடியின் உதவி தேவை. சில பொருள்களை நேரே பார்க்கமுடியாது. கண்ணாடி மூலம் பார்க்கலாம். சூரியனை நேரே பார்க்கக் கண் கூசும். ஒரு புகைக் கண்ணாடியின் மூலம் சூரியகிரகணத்தன்று அனைவரும்பார்ப்பது நமக்குத் தெரியும். கண்ணுக்குப் புலப்படாத ஆழத்திலுள்ள பொருள்களைச் சில கண்ணாடிகள் மூலம் (Series of Reflecting mirrors) பார்க்கலாம். விண்மீன்களைத் தொலை நோக்காடி (Telescope) மூலமாகவும், அவற்றிலுள்ள பிருதுவி வாயுப்பொருள்களை நிறநோக்காடி Spectroscope) மூலமாகவும் பார்க்கலாம். கிருமிகளைப் பெருநோக்காடி (Microscope) மூலமாகவும், நமது உடம்பிலுள்ள என்பு முதலிய கூறுகளை உண்ணோக்காடி (X-ray tube) மூலமாகவும பார்க்கிறோம். வேறு பற்பல வகையான ஆடி வகைகளுமுண்டு. இவைகளெல்லாம் அசுத்தமாயா புவனத்திலுள்ள பொருள்களைக் காணப் பயன்தருவன. கடவுளைக் காண்பதற்கு இவை உதவி செய்யமாட்டா.

உலக முறையை ஒட்டிக் கடவுள் வழிபாட்டின் உபசாரத்துக்குக் கண்ணாடி காட்டப்படுகிறது. சோடசோபசார தீபாராதனையில் பூர்ணகடதீபம் கற்பூரம் முடிந்தவுடன் அஷ்டமங்கலம் சமர்ப்பித்தல் உண்டு. அவற்றுள் ஒன்று கண்ணாடி காட்டுதல், பள்ளியறையில் கண்ணாடி வைப்பதுண்டு, பெரிய பிரகாரங்களில் எழுந்தருளும் மூர்த்திகளை தரிசிக்க நிலைக்கண்ணாடிகள் வைப்பதுண்டு. திருச்செந்தூரில் ஆறுமுகநாயனார் புறப்பாட்டில் அக்னி மூலையிலுள்ள கண்ணாடியில் தரிசனம் செய்ய நூற்றுக்கணக்கான அடியார்கள் இடித்து நெருங்கிக் கூடுவதுண்டு, இத்தகைய கண்ணாடிகளில் திருவுநவ அலங்கார விசேஷம் முதலியவற்றைக் கண்டின்புறலாம். இவைகட்குக் கடவுளைக் காட்டும் கண்ணாடி என்று உபசாரமாகக் கூறுவதே பொருந்தும்.

கடவுள் விரும்பும் கண்ணாடி ஒன்றுண்டு. அதைத்தான் திருநாவுக்கரசுவாமிகள் திருவாரூர் திருவிருத்தம் ஒன்றில் ( 4. 102.3) அழகாகக் கூறுகிறார், அத்திருவிருத்தம் கீழ்வருமாறு:

பூம்படி மக்கலம் பொற்படி மக்கலம் என்றிவற்றால்
ஆம்படி மக்கலம் ஆகிலும் ஆரூர் இனிதமர்ந்தார்
தாம்படி மக்கலம் வேண்டுவரேல் தமிழ் மாலைகளால்
ஆப்படி மக்கலம் செய்து தொழுதுய் மடநெஞ்சமே.

படிமக்கலம் என்றால் கண்ணாடி. ஆரூரில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் கடவுள் கண்ணாடி வேண்டுமென்பரேல் தமிழ் மாலைகளால் கண்ணாடி செய்து கொடுத்துத் தொழுது உய்யலாம் என்பது அப்பர் சுவாமிகள் கருத்து, எனவே. கடவுள் விரும்பும் கண்ணாடி தமிழ் மாலைகளே என்பதும், தமிழ் மாலைகளில் கடவுளைக் கண்ணாடியிற் காணுமாறு போலே காணலாம் என்பதும் புலப்படுகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த தமிழ் மாலைகள் தேவாரம் திருவாசகம் முதலிய பன்னிரு திருமுறைகளேயாம,

சாதாரணமான கண்ணாடியில் ஒரு பொருளின் எல்லா நிலைகளையும் காண முடியாது. உதாரணமாக, ஓர் விஷயத்தில் திருவடியின் அழகு, செம்மை, குளிர்ச்சி, ஆற்றல் தன்மை முதலிய அனைத்தையும் காண இயலாது. தேவாரமாகிய கண்ணாடியில் இவைகளை ஒருங்கே காணலாம். அழகெழுதலாகாத அருட்சேவடியின் அழகை எந்த ஓவியத்தில் கண்ணாடியிற்காண முடியும்? நனைந்தனைய திருவடியின் குளிர்ச்சியை எக்கண்ணாடியிற் காணலாம்? நீள் விசும்பை ஊடறுத்துகின்ற அடியின்

ஆற்றலைக் கண்ணாடி காட்டுமா? அரை மாத்திரையிலடங்கும் அடி, அகலம் அளக்கிற்பாரில்லா அடியின் நுண்மை பருமைகளை ஒருங்கே எந்தக்கண்ணாடி காட்டும்? உருவிரண்டும் ஒன்றோ டொன்றொவ்வா அடி உருவென்றுணரப்படாத அடியின் தன்மையை எக்கண்ணாடியிற் காண இயலும்? குறைந்தடைந்தார் ஆழாமை காக்கும் அடியின் அருட்டிறத்தைக் கண்ணாடி காட்டுமா? புகலிழந்த குருடரும் தம்மைப் பரவக் கொடு நரகக்குழி நின்று அருள்தருகைகொடுத்து ஏற்றும் ஐயாறன் அடித்தலம் எந்தக் கண்ணாடியில் தனது பேரிரக்கத்தை வெளிப்படுத்தும்? இனித்த முடைய எடுத்த பொற்பாதத்தின் இனிமையை எங்கு காணலாம்? இவையனைத்தையும் ஒருங்கே தேவாரத் தமிழ்மாலைகளிற் காணலாம், திருவடிமுதல் திருமுடிவரையுள்ள எல்லாவற்றையும் தேவாரம் தெளிவாகக் காட்டும். கடவுள் சொரூபநிலை, தடத்தநிலை, இலக்கணம், உயிர்கட்குச் செய்யும் உபகாரம் முதலியன எல்லாவற்றையும் தொலை நோக்காடி, நுண்ணோக்காடி, பெருநோக்காடி, முதலிய பல கருவிகளைக்கொண்டு பிற பொருள்களை விபரமாக அறிவதுபோலத் தேவாரக் கண்ணாடியிற் காணலாம்.

இதனால்தான் அப்பர் சுவாமிகள் ஆரூர் பூனிதமர்ந்தார்க்குத் தமிழ் மாலைகளால் படிமக்கலம் செய்து கொடுத்தார். இவர் தமிழ்மாலைகளை விரும்பிய பரமனும் இவருக்கு "நாவுக்கரசு" என்று பட்டமளித்தான். நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தனுக்கு உலகவர் முன் தாளம் ஈந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளன் ஆயினான். "அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகட்குக் கட்டளையிட்டான். கோவை பாடவைத்து ஏடும் எழுத்தாணியும் கொண்டெழுதினான். சேந்தன் களியுகந்து திருப்பல்லாண்டு பெற்றுத் திருத்தேரையும் ஓடவைத்தான். மூலன் உடலுள் முனியைப் புகுத்தித் திருமந்திரம் ஓதவைத்தான், தாயுமிலி தந்தையிலி தான் தனியனாயினும் காரைக்காற் பேயாரை அம்மையே என்றழைத்தான். பழுத்த முதுதமிழ்ப்புலவன் இசைக்கருவி வரைக்குகையை இடித்து வழிகண்டான். "உலகெலாம்" என்று அடியெடுத்தும் கொடுத்தான்

நாமும் அவன் விரும்பிய தமிழ்மாலைகளை விரும்பி ஓதியுணர்ந்து, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, அவனைத் திருமுறைப் படிமக்கலத்தில் கண்குளிரக் கண்டு தொழுது உய்வோமாக.



உ
சிவமயம்

# கருமமும் கடவுள் வழிபாடும்

— M. P. தியாகராஜன் —

கடவுள் வழிபாட்டில் பெரிதும் ஈடுபட எண்ணுவோர்க்கு ஏனைய கருமங்கள் இடைஞ்சலாகத் தோன்றுகின்றன. கருமம் செய்வதிலேயே மனதை ஈடுபடுத்துவோர் கடவுள் வழிபாட்டைப் புறக்கணிக்கின்றனர். எனவே இவ்விரண்டும் முரண்பட்டதாகவே தோன்றுகின்றன. இம்முரண்பாடு சிலருக்குத் தாம் செய்யும் கர்மத்தில் அதிருப்தியையும் கடவுள் வழிபாட்டில் ஏக்கத்தையும் உண்டாக்குகிறது. குருக்ஷேத்திரத்தில் அர்ஜுனனுக்கு ஏற்பட்ட மனக்குழப்பம் தம் கர்மத்தைச் செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்பதே. பகவான் அவருடைய ஐயத்தை நீக்கி கர்மத்தைச் செய்யவேண்டிய அவசியத்தையும் வழியையும் போதித்துள்ளார். கொங்கண மஹரிஷியின் வரலாறு வாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஒரு தினம் அவர் தவமியற்றுங்கால் தம்மீது எச்சமிட்ட கொக்கைக் கண்ணால் சுட்டெரித்தார். அதேதினம் பிக்ஷைக்குப் போகும் போது, ஒரு பெண்மணி தன் கர்மங்களை முடித்துக்கொண்டு பின்வந்து பிக்ஷயிட்டதற்காக அம்மாதைச் சினங்கொண்டு நோக்கினார். அம்மாது "கொக்கென்று நினைத்தனையோ கொங்கணவா என்று" வினவினாள். அவ்வினா மஹரிஷிக்கு அச்சத்தையும் ஆச்சர்யத்தையும் உண்டாக்கியது. அம்மாதின் ஞானத்திற்குக் காரணம் யாதோ என அம்மஹரிஷி வினவ, அவள் அவரை ஒரு கசாப்புக்கடைக்காரனிடம் அனுப்பினாள். அவன் தன் சுதர்மத்தைச் செய்துகொண்டு ஞானத்தையும் பெற்றிருந்தான்.

இக் கதைகளினின்றும் நாம்பெறக்கிடப்பது என்னவெனில் கர்மம் கடவுள் வழிபாட்டிற்கோ ஞானசாதனைக்கோ முரண் பட்டதன்று என்பதே. ஆன்ம ஒழுக்கத்திற்கு முக்கியமாக வேண்டுவது சித்தசுத்தியென்று அத்வைத நெறி வற்புறுத்து கிறது. சித்தசுத்தி யென்னும் அஸ்திவாரத்தின் மேல்தான் ஞானமாளிகை கட்டப்படவேண்டும். சித்த சுத்தி அடைய வேண்டுமாயின் நல்ல குணமும் நல்லொழுக்கமும் பழகவேண்டும். ஞானத்தைப்பெற தனிமையும் நல்லொழுக்கத்தைப் பழக சமூகமும் தேவையென எமர்ஸனென்னும் ஆங்கிலப் பெரியார் கூறியிருக்கின்றனர். சமூகத்திடை கர்மமின்றியிருத்தல் முடியாது. சமூகச்சேவை முதலிய் கர்மங்களினால் சித்தசுத்தி ஏற்படுவது திண்ணம். ஏற்பட்டபின் கர்மங்கள் தாமாகவே விலகிவிடும். இறைவனை அடையவேண்டுமென்று கர்மங்களை நாம் விலக்க வேண்டுவதில்லை. ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் தாய்க்குத் தர்ப்பணம் செய்கையில் நீர் ஏந்தினால் அவருடைய கை நீர் ஏந்த மறுத்தது. என்றால் அவருடைய சித்தசுத்தி உடலின் மயிர்க் கால்கள் தோறும் பரவிநின்றது என்றே எண்ணவேண்டும்.

அப்படிப்பட்ட தூய்மையை அடையும்வரை எவருக்கும் கர்மம் அவசியம். நம்மை நாம் தூய்மையடைந்தவர்களென்று எண்ணிக் கர்மத்தையும் சமூகத்தையும் புறக்கணிப்போமாயின் தமோகுணவயப்பட்டு அல்லலுற வேண்டியவர்களாவோம். பின் இயற்கை அன்னை நம்மைக் கர்மத்திலீடுபடுத்திவிடுவாள். சித்த சுத்தியை அடைந்த பெரியவர்கள் கூட கர்மம் செய்து தம்மைப் பின்பற்றும் சமூகத்தினருக்குக் குறிக்கோளாயிருக்க வேண்டும் என்று பகவான் கீதையில் உபதேசிக்கிறார்.

கர்மம் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாதது எனக்கண்ட பின் நம் கர்மங்களை எவ்வாறு செய்வது என்பதைப் பற்றிச் சற்று ஆராய்வோம். ஒவ்வொரு கர்மத்திற்கும் ஒரு நோக்கம் உண்டு. ஒரு நோக்கத்தைக் கொண்டுதான் எக்காரியத்தையும் செய்கிறோம். செய்வதில் ஓர் உணர்ச்சியை அடைகிறோம். ஒவ்வொரு காரியமும் ஒரு பயனையும் அளிக்கிறது. எனவே, நோக்கம், உணர்ச்சி, பயன் என்ற இம் மூன்றினாலேதான் ஒவ்வொரு கர்மமும் பாதிக்கப்படுகிறது. நோக்கம் பரந்த நோக்கமாகவும் தெய்வத்தன்மை பொருந்தியதாகவும் இருக்க



வேண்டும். உணர்ச்சி சாந்தமும் அடக்கமும் உடையதாக இருக்கவேண்டும். பயனைப் பொருட்படுத்தாது இறைவன் சங்கல்பம் என விடுத்து பரந்த நோக்கத்துடனும் சாந்தத் துடனும் எக்காரியத்தைச் செய்வோமாயினும் அக்கர்மம் நமக்கு அமைதியையும் ஆனந்தத்தையும் தரும். அவை மூலம் சித்த சுத்தி கிட்டுவது திண்ணம்.

கடவுள் வழிபாட்டைச் சற்று ஆராய்வோம். கடவுளைக் காணுவது மட்டும் நம் முடிவான நோக்கமாக நாம் கொள்ளுதல் கூடாது. இராவணன் கடவுளைக் கண்டு வரம்பெற்றிருந்தும் சாஸ்திரங்களை நன்குணர்ந்திருந்தும் ஏன் இழிச்சொற்களுக் காளாகி அழிய நேர்ந்தது? தன்னுள் பொதிந்து கிடந்த காமக் குரோதாதிகளைக் களைந்து சித்தசுத்தி அடையாமல் தவமி யற்றியதின் பயனே அவனை அம் முடிவுக்காளாக்கியது. எனவே அவரவர்களது தீய சம்ஸ்காரங்களைக் களையும் சாதனா மார்க்கத்தையே அவரவர்கள் கடைப்பிடித்தொழுக வேண்டும். "ஒருவர் அனுபவம் ஒருவர் மனதில் உதியாதே" என்று கூறுவதின் நோக்கம் ஒவ்வொருவருடைய சம்ஸ்கார வேறு பாட்டினையொட்டியே கூறியதாகும். மேலும் சிறிதளவு சாதனையைக் கொண்டு உயரிய நிலையை அடைய எண்ணு வதும் சாத்தியமன்று. வாழ்க்கை வளர்ச்சியின் வயப்பட்ட தாகலின் வாலிபத்தினின்றும் வயோதிகத் தன்மை உடனே அடைந்துவிடமுடியாது, ஆன்ம வளர்ச்சியும் அதுபோன்றதே ஆகும். ஜீவத்தன்மையிலிருந்து சிவத்தன்மையை எளிதில் அடைந்துவிட முடியாது. பொதுவாக நாம் கொள்ளும் சாதனை இறைவனைத் தியானிப்பது. தியானம் என்ற உடன் இறைவனை உருவமாகத் தியானிப்பதா அருவமாகத் தியானிப்பதா என்ற ஐயம் உண்டாகிறது. உடற்பற்றும் உருவப்பற்றும் நமக்கு இருக்கும்வரை கடவுளை உருவமாகவே தியானித்தல் வேண்டும். இறைவன் உருவத்தைத் தியானிக்கும் சமயத்தில் சமாதி எண்ணமோ அல்லது அவ்வுருவம் நம் மனக்கண்ணை விட்டகல வேண்டுமென்ற எண்ணத்தையோ கொள்ளக்கூடாது. தியானம் எவ்வளவு நேரம் பழகவேண்டும் என்ற வினா கடைசியாக எழுகிறது. ஒருமைப்பட்ட தியானம் நீண்டநேரம் கைகூடுவதும் துர்லபம். நீண்டநேரம் தியானத்தில் சிரமப்பட்டு ஈடுபடுவது தீங்கை விளைவிக்கவும் கூடும். ஆகவே அடுத்தடுத்து நித்திரை

விட்டெழுந்த உடன் 5 நிமிஷம் ஸ்நானம் செய்யுமுன் 5 நிமிஷம் உண்ணுமுன் 5 நிமிஷம் ஒரு காரியத்தைத் தொடங்குமுன் 5 நிமிஷம் இவ்வாறாக பலநிமிஷ தியானங்களை ஒரு தினத்தில் கையாளுவோமானால் அந்நாள் முழுதும் அது மன ஒருமைப் பாட்டை அளிப்பதோடு தியான நேரமும் எளிதாக அதிகப்படும். இவ்வாறு தியான மார்க்கத்தைக் கையாளுமுறையில் கடவுள் வழிபாட்டில் ஈடுபட்டு அவரவர்கள் கர்மத்தைத் தெய்வீக நோக்குடனும், அமைதியுடனும் செய்து எல்லாம் அவன் செயலென வாழ்க்கையை நடத்துவது எல்லோருக்கும் நன்மையைப் பயக்கும்.

---

## பத்தியிலிருந்து முத்தி

இன்று இன்பம் என்று நினைப்பது நாளை துன்பமாக மாறி மனதைக் கலக்குகிறது. இன்று துன்பம் என்று மனதைக் கலக்கிய ஒன்று நாளை இன்பமாக மாறிக் குதூகலிக்கச் செய்கின்றது. இந்த நிலையில் தடுமாறும் உயிருக்கு நிலையான இன்பத்தைக் கொடுக்கக் கூடிய ஒன்று பரபக்திதான்.

பக்தியை வளர்க்க வேண்டுமாயின் நம்மை நாமே தயார் செய்து கொள்ள வேண்டும். இதில் நான் யார் என்ற கேள்வி எழுகிறது. நாளிலும் பொழுதிலும் எழும் இக்கேள்வியால் தன்னைத்தான் சிறிது சிறிதாக அறிய முடியும். தன்னைத் தான் சிறிது சிறிதாக அறிய அறியத் திரிகரணசுத்தி (மனம், வாக்கு, காயம்) ஏற்படும். திரிகரணசுத்தி வளரவளர மெய்ஞ்ஞானமும் வளர ஆரம்பிக்கும். மெய்ஞ்ஞானம் வளரவளரத் தனது ஆற்ற லும் வளரத் தொடங்கும்.

திரிகரணசுத்தியும், மெய்ஞ்ஞானமும் பேராற்றலும் வளர வளரக் காரியசித்தி ஏற்படும். காரியசித்தியினால் இன்பம் உண் டாகும். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். என்ற உணர்வு உண்டாகும். இதனால் இன்பமே சூழ்க, எல்லோரும் வாழ்க என்ற உணர்வு ஏற்படும். அவ்வுணர்வில் இது இறைவன் தந்த இன்பம். யாவும் இறைவன் செயல் என்ற உணர்வில் தன்னை இழந்து இறைவனை நம்புவதை விட வேறொன்று மில்லை என்ற ஜீவன் முத்திநிலை ஏற்படும்.



உ

சிவமயம்

# ஜீவன் முக்தன்

— டி. ஆர். ராமநாத சாஸ்திரி —

உலகில் எல்லாமனிதர்களும் அடைய வேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு நிலைகளில் வீடு எனப்ப டும் மோக்ஷம் என்பது கடைசி நிலையாகும். அதை அடைந்தவன் உண்மை அறிவு பெற்றவனாகிறான். அவன் இவ்வுலகிலும், வேறு உலகங்களிலும் ஏற்படக் கூடிய எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபடுகின்றான். எப்பொழுதும் பேரின்பம் நிறைந்தவனாகிறான். பெரிய சிறையாகிய உலகிலிருந்து விடுதலை பெறுகிறான். (மோக்ஷம் – விடுதலை) அந்த நிலையை அடைவது இருவகைப் பட்டது, பலயோகிகள் தவம் முதலிய வழிகளினால் உண்மை அறிவு பெற்று இவ்வுடலை நீக்கி, மறுபிறவி எடுக்காது மோக்ஷ நிலையைப் பெறுகின்றனர். வேறு சிலர் இவ்வுலகில் தாம்பெற்ற மானிட உடலை விட்டுப் பிரிவதற்கு முன்பே அந் நிலையை எய் திடுகின்றனர். அவர் ஜீவன் முக்தர் எனப்படுகின்றனர். (உலகில் வாழ்ந்து கொண்டே விடுதலை பெற்றவர்) ஸ்ரீஸதாசிவப் பிரும்மம், ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்ஸர் முதலிய பெரியோர் இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர் ஆவார்.

இந்த இரண்டாவது பிரிவான ஜீவன் முக்தரின் நிலையை எய்துவதில் ஏழு படிகள் இருக்கின்றன. உண்மை அறிவு பெற்றவன் அவற்றில் முறையே ஏறிச்செல்கிறான்.

1. உலகில் காணப்படும் பொருள்களை நன்கு ஆராய்ந்து, எந்தப் பொருள் அழியக்கூடாதது என்பதைக் கண்டு அழிவுபெற்ற இவ்வுலகில் பிறந்து பெறும் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றாகவேண்டும் என்று உறுதியாக ஏற்படும் விருப்பம் முதற்படியாகும்.

2. பிறகு விடுதலை பெற வழி எங்கே உளது, அதை எவர் எனக்குக் காண்பிக்கக் கூடும்? என்று பன்முறை முயன்று தக்க குருதேவரை நாடி, அவர் உபதேசிக்கும் வேதாந்த நூல்களின் சாரமான வாக்கியங்களைப் பற்றுடன் கேட்பதும் பன்முறை அவற்றை நினைத்துப் பார்ப்பதும் இரண்டாவது படியாகும்.

3. இம்மாதிரிப் பன்முறை நினைத்துப் பார்ப்பதனால் மனதை ஒரே பொருளில் (இலட்சியத்தில்) அசைவற்று நிற்கச் செய்து சூக்ஷ்மமான பரம் பொருளை அறிந்து கொள்ளும் திறமை பெறுவது மூன்றாவது படியாகும்.

4. பிறகு எவ்விதமான ஐயமும் மாறுபாடும் இல்லாமல், பிரம்மமும் தானும் ஒன்றுதான். என்று ஏற்படும் உணர்ச்சி (நிர்விகல்பசமாதி) நான்காவது படியாகும். இந்நிலையை அடைந்தவன்தான் உண்மை ஞானியாகிறான்.

5. இப்படிப் பன்முறை முயன்று உணர்ச்சி (நிர்விகல்ப சமாதியின்) யைப் பெற்றபின்பு மனம் ஒரே ஒழுங்கைப் பெற்று விடுகிறது. ஆதலால் இடைவிடாமல் அந்த உணர்ச்சி (நிர்விகல்பம்) தொடர்ந்து வருவது ஐந்தாவது படியாகும்.

6. பிறகு நிர்விகல்ப உணர்ச்சி என்றும் மாறாமல் நிலைபெற்றுத் தொடர்ந்து வருவது ஆறாவது படியாகும்.

7. எக்காரணத்தாலும் நிர்விகல்ப உணர்ச்சி மாறாமல் இருப்பது ஏழாவது படியாகும்.

சாதாரண உலக வாழ்க்கையில் ஒவ்வொருவருக்கும் மூன்று நிலைகள் இருக்கின்றன. (1) விழிப்பு நிலை, (2) கனவு நிலை (3) தூக்க நிலை. இவற்றை யாரும் எளிதில் அறியக் கூடும். ஜீவன் முக்தனுடைய ஏழு படிகளில் முதல் மூன்று படிகளில் யோகி விழிப்பு நிலையில் இருக்கிறான். அவன் உலகமிருப்பதாக அறிகிறான். அது அழிவு பெற்றது என்று அறிந்து, கடவுள் ஒன்று



தான் அழிவுபெறாத பொருள் என்றும் அறிவதனால் அவை ஜீவன் முக்தனின் விழிப்பு நிலையில் ஏற்படுகின்றன; அப்பொழுது அவன் ஸவிகல்ப சமாதியைத்தான் பெறுகிறான்.

கனவு நிலையில் பொருள்களைக்காண்கிறான்; உண்மை போலத் தோன்றினும் அவை பொய்யென்றும் உணர்ந்து கொள்கிறான். அதைப் போல் நான்காவது நிலையில் தன்னைச் சுற்றியுள்ள உலகைக் கனவிலுள்ள பொருள்களைப் போல் அறிந்து எங்கும் பரவியுள்ள அழியாத பொருளே தான் என்று அறிகிறான். இங்கும் பொய்யான உலகம் இருக்கிறது என்று உணர்ச்சி ஏற்படுவதனால் இது கனவு நிலையாகும்.

தூக்க நிலையில் உலகம் ஒன்று உண்டு என்ற உணர்ச்சியே ஏற்படுவதில்லை, அதைப்போல 5, 6, 7 வது படிகளில் உள்ள யோகி பொய்யாகவோ உண்மையாகவோ உலகம் ஒன்றுண்டு என்ற உணர்ச்சியைப் பெறுவதேயில்லை. இம் மூன்று படிகளில் இருப்பவர்கள் ஜீவன் முக்தர்களிற் சிறந்தவர்களாவர்; இம் மூன்று படிகளிலும் சிறிது வேற்றுமை உண்டு.

ஐந்தாவது படியில் உள்ள யோகி சிற்சில சமயங்களில் சமாதியிலிருந்து விலகி உலகினருடன் பழகுவான். இது தூக்க நிலையாகும். ஆறாவது படியில் உள்ள யோகி பிறருடைய தூண்டுதலினால் சில சமயம் சமாதியிலிருந்து கலைந்து மறுபடியும் சமாதியில் ஆழ்ந்து விடுகிறான். இது அடர்த்தியான தூக்க நிலையாகும். ஏழாவது படியில் உள்ள யோகி தானாகவும், பிறருடைய தூண்டுதல்களினாலும் சமாதி நிலையிலிருந்து நழுவுவதேயில்லை. தான் உலகம், கடவுள், என்ற வேற்றுமை உணர்ச்சியற்றுத் தன் முயற்சி சிறிதும் இன்றியே மெய்ப் பொருள் உருவமாக மாறி விடுகிறான். அவன் உயிர் வாழ்வது எம்பெருமான் திருவருளினால்தான். அவனுடைய வாழ்க்கைக்கு அவசியமான உண்பதும் நீர் பருகுதலும் கூடப் பிறருடைய உதவியினால் நடைபெறுமாறு விட்டுவிடுகிறான். அவன் எங்கும் எப்பொழுதும் மகிழ்ச்சி யுருவமாக விளங்குகிறான். இது மிக்க அடர்த்தியான தூக்க நிலையாகும். பெரியோர்களின் வாழ்க்கைக் குறிப்புகளில் இந்நிலைகளுக்கு உதாரணங்கள் பல இருக்கின்றன.

சிவமயம்

# திருநின்ற செம்மை

— வித்துவான் க. வெள்ளைவாரணர் —

"தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகை முன்பணித்த திருவாளன்" எனச் சேக்கிழாரடிகளாற் போற்றப் பெற்ற சுந்தரமூர்த்தி சுவாமிகள் "திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட திருநாவுக்கரையன்றன் அடியார்க்கும் அடியேன்" எனவரும் அழகிய தொடரால் நாவுக்கரசரை வணங்கிப் போற்றியுள்ளார். அப்பர் பெருமானது அருள் வாழ்க்கையிற் சிறந்து தோன்றும் குறிக்கோள் இது வென்பதனை இத் தொடர் நன்கு விளக்குகின்றது. செம்புலச் செல்வராகிய திருநாவுக்கரசடிகளார் திருநின்ற செம்மையினையே தாம் கொண்டொழுகுதற்குரிய செம்மை நெறியாகக் கொண்டு போற்றிய கோட்பாட்டினர் என்பதனை மேற்காட்டிய தொடரால் நம்பியாரூரர் நன்கு புலப்படுத்தியுள்ளார். இங்ஙனம் திருநாவுக்கரசர் மேற்கொண்டதாகக் குறிக்கப் பெற்ற திருநின்ற செம்மை யின்னதெனக் காண்டல்வேண்டும்.

திருநின்ற செம்மையென்ற தொடரில் திரு என்பது அழகு. செல்வம், திருமகள் என்றற்றொடக்கத்துப் பல பொருட்களையுங் குறித்து வழங்கும் செந்தமிழ்ச் சொல்லாம். ஒரு சொல் ஒரு பொருளையே யன்றிக் கருத்தால் ஒரு சிறிதும் தொடர்பில்லாத வேறு பல பொருள்களை யுணர்த்தல் இயலாது. வேறுபட்ட பல பொருளை உணர்த்தும் நிலையில் எழுத்துருவினால் ஒருசொற்



போலக் காணப்பெறினும் ஒவ்வொரு பொருளை யுணர்த்துந்தோறும் அதனை வெவ்வேறு சொல்லாகவே கோடல்வேண்டும். இவ்வாறன்றி முதற்கண் ஒரு பொருளைக் குறித்து வழங்கியதொரு சொல், பின்னர் அப்பொருளையே யன்றி வழிமுறை வழிமுறையே அதனுடன் நெருங்கிய தொடர்புடையனவாய இனப் பொருள்களையும் ஆகுபெயர் மரபினாற் குறித்து வழங்குதலுமுண்டு. இம்மொழி இயல்பினை உளத்துட் கொண்டு திரு என்னும் சொல்லின் பொருளையும் ஆராய்தல் வேண்டும்.

இச் சொல்லின் பொருள்பற்றித் தொல்காப்பிய மெய்ப்பாட்டியலுரையிலும், திருச்சிற்றம்பலக் கோவையுரையிலும் பேராசிரியர் ஆராய்ந்து வெளியிட்ட கருத்துக்கள் இவண் கருதத்தக்கனவாம். "திருவளர் தாமரை" யெனத் தொடங்கும் திருக்கோவைச் செய்யுள் உரையில் திரு வென்பது "கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமாகிய அழகு" எனப் பொருள் கூறுகின்றார். உலகியற் பொருள்களில் சிறந்ததொரு பொருளை ஒருவன் காண்பதாக வைத்துக் கொள்வோம். இங்ஙனம் கண்டதனை மீளவும் காணவேண்டுமென அவனது உள்ளம் விரும்புகின்றது. இங்ஙனம் காண்பானது உள்ளத்திலே விருப்பத்தை யெழுப்பி நிற்பதோராற்றல் அவனாற் காணப்படும் பொருளிடத்தேயுண்டாகின்றது. அத்தகைய ஆற்றல் பொருளினுடைய உருநலத்தானும் ஒளியானும், இன்ன பிற பண்புகளாலும் கண்டோருள்ளத்தை ஈர்த்து நின்று மேலும் காண விருப்பத்தை எழுப்புகின்றது. இந்நிலையில் இத்தகைய விருப்பத்துடன் கூடி நின்று புலப்படுவது எதுவோ அதுவே பேராசிரியர் கூறுமாறு, கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமாகிய அழகாகும். அவ்வழகே திருவென்ற சொல்லாற் குறிக்கப்படுவதாம். "யாவனொருவன் யாதொரு பொருளைக் கண்டானோ அக்கண்டவற்கு அப்பொருள் மேற் சென்ற விருப்பத்தோடு கூடிய அழகு" எனவும் 'அதன் மேல் அவற்கு விருப்பம் சேறல் அதனில் சிறந்த உருவும் நலனும் ஒளியும் எவ்வகையாலும் பிறிதொன்றிற்கு இல்லாமையால் திரு வென்றது அழகுக்கே பெயராயிற்று" என வரும் தொடர்களால் பேராசிரியர் திருவென்பதன் பொருளைத் தெளிவுபெற விளக்குகின்றார். ஒரு பொருள் கண்டாரால் விரும்பப்படுந் தன்மையாகிய அழகைத் தன்னியல்பால் முன்னரே பெற்றிருப்பினும், அதனைப் பிறர் கண்டு நுகருங்காலத்தே தான் அது விளங்கித்

தோன்றும். திரு என்பது ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பொதுவியல்புடையதாயினும், அவ்வைம்பொறிகளுள்ளும் கண்ணால் நோக்கி நுகரும் நுகர்ச்சி சிறப்புடையதாதல் பற்றித் திரு என்பது கண்டாரால் விரும்பப்படும் தன்மை என்ற அளவில் அமையாது 'கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கம் ஆகிய அழகு' எனத் தெளிவுபடுத்திக் கூறினார் பேராசிரியர், எனவே இதுகாறும் கூறியவாற்றால் கண்டாரால் விரும்பப்படுந் தன்மைநோக்கமாகிய அழகே திரு வென்ற சொல்லால் வழங்கப் பெறுவதென அறிகின்றோம்.

இனி, இத் திருவென்னும் சொல்லினை ஆசிரியர் தொல்காப்பியனார் எப்பொருளில் வழங்கியுள்ளார் என ஆராய்தலும் இன்றியமையாததாம்.

அன்பினால் ஒருவனும் ஒருத்தியும் ஒன்றி வாழ்தற்கு நிலைக்களனாய காதற் பண்புகளை உணர்த்தக் கருதிய தொல்காப்பியனார் ''பிறப்பே குடிமை'' யெனத் தொடங்கும் நூற்பாவில்,

''நிறையே அருளே உணர்வொடு திரு'' என இத் திரு என்னும் பண்பினையும் குறிப்பிட்டுள்ளமை காணலாம். இப்பகுதிக்கு உரைகண்ட பேராசிரியர் ''திரு என்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றுந் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி'' எனவும், ''அது வினையுள்ளுடைமையெனவும் படும்'' எனவும் இச்சொல்லின் பொருளை நன்கு தெரிவித்துள்ளார்.

பொருள்களின் புறத்தே விளங்கித் தோன்றும் புறவழகினும் உயிர்களின் உள்வத்தே கிளர்ந்து தோற்றும் அகமலர்ச்சியாகிய நெஞ்சத்தின் எழிலே இவண் திருவென்னும் சொல்லால் சிறப்பாகக் குறிக்கத்தக்கதாம். உணர்வற்ற உயிரில் பொருள்களின் புறத்தே காணப்படும் பொலிவினும் உணர்வுமிக்க உயிர்களின் உடம்பின் கண்ணே மிளிரும் வனப்பு மிக்க பொலிவுடையதொன்றாம். இப்புறவழக்கினை உரு வென்பர் தொல்லாசிரியர் ''உருவு நிறுத்த காமவாயில்'' (தொல் — மெய்ப் — ) எனவும் ''உருவின் மிக்க தோருடம்பது பெறுதலுமரிதே'' (சீவக)

எனவும் சான்றோர் கூறுதல் காண்க. இங்ஙனம் உயிர்களின் உடம்பின்கண்ணே மிளிர்ந்து புலனாம் மேனியெழில் அவ்வுயிர்களின் பருவநிலை முதலியவற்றுக் கேற்ப, அடிக்கடி மாறுபட்டுத்



திரிவதாதலின் இவ்வழக்கு என்றும் ஒரே நிலையில் குறைவின்றித் திகழ்வதன்றாம். இத்தகைய புறவழகிற்கெல்லாம் ஒருவாற்றாற் காரணமாகிய உயிர்களின் உள்ளத்தே கிளர்ந்து தோற்றும் அக நிகழ்ச்சியாகிய நெஞ்சத்தின் எழிலே எஞ்ஞான்றும் தெளிவுந் திட்பமும் அமைதியுந் தந்து திகழும். ஆதலின் அத்தகைய திருத்தகவிற்றாய் உள்ள நிகழ்ச்சியினையே பண்டையோர் திரு என்ற சொல்லாற் பாராட்டிப் போற்றுவாராயினர்.

''அழகின் செறிவே ஆக்கம் என்ப'' ஆதலின் அழகு என்ற பொருளில் முதற்கண் வழங்கிய திருவென்னுஞ் சொல், அவ்வழகின் வழித்தோன்றிய உள்ளக் கிளர்ச்சியினால் விரும்புவன பெற்று மனந் திருந்தி மகிழ்தல் பற்றி அம்முயற்சியின் பயனாகிய செல்வம் என்னும் பொருளிலும் வழங்கலாயிற்றென அறிகின்றோம். இங்குச் செல்வ மென்றது காரிய நிலையிற் காணப்படும் பொருளுடைமையினையோ, அன்றி அப்பொருளைக் கொண்டு நுகரும் நுகர்ச்சியினையோ குறிக்காமல், அவ்விரண்டிற்குங் காரணமாய் விளங்கும் அகத்தினது தூய எழுச்சியாகிய முயற்சியினையே குறிக்கும் என்பர் அறிஞர். இம்முயற்சியாகிய திருவினை ''வினையுள்ளுடைமை'' என்பர் பேராசிரியர். இதனை 'உடையர் எனப்படுவது ஊக்கம்' எனவும், 'முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' எனவும் ஆசிரியர் திருவள்ளுவனார் உடன்பாடு, எதிர்மறையாகிய இருதிறந்தானும் விளக்கியுள்ளார். ஆதலின் செல்வத்திற்குக் காரணமாய் நின்ற திருந்திய உள்ளத்தின் கிளர்ச்சியே திருவென மதிக்கப்பெறும் என அறிதல்வேண்டும். 'செல்வமென்பது சிந்தையினிறைவே' எனக் குமரகுருபரரும் கூறுதல் காண்க,

திருந்திய வுள்ளத்தின் எழுச்சியான் அமைந்த எழிலும், அவ்வெழிலின் வழித்தோன்றிய முயற்சியால் அமைந்த செல்வமும் என இவ்விரு பொருளையுங் குறித்து வழங்கிய திருவென்னுஞ் சொல், பிற்றை நாளில் ஆக்கத்திற்கும் நிலைக்களனாகிய ஆற்றலைக் கருதிய வழக்காகத் திருமகளையுங் குறித்து வழங்கக் காண்கிறோம், எனினும் திருவென்னுஞ்சொல் வந்தவிடமெல்லாம் அதற்குத் திருமகள் எனப் பொருள் கூறல் பொருந்தாது; ''கோயிலைத் திருக்கோயில் என்றும் கோயில் வாயிலைத் திருவாயில் என்றும் பாதுகையைத் திருவடி நிலையென்றும் வழங்கு

மித் தொடக்கத்தனவெல்லாம் திருமகளை நோக்கி வளர்ந்தன அல்ல, அது கண்டவனுடைய விருப்பத்தாலே எழுந்தது. ஆதலானுந் திருவென்பது அழகு என்றே அறிக" எனப் பேராசிரியர் அறிவுறுத்துகின்றார்.

எனவே, திரு என்பது யாவருள்ளத்தையும் கவரத்தக்க அழகென்னும் பொருளதாய், உயிர்களின் உள்ளத்து உணர்வையும் ஆற்றலையும் ஏனை உலகியற் பொருள்களின் புற அழகினையும் ஆக்கத்தையும் குறித்து உலகவழக்கினும் செய்யுள் வழக்கிலும் ஒப்ப வழங்கும் நன்மொழியாய் மக்களனைவராலும் சமயவேறுபாடின்றித் தாம் மதித்து விரும்பிய நற்பொருளில் இயைத்துப் போற்றத்தக்க நிலையுடைதென உணர்கிறோம்.

மேற்கூறிய திருவென்னும் பொதுமைநிலை அழகு உலகியல் பொருள்களில் விளங்கித் தோன்றுங்கால் அஃது என்றும் ஒரே நிலையில் நிலைத்துத் தோன்றுவதில்லை. நமது சுட்டுணர்வுக்கு விளங்கித்தோன்றும் பொருள்கள் யாவும் அழியுமியல்பினவாதலின் அப்பொருளின்கண் நம் பொறிகளால் அறியப்பெற்ற அழகு எக்காலத்தும் ஒரே நிலைமையில் நிலைபெறுதல் இயலாது. பொறிவாயிலாகக் காண்கின்ற பொருள்கள் அனைத்தும் ஒவ்வொரு காலத்தும் நிலைபேறின்றி அழிந்து மாறுபடுவன என்பர் அறிஞர். என்வே, நம் பொறிவாயிலாகக் காண்கின்ற வனப்பனைத்தும் என்றாவது ஒருநாளில் அழித்துபோம் இயல்பினவே என உணர்தல் வேண்டும். நிலைபேறுடைய உயிர்களின் உள்ளுணர்விற் தோன்றும் திருத்தகவிற்றாகிய உள் நிகழ்ச்சியும் மக்களது சுட்டுணர்வைச் சார்ந்து நிற்றலால், நிலைபேறுடையதன்றாம். சுட்டி உணரத்தக்க உயிர்களின் உள்ளம், எஞ்ஞான்றும் யாண்டும் ஒரே நிலையிலமைந்து தோற்றும் நிலைபேறும், தூய்மையும், நிறைவும் குறைவின்றி நிரம்பப் பெறாமையின் அத்தகைய மாறுதலுடைய உள்ளத்திற் தோன்றிய திருவென்னும் உணர்வும் என்றும் பொன்றாத நிலைபேறுடையதெனச் சொல்லுதற்கு இடமில்லை. ஆகவே மேற்காட்டிய திருவென்னும் ஆக்கம் என்றும் மாறாத நிலைபெறுவதற்கு ஏற்றபொருள் யாது எனப் பண்டைப் பெருமக்கள் ஆராய்வாராயினர். திருவென்பது ஒரு பண்பு அது நிலைபெற வேண்டுமானால் அதற்கு நிலைக்களனாகிய பொருள் என்றும் மாறாத நிலைபேறுடையதாக



இருத்தல் வேண்டும். நேர்மையும் எளிமையும் உடைய பொருளே நிலைபேறுடைய பொருளாகும். இந்நிலைபேற்றினைச் செம்மையெனவும் வழங்குவர். உண்மையும் தூய்மையும் உடையதாகி எஞ்ஞான்றும் விகாரமின்றி ஒரு தன்மைத்தாய் விளங்கும் பொருளியல்பே செம்மையெனப்படும். இம் மூவகை இலக்கணமும் ஒருங்கேயமைந்த நற்பொருளாகிய அறத்தினையும் அவ்வறத்துடன் பிரிப்பின்றி ஒன்றாயுள்ள அறவாழி அந்தணனாகிய இறைவனையும் ஆசிரியர் திருவள்ளுவனார் 'செம்பொருள்' என வழங்குகின்றார். செம்மையுடைய பொருள் செம்பொருள் எனப்படும். செம்மையென்பதனை நடுவுநிலைமை, நேர்மையென்ற பொருளில் தெய்வப் புலவர் வழங்குகின்றார். "சொற்கோட்டமில்லது செப்பம்" "யாழ்கோடு செவ்விது" என வருந் திருக்குறட் சொற்றொடர்களால் இஃதுணரப்படும்.

மெய்யுணர்ந்தார் நெஞ்சிற்கெல்லாம் அறம் நேர்மையுடையதாய் நிலைபெறுதலின், அறத்தினைச் செம்பொருள் என்றார் என்பர். இறைவனாகிய முழுமுதற் பொருள் தனக்குத் தோற்றமும் கேடும் இல்லாமையால் நிலைபேறு உடையதாகியும் தனது நோன்மையால் தன்னையொரு பொருளும் ஊடுருவிக் கலத்தல் இல்லாதபடி செறிந்து திணிந்து நிற்றலால் தூய்மையுடையதாகியும், தான் உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் ஊடுருவிக் கலந்து நிற்றலால் நீக்கமற்ற நிறைவுடையதாகியும், என்றுந் திரிபின்றி ஒரே நிலையில் நிற்றல் பற்றி அதனைச் செம்பொருள் எனக் கூறினர் திருவள்ளுவர் எனப் பரிமேலழகர் தம் உரையில் நன்கு விளக்குகின்றார்.

இங்ஙனம் தெய்வப் புலவர் திருவள்ளுவனாரால் செம்பொருள் எனத் துணிந்துரைக்கப்பெற்ற நற்பொருள் இறைவனாகிய முழுமுதற் பொருளேயென்பதனைத் திருவாதவூரடிகள் "செம்பொருட்டுணிவே" எனவும் "செம்மையேயாய சிவபதம்" எனவும் வரும் மணிமொழிகளால் இனிது விளக்கியருளுதல் காண்க. மாறாத நிலைபேறும் தூய்மையும் நீக்கமற்ற நிறைவும் கொண்ட முழுமுதற் பொருளை ஆதாரமாகக் கொண்டல்லது திரு நிலைபெறுதல் இயலாது. மேற்கூறிய செப்பொருளை ஆதாரமாகக்கொண்டு நிலைத்து நிற்பதெதுவோ அதுவே நிலைபெற்ற திரு எனப்போற்றப்படுவதாம். எல்லா இன்பங்களுக்கும்

மேலதாகிய வீடுபேறென்னும் பேரின்பப் பெருவாழ்வாகிய திருவென்பது செம்பொருளாகிய சிவபிரானது திருவடியினையே ஆதாரமாகக் கொண்டு நிலைத்து நிற்பதென்பார். சேர முனிவராகிய இளங்கோவடிகளும் அப்பெருமானது திருவடியினை "திருநிலைச் சேவடி" யெனச் சிறப்பித்துப் போற்றுகின்றார். திருநிலைச் சேவடி — எல்லாச் செல்வங்களும் நிலைத்து நிற்றற்கு நிலைக்களனாகிய செவ்விய திருவடியென்பது அத்தொடரின் பொருளாகும். என்றும் பொன்றாத திருவுடையான் இறைவன் ஒருவனேயென்பதனைத் "திருவுடையார் சென்றடையாத திருவுடையானை" என ஆளுடைய பிள்ளையாரும், ''திருவேயென் செல்வமே", 'ஏரி நிறைந்தனைய செல்வன் கண்டாய்' என ஆளுடைய அரசும், ''பொன்னுமெய்ப் பொருளும் தருவானைப் போகமுந் திருவும் புணர்ப்பானை'' என ஆளுடையநம்பியும், இவ்வாறே பிற சான்றோரும் தெளிய அருளிச் செய்துள்ளார்கள். எல்லாச் செல்வங்களையும் வரம்பிலின்பத்தையும் முற்றுரிமையாகக் கொண்டு உயிர்கட்கு இத்தகைய திருத்தகவிற்றாகிய தண்ணருள் சுரக்கும் இறைவனைத் திருவாளன் என்ற சொல்லாற் சேக்கிழார் பெருமான் பாராட்டிய திறமும் இவண் நினைத்தற்குரியதாம்.

திருவின் நிலைக்களனாய் விளங்கும் செம்பொருள் ஆகிய முழுமுதற் பொருள் உயிர்க்குயிராய் நின்று அறிவுறுத்திய ஒழுக்க நெறியாகிய செம்மை நெறியொழுகி அம்மெய்ப்பொருளோடொன்றிய செம்புலச் செல்வராகிய உயர்ந்தோர்பாலல்லது திரு நிலைபெறுதலியலாது. அவர்கண் நிலைபெறும் அழியாத் திருவினை அருட்செல்வம் என்பர் பொய்யில் புலவர். நிலைத்தலின்றி இழிந்தார் கண்ணும் பொருந்தும் ஏனைப் பொருட் செல்வம்போலல்லாது என்றும் நிலையுதல் உடையதாய் மெய்யுணர்ந்தார் கண்ணேயே நிலைத்து விளங்கும் இயல்புடையது இத் திருவருளாதலின் இதனையே ''செல்வத்துட் செல்வம்'' என வேண்டினார் திருவள்ளுவர். சமய நிலையில் மட்டுமல்லாமல் ஏனை உலகியல் வாழ்விலும் இவ்வருளென்னும் நிலைபெற்ற செல்வமே வேண்டப்படுவதொன்றாகும். நிலைபெற்ற செல்வமாகச் சான்றோர் மேற்கொண்ட செல்வமாவது தன்னைச் சேர்ந்த உயிர்களின் துன்ப நிலைக்கு அஞ்சி இரங்கியுதவும் அருளுணர்வேயென்பதனை, "நெடிய மொழிதலும் கடியவூர்தலும் — செல்வமன்று. தம் செய்வினைப் பயனே — சான்றோர் செல்வமென்பது சேர்ந்தோர் புன்கணஞ்சும் பண்பின் — மென்கட் செல்வஞ் செல்வமென்பதுவே'' என வரும் நற்றிணைப் பாடலால் இனிது விளங்கும். இவ்வியாத் திருவினைப் பெறுதற்குரிமையுடையார் பொறிவாயிலைந்தவித்தான் அறிவுறுத்திய பொய்தீர் ஒழுக்கநெறியிற் தவறாது ஒழுகும் சான்றோரேயாவர். இத்தகைய செம்மை நெறியிற்பெறும் திருவருள் நலமே செம்மை நலம் எனப்படும். இத்தகைய திருவருள் நலம் செறியப்பெறாதார் சிதடர் என இழித்தொதுக்கப்படுவர். "செம்மை நலமறியாத சிதடரொடுந் திரிவேனை'' என வரும் திருவாசகத் தொடர் கொண்டு இவ்வுண்மை தெளியப்படும்.

இத்தகைய் செம்பொருளுணர்வு வாய்க்கப்பெறாதார் நிலைபெற்ற திருவினரல்லராவர். அவர்தம் வாழ்நாளிற் பேசும் மொழியனைத்தும் பொருளற்றனவாய்ப் பயனின்றி யொழிகின்றன. எல்லாச் செல்வத்திற்கும் நிலைபேறாகிய செம்பொருளின் திருப்பெயரே ஒருவர்க்கு வீயாத்திருவினை வழங்கவல்ல சிறப்பு வாய்ந்ததாம். இவ்வுண்மையை நம்மனோர்க்கு அறிவுறுத்தக் கருதிய தமிழ் வேந்தராகிய அடிகள்,

"சிவனெனு மோசையல்லது அறையோ
உலகில் திருநின்ற செம்மையுளதே
அவனுமோரைய முண்ணி அதளாடையாவது
அதன்மேலொ ராடலரவம்
கவணள வுள்ளவுள்கு கரிகாடுகோயில்
கலனாவதோடு கருதில்
அவனது பெற்றிகண்டு மவனீர்மைகண்டும்
அகனேர்வர் தேவரவரே''

என்ற திருப்பாடலின் முதலடியில் இதனை நன்கு எடுத்துரைத்தருள்கின்றார்.

முழுமுதற் பொருளாகிய இறைவனுக்குரிய திருப்பெயர்களுள் சிறப்புடையதாக விளங்குவது சிவன் என்னுந் திருப்பெயராகும். இது செம்பொருள் என்னும் பொருளதாய் எல்லாத் திருவிற்கும் நிலைக்களனாகிய இறைவனைக் குறித்துநிற்பதாம். அன்றியும் திருவுருவ நிலையில் வைத்து வழிபடுங்கால் செம்மைபெற்ற திரு

மேனியுடையான் என்னும் பொருளில் சிவன் என்னும் திருப்பெயர் ஆன்றோர்களால் ஆளப்படுகின்றது.

"செம்மேனிப்பேராளன் வானோர்பிரான்" என்னும் அம்மையார் வாய்மொழியால் இஃதுணரப்படும்; இவ்வாறு செம்மை நிறமுடையவன் செம்மைப் பண்புடையான் என நிறம்பற்றியும். இறைமைக் குணம் பற்றியும் வழங்கும் சிவன் திருப்பெயரே, உலகியற் சூழலில் அலமருவோர் ஆண்டவனை நோக்கி அறையோ என முறையிட்டு அழைப்பதற்குரிய முறையீட்டொலியாகும். இவ்வழகிய திருப்பெயரன்றிப் பிறபொருள் பற்றிய சொற்கள் துன்புற்றோர் இன்பம் பெற அழைக்கும் முறையீட்டுச் சொற்களாமோ? ஒருநாளும் அவ்வாறாகா என்பார், "சிவனெனும் ஓசையல்லது அசையோ" எனத் திருநாவுக்கரசர் வினவுகின்றார். அறையோ என்னுஞ் சொல் தாழ்ந்தோர் உயர்ந்தோரையழைக்கும் முறையீட்டொலியாக ஆள்ப்படுதலைக், "காண்டலே கருத்தாய் நினைந்திருந்தேன் மனம் புகுந்தாய் கழலடி பூண்டுகொண்டொழிந்தேன் புறம் போயினால் அறையோ" என இறைவனை நோக்கி இப்பெருந்தகையார் முறையிட்டு அழைக்கும் திருப்பாடலாலறியலாம்.

இங்ஙனம் செம்மேனியம்மானாகிய இறைவனை அறைகூவியழைத்தற்குரிய திருப்பெயராகிய சிவன் என்னும் இனிய ஓசையொன்றே உலகில் என்றும் நிலைபெற்ற பெருந்திருவுக்கு நிலைக்களமாகிய செம்பொருளை யுணர்த்துந் திறமுடையது. பிறவோசை அத்திறமுடையன அல்ல என்பார், "சிவனெனும் ஓசையல்லது அறையோ உலகில் திருநின்ற செம்மையுளதே" எனத் தெளிவுபெற அறிவித்தருள்கின்றார்.

"சிவனெனும் நாமந் தனக்கே
யுடையசெம் மேனி எம்மான்
அவனெனை யாட்கொண் டளித்திடு
மாகி லவன்றனை யான்
பவனெனும் நாமம் பிடித்துத்
திரிந்துபன் னாளழைத் தால்
இவனெனைப் பன்னாள் அழைப்பொழி
யானென் றெதிர்ப்படுமே"

என்ற திருப்பாடலிலும் இத்திருப்பெயரின் செம்மையினை அரசர் நன்கு விளக்குகின்றார்.



இங்ஙனம் இறைவன் அருள்பெற்றுச் செம்மை நெறியொழுகி அப்பெருமான் அருளிய அருளற வழிகளைத் தாம் உயிர்களின் பால் வைத்த பேரருளால் உலக மக்களுக்கு உணர்த்தி அவர்களைத் திருவருள் நெறியாகிய செம்மை நெறிக்கட் செலுத்து தலையே குறிக்கோளாகக் கொண்ட திருநாவுக்கரசரடிகளார், தாம்பெற்ற பெருந்திருவினயே ஏனையோரும் பெற்றுமகிழப் பெருந்தொண்டு செய்த வரலாறு உலகறிந்த சிறப்புடையதாம்.

இங்ஙனம் 'திருத்தொண்டின் நெறிவாழ' சிவன் என்னுந் திருப்பெயரே திருநின்ற செம்மை யுடையதெனத் தேர்ந்து அத்திருப்பெயரால் இறைவனை வழிபடும் செம்மை நெறியினை உலகினர்க்கு அறிவுறுத்தருளிய பேரருளாளர் திருநாவுக்கரசராதலின் அவர்தம் 'பெருநாமச் சீர்பரவ' விரும்பிய நம்பியாரூரர் தொண்டர் சீர்பரவத் திருவாய் மலர்ந்தருளிய திருத்தொண்டத்தொகைத் திருப்பதிகத்தில்,

"திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்"

என்ற தொடரால் அப் பெருந்தகையாரைப் பரவிப் போற்றுகின்றார்.

இது காறுங் கூறியவற்றால், திருவாவது இஃதெனவும், அது நிலைபெறுமாறிதுவெனவும், அங்ஙனம் நிலைபெற்ற திருவாதற்கு முழுமுதற் கடவுளாகிய செம்பொருளே நிலைக்களம் எனவும், அத்தகைய முதற்பொருளை வழிபடுதலாகிய செம்மை நெறியொழுகிய உலகின்நலம் வளர்த்த திருத்தொண்டர் திருநாவுக்கரசர் எனவும், இவ்வுண்மை அரசரருளிய திருமுறைகளால் இனிதுணரப்படுமெனவும் இவ்வியல்பினை நன்குணர்ந்தே நம்பியாரூரரும் "திருநின்ற செம்மையே செம்மையாக்கொண்ட திருநாவுக்கரையன்" என அப்பெருந்தகையாரைப் பரவிப் போற்றினரெனவும் ஒருவாறு விளக்கியவாறாம்.

---

உ

சிவமயம்

# திருவாசகம் காட்டும் சீவயாத்திரை

— சித்தாந்தம் —

'திருவாசகம் என்னும் அற்புதத்தனித் திருமுறையைப் பல நிலைகளில் நின்று கண்டு பாராட்டலாம். கன்நெஞ்சையும் கசிவிக்கும் தோத்திரமாகக் காணல் ஒரு நிலை; தெளிந்த உண்மையும் திட்ப அனுபவமும் செறிந்த ஞான சாத்திரமெனக் கண்டு போற்றல் மற்றொரு நிலை; இலக்கியக் கண்ணும் சரித்திரக் கண்ணுங் கொண்டு, காண்பன கண்டுகளித்தல் பிற நிலைகள். இப்போதிங்கு திருவாசகத்திலிருந்து எடுத்துக்காட்ட எண்ணுவது, பாசப்பிணிப்புள்ள பசுவானது பதியினருளால் அப்பிணிப்பினின்றும் படிமுறையில் விடுபட்டு, அவனடி அடைந்து, ஆனந்த நிலை கைவரப்பெற்று, பின்பு அவன் பணியாக உலகிற்கு உபதேசிக்கும் அநுபவ அடுக்கேயாகும். இவ்வாறு நோக்குவார்க்கு, அன்றும் இன்றும் என்றும் ஆன்மாக்கள் மேல்நோக்கிச் சென்று பேரின்பப் பெருவாழ்வெய்தும் அடைவினைப் பொதுவகையிற் புலப்படுத்துதலால், திருவாசகம், தென்னாட்டார்க்குமன்றி எந்நாட்டார்க்கும் எக்காலத்தும் உரிய அரிய அனுபவத் திருமறை என்பது தெளிவாகும். இவ்வரிய நெறியினை ஒரு சிறிய கட்டுரையில் விளங்க எடுத்துரைத்தல் இயலாது. எனினும் ஒரு சிறிதுரைப்பாம்.



உயிர்கள் அநாதியிலேயே ஆணவப் பிணிப்பில் அகப்பட்டிருப்பன. அப்பிணிப்பை அகற்றுதற்காக இறைவன் ஐந்தொழில் புரிகின்றான். அதனால், உயிர்கட்கு அவ்வவற்றின் தேவைக்கேற்ப உடல்களும், கருவிகளும் உலகங்களும், இன்ப துன்ப நுகர்ச்சிகளும் கிடைக்கின்றன. இவ்வுதவிகள் ஒன்றற்கொன்று உயர்ந்த நான்கு அடுக்குகளில் அமைந்துள்ளன. உயிர்கள் இவற்றில் தங்கிப் பெறும் அநுபவங்களை

1) உலோக உலக வாழ்க்கை
2) தாவர உலக வாழ்க்கை
3) விலங்குலக வாழ்க்கை
4) மக்களுலக வாழ்க்கை எனலாம்.

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி
> பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லா அநின்ற இத்தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந் திளைத்தேன்"

என்னும் திருவாசகப் பகுதி இந்நான்கு தரத்திலுள்ள வாழ்க்கைகளையும் மனித நிலைக்கு வேறாயுள்ள பேய்கள், கணங்கள், அசுரர்கள். தேவர்கள், முனிவர்கள் இவர்கள் நிலைகளையும் குறிக்கும். முதன் மூன்று அடுக்குகளிலும் உயிர்கள் தங்கி இயங்குவதன் பயனாக ஆணவ பந்தம் படிப்படியாக ஒரு சிறிது தளரப் பெறுகின்றன. மக்களுலகிற்கு உயர்த்தப்பட்ட பின் உயிர்கட்கு ஒரு புதிய ஆற்றல் விளங்கித் தோற்றுகின்றது. அது தான் ஆறாவதறிவு, மனவுணர்வு. பகுத்தறிவு என்றெல்லாம் பேசப்படுவது. அது, 'நாது யார்?' 'இவ்வுலகின் உண்மை என்ன? "எங்கிருந்து, எதற்காக இங்கு வந்துள்ளேன்?" 'மரணத்தின் பின் எனது நிலை என்ன?", 'உயிர்கட்கும் உலகத்திற்கும் அந்நியமாய் வேறு பொருளுண்டோ?' 'உளதென்னில்' அதன் இயல்பென்ன? அதற்கும் உலகுயிர்கட்கும் தொடர்பென்ன? 'நான் எப்படி வாழ வேண்டும்?' என்பனபோன்ற கேள்விகளை யெல்லாம் கேட்கின்றது! நாளேற நாளேற அடிக்கடியும் அதிக வேகத்துடனும் கேட்கிறது. மக்கள் மனவுணர்வும் பக்குவமும் போதியவளவு முதிர்ச்சியடையாத நிலைமையில் உலகமே பொருளென மதித்து, ஊன் நோக்கும் இன்பமே வேண்டி உழலுகின்றனர். திருவருளின் துணையால்

அவ்வுணர்வு முதிர்ந்த பின் பிராகிருதக் கீழ்நிலையை நினைத்து வருந்துவர்; பதைப்பர்; துடிப்பர் இந்த ஆரம்ப நிலையினைப் பின் வருவன போன்ற திருவாசக அடிகள் விவரிக்கும்.

1) "ஊனில் ஆவியை ஓம்புதற் பொருட்டி(ன்)னும் உண்டுடுத் திருந்தேனே"

2) "என்னாலறியாப் பதம் தந்தாய் யானதறியாதேகெட்டேன்"

3) "சீலமின்றி, நோன்பின்றிச், செறிவேயின்றி, அறிவின்றி, தோலின் பாவைக் கூத்தாட்டாய்க் கழன்று விழுந்து கிடப் பேனை"

4) "இந்திரிய வயமயங்கி இறப்பதற்கே காரணமாய், அந்தரமே திரிந்து போய் அருநரகில் வீழ்வேற்கு"

5. "மாடும் சுற்றமும் மற்றுள போகமும், மங்கையர் தம்மோ டும் கூடியங்குள குணங்களா லேறுண்டு குலாவியே திரி வேனை"

6. சாதி குலம், பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும், ஆதமிலி நாயேனை"

7, முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை"

8. "செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை"

இந்நிலைமையின் புன்மையை உணர்ந்து, மேனெறி எய்து தற்குப் பதைக்கும் உயிர்த் துடிப்பை,

1. "வாழ்கின்றாய், வாழாத நெஞ்சமே"

3. "ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கன்பிலை"

3. ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன், அன்புருகேன்... "

என வரும் பாசுரங்கள் போல்வன புலப்படுத்தும். அங்ஙனமே, திருச்சதகத்தில் 'காருணியத்திரங்கல்' என்னுந் தலைப்பின் கீழுள்ள

1. "தரிக்கிலேன் காயவாழ்க்கை, சங்கரா போற்றி"

2. "போற்றியோ நமச்சிவாய! புயங்கனே! மயங்குகின்றேன்"

3. சங்கரா! போற்றி, மற்றோர் சரணிலேன் போற்றி -...
இங்கிவ் வாழ்வு ஆற்றகில்லேன்! எம்பிரான் இழித்திட்டேனே

4. "வருக என்றென்னை நின்பால், வாங்கிடவேண்டும் போற்றி"

என்னும் திருவாக்குகளும் இதனை யுணர்ந்துவன என்று கொள் ளலாம் போலும்.



பரிபாக காலம் பிறந்து இவ்வாறு இறைவனைக் காணத் துடிக்கும் ஆன்மாவின்பால் இறைவன் திருவருட்சத்தி பதியும்; ஆண்டவனே ஆசாரியனாக எழுந்தருளி வந்து அருள் செய்வான். இதனை,

1. "விமலா! உனக்குக் கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும், நலந்தானிலாத சிறியேற்கு நல்கி, நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி, நாயிற்கடையாய்க் கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!"

2. தன்னே ரில்லோன் தானேயான தன்மை, என்னே ரனையோர் கேட்கவந் தியம்பி, அறைகூவி யாட்கொண்டருளி, மறை யோர் கோலம் காட்டி யருளலும்"

3. "ஈறிலாத நீ எளியை யாகிவந்து, ஒளிசெய் மானுடமாக நோக்கியும்"

4. "......நடக்கும் திருவடி என்றலைமேல் நட்டமையால்

5. "என்னையோர் வார்த்தையுட் படுத்துப்பற்றினாய்"

6 "காயத் துள்ளமு தூற ஊற 'நீ கண்டுகொள்' என்று காட் டிய சேய மாமலர்ச் சேவடி"

என்றெல்லாம் திகழும் திருவாசகத் திருமொழிகளில் உணர லாம்.

ஆன்ம யாத்திரையில் மேற்கொண்டு நிகழ்வனவற்றைக் குறிக்கத் தொடங்குமுன், அழுதடியடைந்த அன்பராகிய நம் பரமாசாரியர் அருளிய பாட்டொன்றினைச் சுட்டிச்செல்வாம். கல்வி என்னும் பல்கடல் கடந்த இப்புலவர் பெருமான்,

"அறிவனே! அமுதே! அடி நாயினேன் அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது! அறிவிலாமை யன்றே கண்ட தாண்டநான் அறிவனோ? அல்லனோ! அருள் ஈசனே!"

என்று வினவுகின்றார். கல்விக் கடலிற் பெரிதும் திளைக் கின், புத்தித் தரங்கம் தெளியாது.

"பத்தித்துறை இழிந்து ஆனந்தவாரி படிவதனால்" தான் இவ்வறிவாராய்ச்சி ஐய அலை அனுபவத்துள் ஒடுங்கி ஓயும் என்பர் அருணகிரிநாதரும்.

1. "கனவிலும் தேவர்க்கரியாய் போற்றி, நனவிலும் நாயேற் கருளினை போற்றி."

லாது ஓடிவிடும். உள்ளொளி உத்தமன் வந்து உளம் புகுந்ததும், ஆசைக்கடலைத் தாண்டியாயிற்று. ஐந்து இந்திரியங்களாகிய பறவைகட்டு இனி இச் சீவனிடம் இரை கிடைக்கப்போவதில்லை. இதைக் கண்டுகொண்ட அப்பறவைகள் கடைசியாக இவனை விட்டு நீங்கின. இக்கருத்துக்களைத் திருவாசகம் செப்புவதைப் பின்வரும் இரண்டு பாசுரங்களினால் உணரலாகும்.

"கள்வன், கடியன், கலதியிவன் என்னாதே, வள்ளல் வரவர வந்தொழிந்தான் என் மனத்தே, உள்ளத் துறுதுயர் ஒன் றொழியா வண்ணமெல்லாம், தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ!"

"உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்து உளம்புகலும் கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே, இரைமாண்ட இந்திரியப்பறவை இரிந்தோட, துரைமாண்ட வாபாடித் தோணோக்கம் ஆடாமோ"

தேவாசையை வளர்த்தால் தான் மூவாசையை முற்றிலும் மூறிக்க முடியும்; வேறு வழியில்லை.

இதன் மேல் ஆன்மாவுக்கு நிலைபேறான ஆனந்தம் கைகூடு கின்றது. சிவமாந் தன்மைப் பெருவாழ்வு சித்திக்கின்றது. இறைவன், "நினைதொறும், காண்டொறும், பேசுந்தொறும், எப்போதும், அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் குனிப்புடையா" னாய் விளங்குகின்றான். "சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கர" னாய், அகத்தும் புறத்தும் அகலாப் பரிவுடன் அமர்ந்து காண்கின்றான்.

இப்படி உளங்குளிர்ந்தபோது, விடுதலை பெற்ற உயிர் உவந்து வந்து பாடும் வாதவூரன்பரும் வழங்குகிறார் ஆனந்தப் பாடலமுதை. கோயில் திருப்பதிகம், அதிசயப்பத்து, கண்டபத்து பிடித்த பத்து, திருவேசறவு, அற்புதப் பத்து, திருப்படையாட்சி, அச்சோப்பதிகம் மூதலிய பகுதிகளில் இவ்வமுதம் நிரம்பியுள்ளது. மூன்று பாடற்பகுதிகள் மட்டுமே எடுத்தரப்படும்:

(1) "தந்ததுன் றன்னை, கொண்டதென் றன்னை, சங்கரா! ஆர்கொலோ சதுரர்? அந்தமொன்றில்லா ஆனந்தம் பெற்றேன், யாதுநீ பெற்றதொன்று என்பால்?"



(2) "ஒப்பிலாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த் திருப் பாதத்து, அப்பன் ஆண்டுதன் அடியரிற் கூட்டிய அதிசயம் கண்டாமே"

(3) "......சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன் எனக் கருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே!"

கோயிற் றிருப்பதிகத்தில் ஏழாம் திருப்பாட்டால் இலகுவது திருவாசகத்தின் இருதய சுலோகம் என்னும் ஈடும் எடுப்புமற்ற உயர் உயிர் அநுபவம். "இன்றெனக்கருளி........" என எழுவது அது. அதன் மாண்பைப் பலகால் அதில் தோய்ந்து நின்றல்லது காணமுடியாது.

இறைவன் திருவருளில் முற்றும் நிலைத்து நிற்கும் முத் தான்மாவுக்கு எல்லாம் சிவமாய்த்தோன்றும்:

"திருப்பெருந் துறையுறை சிவனே! குணங்கள் தாம் இல்லா இன்பமே! உன்னைக் குறுகினேற்கு இனி என்ன குறையே!"

"இறைவனே! நீ என் உடலிடங் கொண்டாய் இனியுன்னை என்னிரக்கேனே"

என்று கூறியபடி, குறைவுணர்ச்சி ஒன்றுமிலாது, மகளிர் விளையாட்டுக்களும், பிறசாதாரண நிகழ்ச்சிகளுங்கூடச் சிவச் செறிவுடைய செழும்பாடல்கட்கு உரியவையாய் விடுகின்றன: திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருக் கோத்தும்பி, திருத்தெள்ளேணம், திருவுந்தியார், திருத்தோ ணோக்கம், அன்னைப்பத்து, குயிற்பத்து, திருப்பள்ளியெழுச்சி, அச்சப்பத்து, சென்னிப்பத்து முதலிய பதிகங்களில் இந்நிலையின் அநுபவ விரிவெல்லாம் விளங்கும்.

பழுத்த செந்நிலையில் பரத்தோடொன்றி இருக்கும் முத்தான்மாவை இறைவன் சில சமயங்களில் உலகர்க்குபதேசஞ் செய்ய உந்துவன். அப்போது அப்பெரியார் வைநயிகர் நிலையி லுள்ள நன்மக்களை நோக்கி, நேரே அறிவுரை, அறவுரை பகர்வர். திருவாசகத்தில் யாத்திரைப் பத்தும் திருப்படை எழுச்சி யும் இங்குக் காணத்தக்கன.

1. 'புகவேண்டா புலன்களில் நீர், புயங்கப் பெருமான்பூங்கழல்கள் மிகவே நினைமின்; மிக்கவெல்லாம் வேண்டா போக விடுமின்கள்'

2. "தாமே தமக்குச் சுற்றமும், தாமே தமக்கு விதிவகையும் யாமார்? ஏமதார்? பாசமார்? என்னமாயம்? இவை போக கோமான் பண்டைத் தொண்டரொடும் அவன்றன் குறிப்பே குறிக்கொண்டு போமாறு அமைமின் பொய்நீக்கிப் புயங்கனாள் வான் பொன்னடிக்கே"

3. அடியாரானீர்! எல்லீரும் அகல விடுமின் விளையாட்டை, கடிசேரடியே வந்தடைந்து கடைக்கொண்டிருமின் திருக்குறிப்பை"

4. "புயங்கனாள் வான் பொன்னடிக்கே நிற்பீர் எல்லாம் தாழாதே நிற்கும் பரிசே ஒருப்படுமின், பிற்பால் நின்று பேழ் கணித்தாற் பெறுதற் கரியன் பெம்மானே"

5. "தொண்டர்காள்! தூசி செல்லீர், பக்தர்காள்! சூழப்போகீர் ஒண்டிறல் யோகிகளே! பேரணி உந்தீர்கள், திண்டிறற் சித்தர்களே! கடைக் கூழை செல்மின்கள். அண்டர் நாடு ஆளுவோம் நாம் அல்லற்படை வாராமே"

இவைகள், இறைவனோடு ஏகனாகி நிற்கும் ஆன்மா இறைவன் பணிநின்று உலக உபகார ஞானத்தொண்டாற்று முண்மையைப் புலப்படுத்தும்.

"ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும் கேட்பான் புகில் அளவில்லை, கிளக்கவேண்டா" என்று எந்தைபிரான் சம்பந்தன் எச்சரித்துள்ளான். சிவனருட்டுணை கொண்டு சிவன் செய்யும் யாத்திரை பொது இயல்பினை வகைப்படுத்தி எண்ணும் போது இவ்வாணையை மறத்தற்கில்லை.



உ

சிவமயம்

# திருமுறை அர்ச்சனை மாலை

## போற்றித் திருத்தாண்டகம்

ஆறாம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
    மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
    ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
    ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி. 1.

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
    பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
    மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புரமூன்று மெய்தாய் போற்றி
    போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி 2.

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
    மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
    உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
    தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி 3.

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கு முடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தி யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 4.

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவியான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5.

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6.

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பரவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ் சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தி யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7.



இமையா துயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத் தணைத்தாய் போற்றி
ஊழியேழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8.

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9.

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலமுடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடிய வன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 10.

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேதமுணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணாரிசையின்சொற் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி, 11.

திருச்சிற்றம்பலம்

உ

சிவமயம்

# போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பொறையுடைய பூமிநீ ரானாய் போற்றி
    பூதப் படையாள் புனிதா போற்றி
நிறையுடைய நெஞ்சின் இடையாய் போற்றி
    நீங்காதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மறையுடைய வேதம் விரித்தாய் போற்றி
    வானோர் வணங்கப் படுவாய் போற்றி
கறையுடைய கண்ட முடையாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி. 1.

முன்பாகி நின்ற முதலே போற்றி
    மூவாத மேனிமுக் கண்ணா போற்றி
அன்பாகி நின்றார்க் கணியாய் போற்றி
    ஆறேறு சென்னிச் சடையாய் போற்றி
என்பாக எங்கும் அணிந்தாய் போற்றி
    என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
கண்பாவி நின்ற கனலே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி 2.

மாலையெழுந்த மதியே போற்றி
    மன்னியென் சிந்தையிருந்தாய் போற்றி
மேலை வினைக ளறுப்பாய் போற்றி
    மேலாடு திங்கள் முடியாய் போற்றி
ஆலைக் கரும்பின் தெளிவே போற்றி
    அடியார்கட் காரமுத மானாய் போற்றி
காலை முளைத்த கதிரே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி 3.



உடலின் வினைக ளறுப்பாய் போற்றி
    ஒள்ளெரி வீசும் பிரானே .போற்றி
படருஞ் சடைமேல் மதியாய் போற்றி
    பல்கணக் கூத்தப் பிரானே போற்றி
சுடரில் திகழ்கின்ற சோதி போற்றி
    தோன்றியென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கடலி லொளியாய முத்தே போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி 4.

மைசேர்ந்த கண்ட முடையாய் போற்றி
    மாலுக்கும் ஓராழி ஈந்தாய் போற்றி
பொய்சேர்ந்த சிந்தை புகாதாய் போற்றி
    போகாதென் னுள்ளத் திருந்தாய் போற்றி
மெய்சேரப் பால் வெண்ணீ றாடி போற்றி
    மிக்கார்க ளேத்தும் விளக்கே போற்றி
கைசேர் அனலேந்தி யாடீ போற்றி
    கயிலை மயிலானே போற்றி போற்றி 5.

ஆறேறு சென்னி முடியாய் போற்றி
    அடியார்கட் காரமு தாய் நின்றாய் போற்றி
நீறேறு மேனியுடையாய் போற்றி
    நீங்கா தென் னுள்ளத் திருந்தாய் போற்றி
கூறேறு மங்கை மழுவா போற்றி
    கொள்ளுங் கிழமை ஏழானாய் போற்றி
காறேறு கண்ட மிடற்றாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி 6.

அண்டமே மூன்று கடந்தாய் போற்றி
    ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
பண்டை வினைக ளறுப்பாய் போற்றி
    பாரோர் விண்ணேத்தப் படுவாய் போற்றி
தொண்டர் பரவு மிடத்தாய் போற்றி
    தொழில்நோக்கி ஆளுஞ் சுடரே போற்றி
கண்டங் கறுக்கவும் வல்லாய் போற்றி
    கயிலை மலையானே போற்றி போற்றி. 7.

பெருகி யலைக்கின்ற ஆறே போற்றி
பேராநோய் பேரவிடுப்பாய் போற்றி
உருகி நினைவார்தம் முள்ளாய் போற்றி
ஊனந் தவிர்க்கும் பிரானே போற்றி
அருகி மிளிர்கின்ற பொன்னே போற்றி
யாரு மிகழப் படாதாய் போற்றி
கருகிப் பொழிந்தோடு நீரே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8.

செய்ய மலர்மேலான் கண்ணன் போற்றி
தேடி யுணராமை நின்றாய் போற்றி
பொய்யாநஞ் சுண்ட பொறையே போற்றி
பொருளாக என்னையாட் கொண்டாய் போற்றி
மெய்யாக ஆனஞ் சுகந்தாய் போற்றி
மிக்கார்க ளேத்துங் குணத்தாய் போற்றி
கையானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9.

மேல்வைத்த வானோர் பெருமான் போற்றி
மேலாடு புரமூன்று மெய்தாய் போற்றி
சீலத்தான் தென்னிலங்கை மன்னன் போற்றிச்
சிலையெடுக்க வாயலறை வைத்தாய் போற்றி
கோலத்தாற் குறைவில்லான் தன்னை யன்று
கொடிதாகக் காய்ந்த குழகா போற்றி
காலத்தாற் காலனையுங் காய்ந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10.

திருச்சிற்றம்பலம்



சிவமயம்

# போற்றித் திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை யறியாமை நின்றாய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்த மணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சு மமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோ லுரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 1.

அதிரா வினைகள் அறுப்பாய் போற்றி
ஆல நிழற்கீழ் அமர்ந்தாய் போற்றி
சதுரா சதுரக் குழையாய் போற்றி
சாம்பர் மெய்பூசுந் தலைவா போற்றி
எதிரா உலக மமைப்பாய் போற்றி
என்றும் மீளா அருள் செய்வாய் போற்றி
கதிரார் கதிருக்கோர் கண்ணே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 2.

செய்யாய் கரியாய் வெளியாய் போற்றி
செல்லாத செல்வமுடையாய் போற்றி
ஐயாய் பெரியாய் சிறியாய் போற்றி
ஆகாச வண்ண முடையாய் போற்றி
வெய்யாய் தணியா யணியாய் போற்றி
வேளாத வேள்வியுடையாய் போற்றி
கையார் தழலார் விடங்கா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 3.

ஆட்சி யுலகையுடையாய் போற்றி
அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிதும் இலாதாய் போற்றி
சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிதும் உடையாய் போற்றி
மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4.

முன்னியா நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனியுடையாய் போற்றி
என்னியாய் எந்தை பிரானே போற்றி
ஏழின் இசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமுந் தந்திரமும் ஆனாய் போற்றி
கன்னியார் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5.

உரியாய உலகினுக் கெல்லாம் போற்றி
உணர்வென்னும் ஊர்வது உடையாய் போற்றி
எரியாய தெய்வச் சுடரே போற்றி
யேசுமா முண்டி யுடையாய் போற்றி
அரியாய் அமரர்கட் கெல்லாம் போற்றி
அறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6.

எண்மேலும் எண்ணம் உடையாய் போற்றி
ஏற்றிய வேறுங் குணத்தாய் போற்றி
பண்மேலே பரவித் திருந்தாய் போற்றி
பண்ணொடியாழ் வீணை பயின்றாய் போற்றி
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய் போற்றி
மேலார் கண் மேலார்கண் மேலாய் போற்றி
கண்மேலுங் கண்ணொன் றுடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 7.



முடியார் சடையின் மதியாய் போற்றி
முழுநீறு சண்ணித்த மூர்த்தி போற்றி
துடியா ரிடையுமையாள் பங்கா போற்றி
சோதித்தார் காணாமை நின்றாய் போற்றி
அடியா ரடிமை அறிவாய் போற்றி
அமரர் பதியாள வைத்தாய் போற்றி
கடியார் புரமூன்றும் எய்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 8.

போற்றிசைத்துன் னடிபரவ நின்றாய் போற்றி
புண்ணியனே நண்ண லரியாய் போற்றி
ஏற்றிசைக்கும் வான் மேல் இருந்தாய் போற்றி
எண்ணா யிரநூறு பேராய் போற்றி
நாற்றிசைக்கும் விளக்காய நாதா போற்றி
நான்முகற்கும் மாற்கும் அறியாய் போற்றி
காற்றிசைக்குந் திசைக்கெல்லாம் வித்தே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9—10

திருச்சிற்றம்பலம்

உ
சிவமயம்

## சிவபுராணம்

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி

# போற்றித் திருவகவல்

திருச்சிற்றம்பலம்

தாயேயாகி வளர்த்தனை போற்றி
மெய்தரு வேதியனாகி வினைகெடக்
கைதர வல்ல கடவுள் போற்றி

ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி
தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக் காரமு தானாய் போற்றி
மூவாநான்மறை முதல்வா போற்றி

சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
மின் ஆர் உருவ விகிர்தா போற்றி
கல்நார் உரித்த கனியே போற்றி
காவாய் கனகக் குன்றே போற்றி
ஆவா என்றனக் கருளாய் போற்றி

படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையும் எந்தாய் போற்றி
ஈச போற்றி இறைவ போற்றி
தேசப் பளிங்கின் திரளே போற்றி
அரசே போற்றி அமுதே போற்றி

விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி

உடையாய் போற்றி உணர்வே போற்றி
கடையேன் அடிமை கண்டாய் போற்றி
ஐயா போற்றி அணுவே போற்றி
சைவா போற்றி தலைவா போற்றி
குறியே போற்றி குணமே போற்றி

நெறியே போற்றி நினைவே போற்றி
வானோர்க் கரிய மருந்தே போற்றி
ஏனோர்க் கெளிய இறைவா போற்றி
மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
ஆழா மேயரு ளரசே போற்றி

தோழா போற்றி துணைவா போற்றி
வாழ்வே போற்றியென் வைப்பே போற்றி
முத்தா போற்றி முதல்வா போற்றி
அத்தா போற்றி அரனே போற்றி
உரையுணர் விறந்த வொருவ போற்றி
விரிகட லுலகின் விளைவே போற்றி



அருமையி லெளிய அழகே போற்றி
கருமுகி லாகிய கண்ணே போற்றி
மன்னிய திருவருள் மலையே போற்றி
என்னையு மொருவ னாக்கி யிருங்கழல்
சென்னியில் வைத்த சேவக போற்றி
தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவிலா ஆனந்த வாரி போற்றி
அழிவதும் ஆவதுங் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மானேர் நோக்கி மணாளா போற்றி
வானகத் தமரர் தாயே போற்றி

பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை யிரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை யொன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவ ருள்ளத் தமுதே போற்றி
கனவிலுந் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற் (கு) அருளினை போற்றி
இடைமரு (து) உறையு மெந்தாய் போற்றி

சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
சீரார் திருவை யாறா போற்றி
அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணார் அமுதக் கடலே போற்றி
ஏகம் பத்துறை யெந்தாய் போற்றி
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி
பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி
குற்றா லத்தெம் கூத்தா போற்றி

கோகழி மேவிய கோவே போற்றி
ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி
பாங்கார் பழனத் தழகா போற்றி
கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
அடைந்தவர்க் கருளு மப்பா போற்றி
இத்தி தன்னின் கீழிரு மூவர்க்
கத்திக் கருளிய வரசே போற்றி
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கு மிறைவா போற்றி

ஏனக் குருளைக் கருளினை போற்றி
மானக் கயிலை மலையாய் போற்றி
அருளிட வேண்டும் அம்மான் போற்றி
இருள்கெட அருளு மிறைவா போற்றி
தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
களங்கொளக் கருத அருளாய் போற்றி
அஞ்சேல் என்றிங் கருளாய் போற்றி
நஞ்சே யமுதா நயந்தாய் போற்றி
அத்தா போற்றி ஐயா போற்றி
நித்தா போற்றி நிமலா போற்றி
பத்தா போற்றி பவனே போற்றி

பெரியாய் போற்றி பிரானே போற்றி
அரியாய் போற்றி அமலா போற்றி
மறையோர் கோல நெறியே போற்றி
முறையோ தரியேன் முதல்வா போற்றி
உறவே போற்றி உயிரே போற்றி
சிறவே போற்றி சிவனே போற்றி
மஞ்சா போற்றி மணாளா போற்றி
பஞ்சே ரடியாள் பங்கா போற்றி
அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி

இலங்கு சுடரெம் மீசா போற்றி
கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
குவைப்பதி மலிந்த கோவே போற்றி
மலைநா டுடைய மன்னே போற்றி
கலையார் அரிகே சரியாய் போற்றி
திருக்கழுக் குன்றில் செல்வா போற்றி
பொருப்பமர் பூவணத் தரனே போற்றி
அருவமும் உருவமு மானாய் போற்றி
மருவிய கருணை மலையே போற்றி
துரியமு மிறந்த சுடரே போற்றி
தெரிவரி தாகிய தெளிவே போற்றி

தோளா முத்தச் சுடரே போற்றி
ஆளா னவர்கட் கன்பா போற்றி
ஆரா அமுதே அருளே போற்றி
பேரா யிரமுடைப் பெம்மான் போற்றி
தாளி அறுகின் தாராய் போற்றி
நீளொ ளியாகிய நிருத்தா போற்றி
சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
சிந்தனைக் கரிய சிவமே போற்றி
மந்திர மாமலை மேயாய் போற்றி



எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
புலிமுலை புல்வாய்க் கருளினை போற்றி
அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
கருங்குரு விக்கன் றருளினை போற்றி
இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
படியுறப் பயின்ற பாவக போற்றி
அடியொடு நடுஈ றானாய் போற்றி
நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமற்
பரகதி பாண்டியற் கருளினை போற்றி

ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
செழுமலர்ச் சிவபுரத் தரசே போற்றி
கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
பிழைப்பு வாய்ப்பொன் றறியா நாயேன்
குழைத்த சொன்மாலை கொண்டருள் போற்றி
புரம்பல எரித்த புராண போற்றி

பரம்பரஞ் சோதிப் பரனே போற்றி
போற்றி போற்றி புயங்கப் பெருமான்
போற்றி போற்றி புராண காரண
போற்றி போற்றி சயசய போற்றி

திருச்சிற்றம்பலம்

## திருச்சதகம்

தரிக்கிலேன் காய வாழ்க்கை சங்கரா போற்றி வான
விருத்தனே போற்றி எங்கள் விடலையே போற்றி யொப்பில்
ஒருத்தனே போற்றி உம்பர் தம்பிரான் போற்றி தில்லை
நிருத்தனே போற்றி எங்கள் நின்மலா போற்றி போற்றி

போற்றி யோ(ம்)நமச் சிவாய புயங்கனே மயங்கு கின்றேன்
போற்றி யோ(ம்)நமச் சிவாய புகலிடம் பிறிதொன் றில்லை
போற்றி யோ(ம்)நமச் சிவாய புறமெனைப் போக்கல்கண்டாய்
போற்றி யோ(ம்)நமச் சிவாய சயசய போற்றி போற்றி

போற்றியென் போலும்பொய்யர் தம்மை ஆட் கொள்ளும்வள்ளல்
போற்றிநின் பாதம்போற்றி நாதனே போற்றி போற்றி
போற்றிநின் கருணை வெள்ளப் புதுமதுப் புவனம்நீர்தீக்
காற்றிய மானன் வானமிருசுடர்க் கடவுளானே

கடவுளே போற்றி யென்னைக் கண்டுகொண்டருளு போற்றி
விடவுளே உருக்கி யென்னை ஆண்டிட வேண்டும் போற்றி
உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி

சங்கரா போற்றி மற்றோர் சரணிலேன் போற்றி கோனப்
பொங்கரா அல்குற்செவ்வாய் வெண்ணகைக் கரியவாட்கண்
மங்கையோர் பங்க போற்றி மால்விடை யூர்தி போற்றி
இங்கிவ்வாழ்வாற்ற கில்லேன் எம்பிரான் இழித்திட்டேனே

இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி
பழித்திலேன் உன்னை என்னை யாளுடைப் பாதம் போற்றி
பிழைத்தவை பொறுக்கையெல்லாம் பெரியவர் கடமை போற்றி
ஒழித்திடிவ் வாழ்வு போற்றி உம்பர்நாட் டெம்பிரானே.

எம்பிரான் போற்றி வானத் தவரவ ரேறு போற்றி
கொம்பர் ஆர் மருங்குல் மங்கை கூறவெண்ணீற போற்றி
செம்பிரான் போற்றி தில்லைத் திருச்சிற்றம் பலவ போற்றி
உம்பரா போற்றி யென்னை யாளுடை யொருவ போற்றி

ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி வானோர்
குருவனே போற்றி எங்கள் கோமளக் கொழுந்து போற்றி
வருகவென் றென்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி
தருகநின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே


போற்றியிப் புவனம் நீர்தீக் காலொடு வான மானாய்
போற்றியெவ்வுயிர்க்கும் தோற்றம் ஆகிநீ தோற்றம் இல்லாய்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாயீ றின்மையானாய்
போற்றி ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

பாடவேண்டும் நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந் துருகி நெக்குநெக்(கு)
ஆடவேண்டும் நான் போற்றி அம்பலத்
தாடும் நின்கழற் போது நாயினேன்
கூடவேண்டும் நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும நான் போற்றி வீடுதந்
தருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே.

திருச்சிற்றம்பலம்



## அமரர் செல்லையா இராமலிங்கம் அவர்களின் வமிசாவழி



# அமரர் திருமதி அருள்நாயகி இராமலிங்கம் அவர்களின் வமிசாவழி

இராமுப்பிள்ளை மகன் செல்லையா + அப்பாப்பிள்ளை மகள் சொர்ணம்மா

- Dr. R. S. தனபாலசுந்தரம் (கொழும்பு) + பாமதி (அமரர்)
  - சுசேத்தா
  - சுமங்களா
  - ஜெயந்தாசுதர்மன்
- அருள்நாயகி
- செல்வநாயகி (அமரர்) + Dr. பாலச்சந்திரன் (கண்டி)
  - சுச்சரீரா
  - சுச்சந்திரா
  - ஜனார்த்தனன்
  - சுரம்யா
  - முரளீதரன்
  - கிரிதரன்
- Dr. பாலசுந்தரம் (கொழும்பு) + இந்திரா
  - விஸ்வஜித்
- கனகேஸ்வரி (கொழும்பு) + இரசரத்தினம்
  - Dr. தமயந்தி
  - சக்திதரன்
  - தயாபரன்
  - Dr. விஜயந்தி
- Dr. இராஜேஸ்வரி (இலண்டன்) + Dr. பத்மானந்தா
  - துஷ்யன்
  - ஹேமன்

(Lines drawn from அருள்நாயகி, Dr. பாலசுந்தரம் and கனகேஸ்வரி:)

- ஜீவநாயகி (அவுஸ்திரேலியா) + விசுவநாதன்
  - சியாமளா
  - பிரியதர்சினி
- Dr. ஞானேஸ்வரி (அவுஸ்திரேலியா) + ஸ்ரீபாலசுப்பிரமணியம்

# அமரர்கள் இராமலிங்கம் + அருள்நாயகி வழித்தோன்றல்கள்

செல்லையா மகன் இராமலிங்கம் — செல்லையா மகள் அருள்நாயகி

| | | | |
|---|---|---|---|
| ↓ | ↓ | ↓ | ↓ |
| சரோஜினி (கணக்காளர்) | மீனலோஜினி | இரஞ்சினி (சட்டத்தரணி) | இராஜினி |
| + | + | + | + |
| ஸ்ரீதரன் (கணக்காளர்) | திருஞானசம்பந்தன் (பொறியியலாளர்) | விஸ்வநாதன் (மாவட்ட நீதிபதி) | குமாரவடிவேல் (பேராசிரியர்) |
| ↓ | ↓ | ↓ | ↓ |
| வருணேஷ் | திருவரங்கஜனனி | ஹம்சாநந்தி | பிரணவன் |
| நரேஷ் | நயனி | | குருபரன் |
| | ஷிவானி | | நிருத்தன் |

# நன்றி

எமது குடும்ப விளக்குகளாய்த் திகழ்ந்த
சட்டத்தரணி
**செல்லையா இராமலிங்கம்**
அவர்களும் அவரது பிரிய
பத்தினியார் திருமதி அருள்நாயகி
இராமலிங்கம் அவர்களும் சுகயீனமுற்
றிருந்த சமயங்களில் பேருதவி புரிந்த
வைத்தியகலாநிதிகள், தாதிகள் மற்றும்
மருத்துவ ஊழியர்களுக்கும்,
உற்றார், உறவினர், நண்பர்
களுக்கும், அமரர்களின்
நீத்தார் கடன்களில்
கலந்து கொண்டவர்
களுக்கும் அனுதாபச் செய்தி
அனுப்பியவர்களுக்கும் பல்வேறு
உதவிகளைச் செய்தவர்களுக்கும் ஆத்ம
சாந்திப் பிரார்த்தனையிற் கலந்து கொண்
டவர்களுக்கும் எமது உளமார்ந்த
நன்றியையும் வணக்கத்தையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதர சகோதரிகள்,
பேரப்பிள்ளைகள்.

14-07-2000

ஏழாலை மஹாத்மா அச்சகம், கந்தர்மடம்.